
# நாடறிந்த பெரியோர்கள்

ஆக்கம்

மரகதா சிவலிங்கம்



அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
([illegible] ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் [illegible] நினைவாக வழங்கப்பட்டது.

அனுப்புனர்
பே. இன்பராசா
தபால் அதிபர்
பண்ணாகம்
சுளிபுரம்.

A. NADARAJAH
TEACHER
98. EMILY AVE
ELMONT 11003
NY. U.S.A.

# நாடறிந்த பெரியோர்கள்

---

**பண்டிதை திருமதி. மரகதா சிவலிங்கம்**

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக

பூபாலசிங்கம் பதிப்பகம்
*202, செட்டியார் தெரு,*
கொழும்பு - *11*

தலைப்பு

'நாடறிந்த பெரியோர்கள்'

ஆக்கம்

பண்டிதை. திருமதி. மரகதா சிவலிங்கம்

பதிப்பு

திருத்திய ஐந்தாம் பதிப்பு ஆகஸ்ட் 2009

முதல் : ஜனவரி 2002

ISBN : 955-9396-17-8

பதிப்புரிமை

ஆசிரியருக்கு

ஓவியம்

N. S. ஞானகுருபரன்

அமைப்பும் அச்சும்

கிறிப்ஸ்

# அணிந்துரை

## (அதிபர், கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி)

**ம**னித வாழ்க்கையின் வழிகாட்டிகளாக நம் முன்னோர் திகழ்ந் துள்ளனர். அவர்கள் ஆன்மிக வழிகாட்டிகளாக, அரசியல் விற்பன்னர்களாக, தத்துவ ஞானிகளாக, உணர்ச்சிக் கவிஞர்களாக, அகிம்ஸாவாதிகளாக, சமயகுரவர்களாக, காலத்தால் அழியாத எல்லா மொழிக்கும் பொதுவான பொய்யா மொழிப் புலவர்களாக வாழ்ந்து இறந்தும் இறவாது மக்கள் நாமங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். அவர்களது வாழ்க்கை முறைகள், எளிமையில் செம்மையாக வாழ்ந்து காட்டிய விதங்கள் மக்களைப் பிரமிக்கச் செய்கின்றன. மக்களையும் வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி செய்தன.

இன்றைய காலகட்ட மக்கள் இத்தகைய அரும்பெரும் பெரியார்களின் வரலாற்று உண்மைகளை அறியாது வாழ்வது மட்டுமல்ல சுயநலமிகளாகவும் மாறிவருகின்றனர். பெரியார் களின் வரலாறுகளை எடுத்துக்கூறும் நூல்களும் அருகி வருகின்றன. இன்றைய காலகட்ட மக்களுக்கு விடிவெள்ளியாக, மக்கள் வாழ்வு நிலைமாறாது நல்வழியில் செல்லக்கூடிய வகையில் இந்நூலை வாசிப்பதன் ஊடாக பெரியார்களின் வரலாற்றை அறிவது மட்டுமன்றி தமது வாழ்க்கையையும் மாற்றியமைக்கக்கூடிய தன்மைகள் ஏற்பட வழிவகுக்கும். இந்நூலை தமிழ் கூறும் நல்லுலகம் வரவேற்று இந்நூலாசிரியை மரகதா சிவலிங்கம் அவர்களை ஊக்குவிப்பதனூடாக இத்தகைய பல நூல்கள் உருவாக ஊன்றுகோலாக, உந்துசக்தியாக இருப்போமாக.

**தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி**
77, Lorensz Road,
Colombo - 04.

ஆ. நடராசா
பண்ணாகம்,
சுளிபுரம்.

# முன்னுரை

## 'நாடறிந்த பெரியோர்கள்'

### வரலாற்றுக் குறிப்புகள்

**மா**ணவர்கள் புலமைசான்ற பெரியோர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அறிந்திருத்தல் அவசியம். மாணவர்கள் தமது சிந்தனைத்திறனை வளர்த்துக்கொள்ளவேண்டும். வாழ்வாங்கு வாழ்ந்து நாட்டிற்குத் தொண்டு புரிந்த பெரியோர்களுடைய வரலாறுகளை, சஞ்சிகைகளைத் தேடி வாசிக்க அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. இதனை மனதிற்கொண்டு, இயன்ற வரை யாமறிந்த பெரியோர்களுடைய வரலாற்றுக் குறிப்புகளை தொகுத்துத் தந்துள்ளேன். தமிழ் வளர்த்த சான்றோர்களை மட்டும் நாம் அறிந்து கொள்வதோடு நில்லாமல் புலமை மிகுந்த மேனாட்டு அறிஞர்கள் ஷேக்ஸ்பியர், பேர்னாட்ஷோ அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளையும் இதனுள் சேர்த்திருக்கிறேன். இவற்றில் குற்றம் களைந்து குணம் கொள்ளுமாறு அறிஞர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்நூல் காலத்துக்கேற்ற வகையில் துணைபுரியும் என எதிர்பார்க்கிறேன். எனது அன்பு வேண்டுகோளை ஏற்று அக மகிழ்வுடன் அணிந்துரை வழங்கிய கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி அதிபர் திரு. தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி அவர்கட்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூலை சிறந்த முறையில் வடிவமைத்து அச்சிட்டு உருவாக்கிய 'கிறிப்ஸ்' நிறுவனத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

மறைந்தும் மறையாது நம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கும் பெரியோர்களுடைய உருவப்படங்களை வரைந்து உதவிய திரு. N. S. ஞானகுருபரன் அவர்கட்கும் எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இந்நூல் வெளிவருவதற்குப் பலவகையிலும் ஆக்கமும் ஊக்கமும் ஆலோசனைகளும் நல்கிய என் குடும்பத்தவர்களுக்கும் அன்புச் சகோதரர்களுக்கும் மற்றும் உதவிகள் பல புரிந்த அன்பர்களுக்கும் எனது உளம் கனிந்த அன்பும் நன்றியும் உரித்தாகுக.

இந்நூலை வெளியிடுவதில் எனக்கு ஆதரவையும் ஆலோசனைகளையும் நல்கிய பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளராகிய திரு. பூ. ஸ்ரீதரசிங் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக. எல்லாவற்றிற்கும் மேலாக என் குலதெய்வங்களாக விளங்கும் திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையாரையும், நல்லூர் முருகனையும் இருகரம் கூப்பி போற்றித் துதித்து வேண்டி நிற்கின்றேன்.


**பண்டிதை திருமதி. மரகதா சிவலிங்கம்**
2 L, அரச தொடர் மாடி,
பம்பலப்பிட்டி.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆறுமுகநாவலர் | 9 |
| சுவாமி விபுலானந்த அடிகள் | 14 |
| பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | 19 |
| நவாலியூர் சோமசுந்தரப்புலவர் | 24 |
| புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை | 29 |
| கலாயோகி ஆனந்த குமாரசுவாமி | 34 |
| பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி | 38 |
| தனிநாயகம் அடிகளார் | 44 |
| சுவாமி ஞானப்பிரகாசர் | 48 |
| சுவாமி விவேகானந்தர் | 52 |
| சுப்பிரமணிய பாரதியார் | 56 |
| கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை | 62 |
| அறிஞர் அண்ணா | 65 |
| கவிக்குயில் சரோஜினிதேவி நாயுடு | 69 |
| மகாத்மா காந்தி | 72 |
| இரவீந்திரநாத் தாகூர் | 76 |
| ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் | 82 |
| அன்னை திரேசா | 88 |
| வீரமா முனிவர் | 92 |
| வில்லியம் ஷேக்ஸ்பியர் | 97 |
| இலக்கியமேதை பேர்னாட்ஷோ | 102 |

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

# ஆறுமுகநாவலர்



**நா**வலர் என்று கூறியவுடன் அது ஆறுமுகநாவலரையே மனக்கண் முன் கொண்டுவரும். அத்துணைச் சிறப்பு வாய்ந்த நாவலர் 1822ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18ஆம் திகதி நல்லூரிற் பிறந்தார். கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியினருக்குப் பிறந்த 11 பிள்ளைகளில் கடைக்குட்டிப் பிள்ளையாகப் பிறந்த இவருக்கு ஆறுமுகம் எனப் பெயரிட்டு அன்பாக வளர்த்து வந்தனர்.

மேலைத்தேய கலாசாரம் நமது கலாசாரத்தில் ஊடுருவிய காலத்தில் நாவலர் பிறந்தார். ஒல்லாந்த, போர்த்துக்கேய, ஆங்கிலேய வல்லரசுகளின் கொடிகள் ஓங்கிப் பறந்த காலம். அவர்கள் தங்களுடைய சமயம், மொழி, நாகரிகம், பழக்க வழக்கம் எல்லாவற்றையும் நம் மக்கள்மீது திணித்து வந்த கால கட்டத்தில் நாவலர் தோன்றி, நம் மக்களிடையே விழிப்புணர்ச் சியை ஏற்படுத்தி, மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க முயன்றார்.

போர்த்துக்கேயர், டச்சுக்காரர் ஆகியவர்களுடைய கலாசாரம் பாரிய தாக்கத்தினை இங்கு ஏற்படுத்தவில்லை. ஆனால் ஆங்கிலே யரது வருகையுடன் மேலைத்தேய கலாசாரத்தை நம்மிடையே புகுத்த அரசும் வழி அமைத்துக் கொடுத்தது. ஆங்கில மொழியைக் கற்க பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. கிறிஸ்தவ மதத்தைத் தழுவ பல ஊக்குவிப்புக்களும் கொடுக்கப்பட்டன. மக்களிடையே எமது கலாசாரத்தைவிட மேலைத்தேய கலாசாரம் சிறந்தது என்ற மனமயக்கத்தையும் தோற்றுவித்தது. இக் கால கட்டத்தில்தான் வரலாற்றுப் புகழ்பெற்ற பழைய இராசதானி யாகிய நல்லூரிலே நாவலர் பிறந்தார்.

நாவலர் இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவண முத்துப்புலவர் ஆகியோரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். இவருக்கு ஒன்பது வயதாக இருக்கும் பொழுது தந்தையார் திடீரென மரணமானார். சிறுவயதிலேயே ஒரு முறை கேட்ட பாடலை மறுநிமிடமே ஒப்புவிக்கும் திறமை நாவலருக்கு இருந்தது. ஆசிரியரிடம் பாடங்கேட்ட இரண்டு நன்னூற் சூத்திரங்கள் இவரது அறிவுப் பசிக்குப் போதாதிருந்தது. தானாகவே ஓர் அமைதியான இடம் தேடி எல்லாவற்றையும் ஆர்வமாகக் கற்றார். மெய்கண்ட சாஸ்திரங்களைத் தேடித்தேடிக் கற்றார்.

இவரது மதிநுட்பத்தைக் கண்ட தமையனார் அப்பொழுது யாழ்ப்பாணத்தில் இருந்த பீற்றர் பெர்சிவல் என்ற கிறிஸ்தவப் பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்க அனுப்பினார். வெகு விரைவி லேயே ஆறுமுகநாவலர் ஆங்கிலத்தைக் கற்றுப் பரீட்சையில்

சித்தியெய்தினார். இதைக் கண்டு வியந்த பாதிரியார் அதே பாடசாலையில் கீழ் வகுப்பிற்கு ஆங்கிலமும், மேல் வகுப்பிற்குத் தமிழும் கற்பிக்கும்படி கேட்டுக்கொண்டார். நாவலர் அவர்கள் வடமொழியிலுள்ள சிவாகமங்களைப் படிப்பதற்காக சமஸ்கிருதத்தையும் கற்றுத் தேர்ச்சியடைந்தார்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை பெற்று விளங்கிய நாவலரைப் பாதிரியார் தமக்கு தமிழ்ப் பண்டிதராக்கி பைபிளை மொழிபெயர்த்துத் தரும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு மாத வேதனமாக 30 ரூபாவும் கொடுத்தார். 12ஆவது வயதிலேயிருந்து 25 வயதுவரை 14 ஆண்டுகள் கிறிஸ்தவ சூழலில் கழிக்க வேண்டியிருந்ததால் நாவலர் மனத்தில் பெரிய தொரு மாற்றம் உண்டாகியது. பாதிரிமார் மக்களை மதமாற்றம் செய்யும் சூழ்ச்சிகளும் அவர்கள் தங்கள் மதத்தைப் பரப்பும் முறைகளுமே இவரது மனமாற்றத்துக்குக் காரணங்களாகும். நாவலர் நினைத்திருந்தால் தனக்கிருந்த செல்வாக்கையும் தான் கற்ற ஆங்கிலக் கல்வி அறிவையும் கொண்டு நல்லதொரு குடும்பத்தில் திருமணம் செய்துகொண்டு மிகுந்த செல்வாக்கோடு வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவரது மனம் சுகபோகங்களைத் துறந்து ஒரு துறவியாக, பிரம்மச்சாரியாக வாழ எண்ணியது. சைவத்துக்கும் தமிழுக்கும் தன் வாழ்நாளை அர்ப்பணிக்க எண்ணினார். சைவ உலகை நல்வழிப்படுத்தல் மிகவும் சிரமமான ஒரு பணியாகும். இருந்தும் நாவலர் தன் ஆத்மீக பலத்தினால் தனியொரு நபராக இருந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். திருமண பந்தத்திலே ஈடுபட்டால் சாதாரண உலகியல் ஆசாபாசங் களிலே ஈடுபட்டு நேரத்தை வீணடிக்க நேரிடும் என்ற காரணத் தினால் நைட்டிகப் பிரமச்சாரியாக இருந்து சமயப்பணி ஆற்றத் தன் நேரத்தை முழுமையாக அர்ப்பணித்தார்.

சைவப் பிள்ளைகளை ஒன்று திரட்டி திண்ணைப்பள்ளியை ஆரம்பித்தார். 1847ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18ஆம் திகதி வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சைவப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். மிஷனரிகள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்கு நூல்களைப் பதிப்பித்து மக்களுக்குக் கல்வி

வசதிகளை அளித்து வந்தனர். நாவலர் அவர்களும் 1848ஆம் ஆண்டு ஆவணி மாதம் வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.

அச்சுக்கூட வசதிகள் இல்லாத காரணத்தால் 1849ஆம் ஆண்டு ஆடி மாதம் அச்சியந்திரம் வாங்கும் பொருட்டு சென்னைக்குச் சென்றார் நாவலர். நாவலரின் பணிகளைக் கேள்விப்பட்ட திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு **'நாவலர்'** என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது. சென்னையில் ஓர் அச்சகத்தை நிறுவி நூல்களை வெளியிட்டார். யாழ்ப்பாணத்திலும் ஓர் அச்சுக் கூடத்தை நிறுவி நாவலர் அவர்களே பல நூல்களை எழுதிப் பதிப்பித்தார். ஐம்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த நாவலர் 59 நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார். 'இலங்கைப் பூமிசாத்திரம்', 'பாலபாடம்', 'சைவ வினாவிடை - நான்கு பாகங்கள்', 'இலக்கணக்கொத்து', 'சைவசமயசாரம்', 'பெரியபுராண வசனம்', 'திருவிளையாடற் புராண வசனம்', 'கந்தபுராண வசனம்', 'தனிப்பாமாலை', 'நீதி நூல்கள்', 'ஆலய தரிசனவிதி' ஆகிய நூல்களை அவர் எழுதிப் பதிப்பித்தமை சிறப்பானதாகும். நாவலர் பதிப்பு என்றாலே அதற்குத் தனியொரு மதிப்பு உண்டாகும்படி பிழையறப் பதிப்பித்தார். யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமன்றி இந்திய மக்களுக்கும் வழிகாட்டியாக நாவலர் விளங்கினார். 'பெரிய புராணம்', 'திருவிளையாடற் புராணம்' ஆகிய நூல்களை வசனநடையில் எழுதி **'வசனநடை கைவந்த வல்லாளர்'** என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். தொடர்ந்து 32 ஆண்டுகள் சமயப் பிரசங்கம் செய்து சைவத்தின் பெருமையினை உலகுணரச் செய்தார்.

'கடவுள் வாழ்த்து', 'சிவபக்தி', 'யாக்கை நிலையாமை', 'கல்வியின் சிறப்பு', 'மகளிர் ஒழுக்கம்', 'பசு காத்தல்', 'கொல்லாமை', 'பேதமை' முதலான தலைப்புக்களில் இவர் பிரசங்கம் செய்து சமயத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்தார்.

19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்களுள் நாவலரே முதன்மையானவராக

விளங்குகிறார். பௌத்த, இஸ்லாமிய கலாசார மறுமலர்ச்சிகள் இதன் பின்னரே ஏற்பட்டன.

தமிழிற் சிறந்த வசனநடையின் மூலகர்த்தா நாவலரே. நாவலர் தமது கண்டன வாதங்கள், பிரசுரங்கள், பிரசங்கங்கள் மூலமாக அக்கால மக்களை விழிப்படையச் செய்தார். நாவலர் மேற் கொண்ட 'கஞ்சித் தொட்டித் தர்மம்' -நாட்டு மக்களிடம் அவர் கொண்ட ஈடுபாட்டை விளக்குகின்றது. நாவலரின் பெருமையை நன்கறிந்த இலங்கையரசு அரச தேசிய வீரர் வரிசையில் நாவலரையும் சேர்த்து அவர் பெயரில் முத்திரையும் வெளியிட்டு அவரைக் கௌரவித்துள்ளது.


நாவலர் கடைசியாக 1879ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தில் பிரசங்கம் செய்தார். அன்று அவர் எடுத்துக்கொண்ட பொருள் 'பொன்னும் மெய்ப் பொருளும் தருவானை' என்ற தேவாரமாகும். அன்றைய பிரசங்கத்தைக் கேட்டுக் கண்ணீர் விடாதவர் எவருமிலர். மொழிப் புலமையும், சொல் வன்மையும், நற்சிந்தனையும், தெய்வ பக்தியும் நிறைந்த நாவலர் அவர்கள் 1879ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 21ஆம் திகதி சிவபதமடைந்தார். இவர் மறைந்த செய்தியறிந்த சி.வை. தாமோதரனார்,

**'நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்**
**சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்**
**ஏத்துபுராண ஆகமங்களெங்கே பிரசங்கமெங்கே**
**ஆத்தனறிவெங்கே அறை!'**

என்று நாவலர் அவர்களின் புகழைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

❋ ❋ ❋

# சுவாமி விபுலானந்த அடிகள்



**மீ**ன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்புப் பட்டணத் திற்குத் தெற்கே உள்ள காரையம்பதியில் 1892ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29ஆம் திகதி சுவாமி விபுலானந்தர் பிறந்தார். இவர் தந்தையார் சாமித்தம்பி. தாயார் கண்ணம்மை.

நெய்தலும் மருதமும் நிறைந்த, சைவமும் தமிழும் தழைத் தோங்கும் காரைதீவில் கோயில் கொண்டுள்ள கண்ணகையம்மன்

மீது அளவிலா பக்தி கொண்டவர். இவரது இயற்பெயர் மயில்வாகனன் என்பதாகும். பெற்றோர் இவரைத் தம்பிப்பிள்ளை என்று செல்லமாக அழைத்தனர். இவருக்கு அமிர்தவல்லி, மரகதவல்லி என இரு சகோதரிகளும் இருந்தனர். இவர் தமது ஏட்டுக்கல்வியை நல்லரெத்தினம் என்பவரிடம் கற்றார். பின்னர் ஆரம்பக் கல்வியை காரைதீவு தமிழ் வித்தியாலயத்தில் குஞ்சித்தம்பி ஆசிரியரிடம் கற்றார். 'திருக்குறள்', 'பாரதம்', 'நன்னூல்', 'சூடாமணி', 'நிகண்டு', வடமொழி என்பவற்றைக் காரைதீவு வைத்திலிங்க தேசிகரிடம் கற்றார். மேற்கொண்டு 'அஸ்வமேத பர்வதம்', 'பெரியபுராண வசனம்', 'பஞ்சதந்திரம்', 'விநோதரச மஞ்சரி', 'வில்லிபாரதம்', 'நைடதம்', 'கந்தபுராணம்' முதலிய நூல்களை சிவகுருநாதபிள்ளை, வசந்தராசப்பிள்ளை என்போரிடத்தில் கற்றார். 1902ஆம் ஆண்டு தமது 10ஆவது வயதில் கல்முனை மெதடிஸ்ட் கல்லூரியில் 4 ஆண்டுகள் ஆங்கிலம் கற்றார். 1906ஆம் ஆண்டு மட்டக்களப்பிலுள்ள சென். மைக்கல் கல்லூரியில் வண. பொனேல் சுவாமியாரிடம் கணிதமும் விஞ்ஞானமும் கற்றார். தமது 16ஆம் வயதில் கேம்பிறிச் சீனியர் சித்தியடைந்து அப்பாடசாலையிலேயே ஆசிரியராக நியமனம் பெற்றார்.

இளமை தொட்டு தாயாரோடு கண்ணகையம்மன் கோயிலுக்குச் சென்று வணங்கும்பொழுது திருவிழாக் காலங்களில் அங்கு படிக்கப்படும் சிலப்பதிகாரப் பாடல்களில் மனதைப் பறிகொடுத்தார். இக்காலத்தில் தாயார் சிவபதமடைந்தார். அன்னையின் மறைவின் சோகம் அவரைத் தாக்கியதால் கல்முனை வெஸ்லி கல்லூரியிலேயே ஆசிரியராகக் கடமைபுரியத் தொடங்கினார். அதனால் தினமும் வீட்டுக்குச் சென்று தந்தை சகோதரிகளுடன் வாழ்ந்து வந்தார். அத்துடன் சிலப்பதிகாரத்தை நன்கு கற்று அதில் உரை காணப்படாத பகுதிகளுக்கு உரை காணும் முயற்சியிலும் ஈடுபட்டார். அத்தோடு மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் முதன்மைத் தேர்ச்சியடைந்து பண்டிதர் பட்டமும் பெற்றார். 1915ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் பொறியியற் கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று 1916ஆம் ஆண்டு விஞ்ஞானத்தில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார்.

இவர் யாழ்ப்பாணம் சென்று சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியரானார். பின் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலத்தில் அதிபராகக் கடமையாற்றினார். மேலும் பிறர் உதவியின்றித் தாமாகவே முயன்று படித்து இலண்டன் பல்கலைக் கழகம் நடத்திய பி.எஸ்.ஸி. தேர்வில் வெற்றி பெற்றார். எத்தகைய பணிகள் இருந்தாலும் இரவில் இரண்டு மணித்தியாலங்கள் படிப்பது என்ற நியதியைக் கைக்கொண்டு அதன்படியே ஒழுகியும் வந்தார். 1920 ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றார். அங்கு சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் தமது தமிழ் அறிவை விருத்திசெய்தார். 'ஆரிய திராவிட பாஷா விருத்திச்சங்கம்' என்றொரு சங்கத்தை அமைத்தார்.

1922 ஆம் ஆண்டு துறவு வாழ்வில் ஆர்வம் ஏற்பட்டு சென்னை மயிலாப்பூரில் இருந்த இராமகிருஷ்ண மிஷனில் சேர்ந்தார். இராமகிருஷ்ண மடத்துத் தலைவர் சுவாமி சிவானந்தரிடம் பிரம்மச்சாரி அபிஷேகம் பெற்று 'பிரபோத சைதன்யர்' என்னும் தீட்சா நாமமும் பெற்றார். அங்கு 'இராம கிருஷ்ண விஜயம்' என்ற தமிழ்ச் சஞ்சிகைக்கும் 'வேதாந்த கேசரி' என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராக இருந்து பல அரிய கட்டுரைகள் எழுதினார். அத்தோடு 'செந்தமிழ்' என்னும் பத்திரிகைக்கும் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். 'யாழ் நூல்' ஆராய்ச்சி சம்பந்தமாகவும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார்.

ஆச்சிரம வாழ்க்கை முடிந்து **சுவாமி விபுலானந்தர்** என்னும் குருப் பட்டம் பெற்றார். குருவாக அபிஷேகம் செய்தவர் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் நேர்ச்சீடர்களில் ஒருவரான சுவாமி சிவானந்தராவர். கல்லடி உப்போடையில் தாம் அமைத்த ஆங்கில பாடசாலைக்கு சிவானந்த வித்தியாலயம் என நாமம் சூட்டியது இவரது ஞாபகார்த்தமாகவே. இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து முதல் பேராசிரியராவர். இலங்கை பல்கலைக்கழகத் திற்கும் சுவாமி விபுலானந்தரே முத்தமிழ் பேராசிரியராக இருந்தார். இந்தப் பல்கலைக்கழக நூல் நிலையங்கள் சுவாமி அவர்களின் யாழ் நூலாராய்ச்சிக்குப் பெரிதும் உதவின.

1924ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவில் 'நாடகத் தமிழ்' என்ற உரையினைச் சங்கச் செயலாளராக இருந்த டி.சி. சீனிவாஸ ஐயங்காரின் வேண்டுகோளுக்கிணங்க 'மதங்க சூளாமணி' என்ற நூலாக எழுதினார்.

சுவாமியவர்கள் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளுக்கு முகாமையாளராகவும், திருகோணமலை இந்துக் கல்லூரிக்கு அதிபராகவும் கடமை புரிந்த காலத்தில் காரைதீவில் சாரதா வித்தியாலயம் என்ற பெண்கள் பாடசாலையையும் கல்லடி உப்போடையில் சிவானந்த வித்தியாலயம் என்ற ஆண்கள் பாடசாலையையும் அமைத்தார். அத்தோடு அநாதை மாண வருக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஒழுங்கையும் ஏற்படுத்தினார். தலை நகரான கொழும்பில் தமிழ்ப் பள்ளிக்கூடம் இல்லாத குறையைப் போக்க விவேகானந்தா வித்தியாலயத்தைத் தொடங்கினார்.

கல்வித் துறையில் அனைவரும் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து சிவானந்த வித்தியாலயத்தில் மும்மொழிகளையும் மாணவர்கள் பயில ஒழுங்கு செய்த பெருமை சுவாமிகளுக்கே உரியது.

1937ஆம் ஆண்டு இமய மலையைக் காணச்சென்று மலைச் சாரலில் உள்ள மாயாவதி ஆச்சிரமத்தில் தங்கினார். அங்கு சில காலம் 'பிரபுத்த பாரதா' என்ற ஆங்கிலச் சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்து பல கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்.

யாழ்நூல் ஆராய்ச்சிக்காக தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று 15 ஆண்டுகள் ஆராய்ந்து கரந்தை தமிழ்ச்சங்க ஆதரவில் திருக்கொள்ளம்புதூர்த் திருக்கோயிலில் 1947ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 'யாழ்நூல்' அரங்கேற்றம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

பாரிசவாதத்தினால் தாம் பீடிக்கப்பட்டிருந்தும் தமது 45 வருடக் குறிக்கோள் நிறைவேறுவதையிட்டு சுவாமிகள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். 'யாழ்நூலை' இயற்றுவதற்காகவே சுவாமி விபுலானந்தர் அவதாரம் எடுத்தார் என்று சொல்லுமளவிற்கு

அவரின் வாழ்க்கை, 'யாழ்நூல்' அரங்கேறிய அடுத்த மாதமே முடிவுற்றது. 1947ஆம் ஆண்டு ஆடி மாதம் 17ஆம் திகதி அவர் விண்ணுலகம் அடைந்தார்.

சிவானந்த வித்தியாலய முன்றலிலுள்ள மரத்தின்கீழ் அமைக் கப்பட்ட கல்லறையில் சுவாமி அவர்களுடைய பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது. சுவாமி அவர்கள் அடக்கம் செய்யப் பட்ட கல்லறைமேல் சுவாமி அவர்களால் பாடப்பட்ட


**வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.**

என்ற கவிதா வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

சுவாமி விபுலானந்தரின் கல்விப்பணியும் அவர் விட்டுச்சென்ற எழுத்துச் செல்வங்களும் அவரை நமக்கு நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் இருக்கும்வரை முத்தமிழ் வித்தகரான சுவாமி விபுலானந்தரின் திருநாமமும் வாழ்ந்து கொண்டேயிருக்கும்.

※ ※ ※

# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பணிகளைத் தொடர அவரது ஞான பரம்பரையில் தோன்றியவரே பண்டிதமணி கணபதிப் பிள்ளை அவர்கள். நாவலர் பாடசாலையில் ஒருசேரக் கற்று வந்த இருவரில் ஒருவர் பண்டிதமணி. மற்றவர் புலவர்மணி.

நாவலரின் நோக்கத்தை உள்ளபடி ஆராய்ந்து தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு உணர்த்திய பெருமை பண்டிதமணியையே சாரும்.

யாழ்குடா நாட்டிலே தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் கிராமத்தில் 1899ஆம் ஆண்டு ஆனி மாதம் 27ஆம் திகதி சின்னத்தம்பி, வள்ளியம்மை தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். தாயாரின் ஊரான தனங்கிளப்பு காரைத்தூ விநாயகர் குல தெய்வமானபடியால் இவருக்கு கணபதிப்பிள்ளை என்ற பெயர் சூட்டப்பட்டது. தமது 3ஆவது வயதில் தாயாரை இழந்த இவர் தந்தையுடன் மட்டுவிலில் வாழ்ந்து வந்தார்.

மட்டுவில் அமெரிக்கமிஷன் பாடசாலையில் 5ஆம் வகுப்பு வரை ஆரம்பக் கல்வியைக் கற்றார். தந்தையார் மிகுந்த அனுட்டானசீலர். தெய்வ நம்பிக்கை, புராணபடனம், தமிழ் இலக்கண இலக்கிய அறிவு நிரம்பப்பெற்ற மட்டுவில் க. வேற்பிள்ளையிடம் பாடம் கற்று வந்தபொழுது நாவலர் காவியப் பாடசாலையைப் பற்றிக் கேள்விப்பட்டு அங்கு வந்து தமது 17ஆவது வயதில் பாடம் கற்கத்தொடங்கினார். உடை, உணவு, கல்வி மூன்றும் இலவசமாகக் கொடுத்து உதவும் பாடசாலை அது. வண்ணார்பண்ணை காவியப் பாடசாலை பெரிதும் அவரை விருப்பத்தோடு கல்வி கற்க வைத்தது. சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், த. கைலாசபிள்ளை, வித்துவான் ந. சுப்பையாபிள்ளை ஆகியோரிடம் இலக்கண இலக்கியங்களைக் குருசீட முறையில் கற்றார். பழமையில் பற்று வைக்கும் பணிகளை இவர் காவியப் பாடசாலையில் கற்றுக் கொண்டார். மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் சித்திபெற்றார்.

திருநெல்வேலி சிவன்கோயிலுக்கு அருகில் தோட்டம் ஒன்று உண்டு. அவ்விடத்தில் கல்வியில் துறைபோய பலரும் ஒன்றுகூடி நாட்டு நடப்புக்கள் பற்றி அலசுவார்கள். ஆங்கில இலக்கியம், விஞ்ஞானம், கணிதம் போன்ற துறைகளில் தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறி விவாதிப்பார்கள். அந்த இடத்திற்கு கணபதிப் பிள்ளை அவர்களும் போவார்கள். பல அறிஞர்களின் கூட்டுற வினால் ஆங்கில இலக்கியங்களில் அவருக்கு நாட்டம் ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியராக விளங்கிய கலைப் புலவர் நவரட்ணம் என்பவர் 1931ஆம் ஆண்டு திருநெல்வேலியில்

கலாநிலையம் ஒன்றினை ஆரம்பித்து வைத்தார். அதில் உறுப்பின ராக இவர் சேர்ந்து கொண்டார். பண்டிதமணி அவர்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்துக்கொண்டு திருநெல் வேலி சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1929ஆம் ஆண்டு தமிழ் விரிவுரையாளராக இருந்ததனால் கலா நிலையத் திற்கு அடிக்கடி வந்து பல தொண்டுகள் புரியத் தொடங்கினார். மக்களின் பார்வைக்காக இலக்கண இலக்கிய புத்தகங்களையும் தினசரிப் பத்திரிகைகளையும் தருவித்து எந்நேரமும் கலா நிலையம் மக்களால் சூழப்பட்ட ஒரு இடமாகத் திகழ வைத்தார். விசேஷ பண்டிகை நாட்களில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். அச்சமயம் பண்டிதமணி அவர்கள் இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார். இந்தியாவிலிருந்தும் பல அறிஞர்களைக் கலா நிலையத்திற்கு அழைப்பித்து சமயச் சொற்பொழிவுகள் நடக்க ஒழுங்குகள் செய்தார். அக்காலத்தில் பல கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி மக்களைக் கவரக்கூடியதாக நகைச்சுவை ததும்ப சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார்.

பண்டிதமணி அவர்கள் ஆசிரிய கலாசாலையில் கற்பிக்கும் முறையே தனிரகமாகும். நகைச்சுவை பொருந்த இலக்கண இலக்கியங்களை மாணவர்களுடைய மனதில் எளிதாகப் புரியும் படி விரிவுரையாற்றுவார். புதுப்புது உத்திகளைக் கையாண்டு அவர் ஆற்றும் விரிவுரைகளை மாணவர்கள் மிகுந்த உற்சாகத் தோடு விரும்பிக் கற்றார்கள்.

இவரது 'நவபாரதம்' என்ற உருவகக் கதை 1938ஆம் ஆண்டு ஈழகேசரி ஆண்டு மலரில் வெளிவந்துள்ளதை அக்கால மாணவர்கள் தேடித்தேடிப் படித்தார்கள். 30 வருடங்களாக சைவாசிரியப் பணியைத் தொடர்ந்து செய்தார். ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு சைவமும் தமிழ் இலக்கண இலக்கியமும் கற்பித்து அவர்களின் அன்பிற்குப் பாத்திரமானார். இம்மாணவர்கள் இன்று பெரும் புலவர்களாக விளங்கி சைவத்தமிழ் பண்பாட்டினைப் பரப்பும் தூதுவர்களாக நாட்டின் பல பாகங்களிலும் சேவை புரிகிறார்கள். தற் பெருமையே சிறிதும் இல்லாத இவரது சேவையைப்

பாராட்டியவர் சைவாசிரிய கலாசாலைப் போஷகர் இந்து போர்ட் சு. இராசரத்தினம் அவர்கள்.

பணிவும் அடக்கமும் மிகுந்த பண்டிதமணி அவர்கள் சிறந்த பேச்சாளர், அத்தோடு சிறந்த எழுத்தாளர். இவர் வெகுவாக இரசித்துப் படிப்பது கம்பராமாயண நூலாகும். தமது இலக்கிய ரசனையைக் கம்பராமாயணக் காட்சிகள் என்னும் தலைப்பில் கட்டுரைகளாக வெளிப்படுத்தியுள்ளார். இவரது படைப்புக்கள் மாணவர்களின் உயர்தர வகுப்புப் பாடங்களில் சேர்க்கப் பட்டுள்ளன. 'கம்பன் ஒரு வம்பன்', 'அவையடக்கம்' போன்றவை க.பொ.த. சாதாரணதர மாணவர்களின் பாட நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. சேக்கிழாரின் பெரிய புராணத்தையும் ஆர்வத்தோடு படிப்பார். இவர் எழுதி வெளியிட்ட கந்தபுராண தக்ஷண காண்ட உரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் யானைமேல் வைத்து ஊர்வலமாக எடுத்துச்சென்ற சிறப்புப் பெற்றது. உபஅதிபர் பொ. கைலாசபதியின் தொடர்பினால் சைவ சித்தாந்தத்திலும் இவர் ஈடுபாடு உடையவராக விளங்கினார். சைவசமயம், தமிழிலக்கியம், மெய்யியல், தமிழர் பண்பாடு ஆகிய துறைகளில் இவர் பேசிய பேச்சுக்களும் எழுதிய கட்டுரை களும் தொகுக்கப்பட்டு 23 நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. கந்தபுராண கலாசாரம் இன்றும் சைவமக்களால் போற்றப்பட்டு வருவதற்குப் பண்டிதமணி அவர்களே அடிகோலியவராவர்.

1978ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் பண்டித மணிக்கு 'இலக்கிய கலாநிதி' பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. யாழ்ப்பாணத்து மக்களை மனிதர்களாக வாழச் செய்வது புராண படனமாகும். கந்தபுராண கலாசாரம்தான் அந்நிய நாட்டவரின் ஆசை வார்த்தையில் மயங்காது மக்களைக் காத்து வந்தது.

பண்டிதமணியின் கட்டுரைகள், கவிதைகள், சமயப் பேச்சுக்கள், சித்தாந்தத் தத்துவங்கள் என்பவற்றை நூல் வடிவில் வெளிக்கொணர முயற்சி எடுப்பவர் அணுக்கத் தொண்டராகிய அ. பஞ்சாட்சரம் அவர்கள். பண்டிதமணியின் பன்முகச் சேவையை பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வு செய்கின்றனர். தமிழ், சைவம் இரண்டையும் இரு கண்களாகப் போற்றிய

பண்டிதமணி அவர்கள் 86 ஆண்டுகள் நைட்டிகப் பிரமச்சாரியாக வாழ்ந்து 1986ஆம் ஆண்டு பங்குனி மாதம் 13ம் திகதி இறைவனடி சேர்ந்தார். அவரது பூதவுடல் திருநெல்வேலி கலா நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அவரைப் பற்றிய இரங்கற் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டு திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. சைவமும் தமிழும் தழைக்க பல தொண்டுகள் புரிந்த பண்டிதமணி அவர்களின் நூற்றாண்டு விழா 1999ஆம் ஆண்டு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

❈ ❈ ❈

# நவாலியூர் சோமசுந்தரப்புலவர்



தமிழ் கூறும் நல்லுலகம் பெற்றெடுத்த நல்முத்துக்களில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் ஒருவராவர்.

இவர் 1876 ஆம் ஆண்டு ஆனி மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாணத்து நவாலியூரிலே கதிர்காமருக்கும் இலக்குமிப் பிள்ளைக்கும் மகனாகப் பிறந்தார்.

மானிப்பாய் அருணாசலப் புலவரிடம் செந்தமிழையும் மாரிமுத்து உபாத்தியாயரிடம் ஆங்கிலத்தையும் கற்று ஆசிரியப் பணியைத் தொழிலாகக் கொண்டார். சித்தங்கேணியிலுள்ள கலட்டி ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலம், தமிழ், சமயம் ஆகிய பாடங்களை மாணாக்கர் நன்கு விளங்கிக் கொள்ளுமாறு கற்பித்தார். இவர் பிறந்த மண்ணின் பெருமையினை அழகுற, இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய அழகு தமிழில் பாடல்களாக அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார். இயல்பாகவே கவிதை யாற்றல் மிக்கவரான இப்புலவர் தம் வாழ்நாளில் பல்லாயிரக் கணக்கான பாடல்களைப் பாடியிருக்கிறார்.

தங்கமயமான தோற்றத்தோடு களங்கமில்லா உள்ளத் தோடும் அகத்தினழகு முகத்தில் தெரிய தன் வெண்தாடியை மென் விரல் களால் தடவிக்கொண்டு இவர் இயற்றிய பிரபந்தங்கள், 'சிறுவர் செந்தமிழ்' சிறுவர்களுக்கான பாடல்கள், பொது நூல்களென இவர் பலதுறைகளிலும் பாடல்களை இயற்றியுள்ளார்.

பெங்களூரிலிருந்து வந்த பெரியார் சுப்பிரமணிய சுவாமியாரை தமது குருவாக ஏற்றுக்கொண்டார். தமது தாய்மாமன் வேலுப் பிள்ளையின் மகள் சின்னம்மையை மணந்து இல்லறத்தை நல்லற மாக நடாத்தினார். இவருக்கு 3 பிள்ளைகள் உண்டு. அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்த தமிழ் மக்கள் மேனாட்டு மோகத்தில் நமது கலாசாரங்களை மெல்ல மெல்லக் கைவிடுவதைக் கண்டு மனம் நொந்தார். எதிர்காலச் சந்ததியினர் நாம் போற்றுகின்ற பழக்க வழக்கங்களை அறவே மறந்து விடுவார்களோ என்ற அச்சத்தால் குழந்தைகளும் விளங்கி மகிழக்கூடிய வகையில் இனிய தமிழ் நடையில் நமது வாழ்க்கை முறைகளை அழகாகப் பாடியுள்ளார். மென்மையுள்ளம் படைத்த புலவரும் 'சிறுவர் செந்தமிழ்' என்ற நூலினைப் படைத்து எமக்கு அளித்துள்ளார்.

'தெள்ளமுதே தேனே தெவிட்டாத நறும்பாகே, உள்ளம் குளிர வரும் ஓவியமே கண்வளராய்' என்று குழந்தைகளைத் தாலாட்டு கிறார். பனங்கள்ளும் பனங்கட்டியும் தரும் பனைமரம் நிறைந்த நம் யாழ்ப்பாணத்துப் பெருமையினை 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை' என்ற பாடல்மூலம் பனைமரம் எமக்கு வாழ்வளிக்கும்

'கற்பகதரு' எனக் கூறுகின்றார். ஆடி மாதத்தில் பழங்களும், பனங்கட்டியும் மலிந்து இருக்கும். அக்காலத்தில் இனிய தின் பண்டங்களும் பழவகைகளும் தெய்வங்களுக்குப் படைத்து சுற்றம்சூழ உண்டு மகிழவேண்டும் என்ற அவாவை அவரது பாடலில் காணக்கூடியதாக இருக்கிறது. இப்பாடலில் கூழ் காய்ச்சும் விதமும், கொழுக்கட்டை அவிக்கும் விதமும் அழகாக விபரிக்கப்பட்டுள்ளது. சிறுவர் முதல் பெரியோர்வரை பாடிப் பாடி சுவைக்கக்கூடிய கவிதைகள் அவர் புகழை இன்றும் நிலை நாட்டுகின்றன. கற்பனையும் கருத்தாழமும் மிக்க பாடல்கள் ஏராளம். யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஆடிப்பிறப்பு சிறப்பு வாய்ந்தது. நெடுநாளைப் பயிர்களான பனை, தென்னை, மா, பலா போன்ற கனிதரு மரங்களை நமக்காக நாட்டி வளர்த்துத் தந்த நம் மூதாதையர் களுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனையும் இப்பண்டிகை விளக்குகின்றது. இந்த உண்மையை என்றும் மறக்காதிருக்கவும் இப்பாடல் உதவு கின்றது. பனை பல நாட்டி நாட்டின் வளம் பல பெருக்க வேண்டும் என்றும் எமக்குப் போதிக்கின்றது. இது தவிர 'மாம்பழம்', 'புழுக்கொடியல்', 'கொழுக்கட்டைப் பொன்னன்', 'கத்தரி வெருளி', 'பவளக்கொடி', 'வெண்ணிலா', 'எலியும் சேவலும்' போன்ற பாடல்கள் குழந்தைகளோடு அவர் உள்ளம் எவ்வளவு தூரம் ஒன்றியிருந்ததென்பதை அழகாக எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் யாழ்ப்பாண மணம் கமழ்வதையும் அவதானிக்கலாம். 'தாடி அறுந்த வேடன்', 'இலவு காத்த கிளி', 'அம்புலி', 'விறகு வெட்டி' போன்ற பாடல்களும் சிறுவர்களுக் காகப் பாடிய இனிய பாடல்களாகும். 'தாலாட்டு', 'சாய்ந்தா டம்மா' போன்றவை எளிய சந்தமும் சுவையும் நிறைந்த நாட்டுப் பாடல்கள் போன்றவை.

இலங்கை சுதந்திரம் அடைந்ததையொட்டி இவர் பாடிய இலங்கை வளப்பாடல்கள் கற்பனைவளம் மிக்கவை. தேசிய உணர்வை ஊட்ட வல்லவை. இசை நயமும் செந்தமிழ்ப் பிரயோகமும் மலிந்தவை. மகாவலிகங்கை ஆறும், கன்னியா வெந்நீரூற்றும் இவரது பாடல்களால் சிறப்பை அடைகின்றன.

கண்ணன், புத்தர், யேசு, காந்தி போன்ற பெரியோர்கள் ஆடுகள் மீது தனியன்பு கொண்டவர்கள். அவர்களைப்போல் இவரும் ஆட்டைப்பற்றிப் பாடியுள்ளார். 'ஆடு கதறியது' என்ற பாடலைப் படித்த மக்கள் கண்ணீர் விடாமல் இருக்க மாட்டார்கள்.

**'ஆசை மகனே என் அன்பான கண்மணியே**
**நேசத்துரையே நெடுந்தூரம் போனாயோ**
**உன்தன் தலையரிந்து ஓலைக் குடலைகட்டி**
**சென்று சென்று விற்றனரோதின்று பசியாறினரோ**
**அம்மாவென வழைக்கும் ஆசைத் திருக்குரலை**
**எம்மாதுளக் கொழுந்தே நான் கேட்ட தென்னாளோ**
**ஓங்கிய கத்தி விழும்போது உடல் நடுங்க**
**ஏங்கியெனை நினைத் தென்னம்மாவோ என்றாயோ'.**

என்று அவர் குறிப்பிட்ட வரிகளை நாம் படிக்கும்போது நாம் தாய் ஆடாக மாறி கதறி அழவைக்கிறது. புலவரது அருள் நிறைந்த நெஞ்சத்தை 'ஆடு கதறியது' என்ற பாடல் எமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

உத்தியோகம் புருஷ லட்சணம் என்று எண்ணி ஏமாறாது 'அடவி கொன்று வீடெழும்பி ஆங்கிருக்கப் போவமே' என்ற பாடல் மூலம் காடு வெட்டி நாடாக்கவேண்டும் என்றும் வாணிபம், கைத்தொழில்கள் பலவற்றில் நாம் ஈடுபட வேண்டும் என்றும் எம்மை யாசிக்கின்றார்.

தமிழொடு சைவத்தையும் போற்றிய புலவர் 'கந்தபுராண தத்துவ விளக்கம்' என ஒரு நூலையும் இயற்றியிருக்கிறார். சைவசித்தாந்தத்தில் இவருக்கு இருக்கும் பரந்த அறிவை இந்நூல் நன்கு வெளிப்படுத்துகின்றது. தனது வயோதிப காலத்தில் நலிந்திருந்த வேளையில் தன்னை அன்போடு கவனித்த மனைவியின் செயல்கண்டு மனம் நெகிழ்ந்து 'தாரமாகித் தாயாகி' என்ற கவிதையைப் பாடி தனது அன்பினை வெளிக்காட்டு கின்றார். கற்பகதரு எனப் போற்றப்படும் பனையைப் பற்றிச் சிறுவர் பாடல்களிற் சொன்ன புலவர் 'தால விலாசம்' என்று தனியாகவே ஒரு கவிதை நூலையும் இயற்றியிருக்கிறார்.

அந்நியர் ஆதிக்கத்தில் இருந்து இந்திய பண்பாட்டையும் கலாசாரத்தையும் மீட்க பாரதியார், கவிமணி தேசிக விநாயகம்

பிள்ளை போன்றவர்கள் எழுச்சிமிகு பாடல்களைப் பாடியது போன்று எமது புலவரும் யாழ்ப்பாணத்திலிருந்து பாடிய பாடல் களும் மாணவர்களின் தமிழ்ப் புத்தகங்களிலே தவறாது இடம் பெறுகின்றன. இது இவருக்கு நமது அரசாங்கம் கொடுக்கும் பெரிய கௌரவமாகும்.

எம் மொழியின் பெருமையினை உணர்ந்த புலவர் 'தெய்வத் தமிழை, சிங்களத்தைத் தேசிய மொழியாக்குவோம்' என்று பாடியிருப்பது ஒரு அரசியல் அறிஞராக, தீர்க்கதரிசியாக இவர் விளங்கினார் என்பதை எமக்கு இன்று புலப்படுத்துகின்றது.

இரு மொழிகளையும் ஈழத்தின் இரு கண்களாகக் காண விரும்பிய புலவர் 'எம்மில் யாரும் சிறியரல்லர் என்று நினைந்து போற்றுவோம்' என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார். மேலும்,

**'அஞ்சு விரலும் சேர்ந்திடில்**
**அரிய கருமம் புரியலாம்**
**கொஞ்சம் ஒன்று நோவுறின்**
**கூடுங் கருமம் இல்லையே'**

என அறிவுரை புகல்கின்றார்.

ஈழத்துப் பூதந்தேவனாரைத் தொடர்ந்து புலவர் சின்னத்தம்பி, அரசகேசரி, சேனாதிராய முதலியார், முத்துக்கவிராயசேகரர், குமாரசுவாமிப் புலவர், நவநீதகிருஷ்ண பாரதியார் ஆகியோர் வழியில் தனக்கெனத் தனியிடம் பெற்று விளங்கும் புலவர் அவர்கள் **'தங்கத் தாத்தா'** என்ற சிறப்பினைத் தனதாக்கிக் கொண்டார். இப்புலவர் 1953ஆம் ஆண்டு ஆடி மாதம் 10ஆம் திகதி தமது 77ஆவது வயதில் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். இருந்தும் கண்ணாடியும் வெண்தாடியும் துலங்க சிவன் ரூபமாக யாழ்ப்பாண நகரமத்தியிலே இன்றும் நமக்குக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார் இப்புலவர். இவர் பாடி அச்சேறிய நூல்களில் 'கதிரைச் சிலேடை வெண்பா', 'சிறுவர் செந்தமிழ்', 'தால விலாசம்', 'இலங்கை வளம்' என்பன பிரசித்தமானவை. நூல் வடிவு பெறாதவற்றை தமிழ் மக்கள் நூலுருப்பெற வைப்பது இப் புலவருக்குச் செய்யும் பெருந்தொண்டாகும்.

❋ ❋ ❋

# புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை



**த**மிழுக்கு அரும்பெரும் தொண்டாற்றிய புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பில் பிறந்தவர். ஈழநாட்டில் வாழ்ந்த புகழ்மிக்க தமிழறிஞர்களில் ஒருவராக விளங்கிய இவர் 1899 ஆம் ஆண்டு தைமாதம் 8ம் திகதி மட்டக்களப்பிலுள்ள மண்டூரில் பிறந்தார்.

நாவலர் என்றால் ஆறுமுகநாவலரையும் பண்டிதமணி என்றால் யாழ்ப்பாணத்து திரு. சி. கணபதிப்பிள்ளையையும், அண்ணா

என்றால் அறிஞர் அண்ணாத்துரையையும் குறிப்பது போல புலவர்மணி என்றால் அது திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர் களையே குறிக்கும்.

இவர் மட்டக்களப்பிலேயே தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார். தமிழும் ஆங்கிலமும் கற்றுத் தேர்ச்சி அடைந்த புலவர் மணி அவர்களுக்கு தமிழ் இலக்கியத்தை கற்க வேண்டும் என்ற ஆவல் மேலோங்கியது. இதை உணர்ந்த பெற்றோர் 8ஆம் வகுப்புடன் இவரது ஆரம்பக்கல்வியை நிறுத்தி யாழ்ப்பாணத்து நாவலர் காவிய பாடசாலையில் 1917ஆம் ஆண்டு இவரைச் சேர்த்தனர். நாவலர் காவிய பாடசாலை கல்வி கற்பிப்பதோடு மட்டும் நில்லாது கற்கும் மாணவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் மூன்றினையும் ஒருங்கே வழங்கி வந்தது. அதனால் புலவர்மணியும் ஒருவித இடையூறும் இல்லாது கல்வி கற்க முடிந்தது.

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், வித்துவ சிரோன்மணி கணேசையர் போன்றவர்களிடம் முறையாக தமிழைக் கற்று பாண்டித்தியம் பெற்றார். அங்கு இவரோடு சேர்ந்து கல்வி பயின்றவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள். நாவலர் பாடசாலையில் ஒரே காலத்தில் சேர்ந்து கற்றுத்தேறிய இருவரும் பேராசிரியர்களாகி ஆசிரிய கலாசாலைகளில் பணி புரிந்தவர் களாவார்கள்.

யாழ்ப்பாணத்தில் இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஒரு பண்டிதமணியானார். மட்டக்களப்பில் சைவத் திற்கும் தமிழிற்கும் அளப்பரிய சேவைகளாற்றி ஏ. பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் புலவர்மணி என எல்லோராலும் போற்றப் பட்டார். கவிதைகள் இயற்றுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். உரைநடைச் செய்யுள்கள் யாப்பதிலும் திறமை பெற்று விளங்கினார். விபுலானந்த அடிகளாரின் சிறப்புப் பாயிரத்தோடு வெளிவந்த 'மண்டூர்ப் பதிகம்' இவருடைய இளமைப் பருவத் திலே வெளிவந்த சிறப்புப் பெற்றது. பத்துப் பதிகங்களைக் கொண்டு மண்டூர் முருகன் மீது பாடப்பெற்ற பக்திப் பாடலே இவரது முதற் பாடலாக பரிணமித்தது.

புலவர்மணி அவர்கள் பகவத்கீதையை கருமயோகம், பக்தி யோகம், ஞானயோகம் என மூன்று பகுதிகளாகப் பிரித்து வெண்பா யாப்பில் பாடியுள்ளார். இவ்வெண்பா யாப்பில் பாடியுள்ளார். இவ்வெண்பாக்கள் 1944 ஆம் ஆண்டு வீரகேசரியில் வாரந்தோறும் வெளிவந்தன. இவற்றின் அருமையினை அறிந்த விபுலானந்த அடிகள் அதனை நூலுருவாக்கி சான்றோர்கள் முன் அரங்கேற்றினார். பகவத்கீதை வெண்பாக்களைப் பாடி சிறந்த புலவனாக விளங்கிய புலவர்மணி அவர்கள் சிந்தாமணியிலுள்ள நாமகள் இலம்பகத்தை நாடக ரூபத்திலே படைத்து சிறந்த வசன கர்த்தா என்ற சிறப்பினைப் பெற்றார். சங்க இலக்கியமான கலித் தொகையிலுள்ள பாலைக்கலி என்னும் பகுதியை உரைநடையில் உருவாக்கியுள்ளார். இவரின் கவிதைகள் புலவர்மணி கவிதைகள் என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளது. உள்ளதும் நல்லதும் என்ற தலைப்பில் இவரின் வாழ்க்கை வரலாறு வசனநடையில் நூலாக வெளிவந்துள்ளது.

கவிதை யாப்பதில் மிகவும் கெட்டிக்காரராக விளங்கிய புலவர் மணி அவர்கள் 'விபுலானந்தர் மீட்சிப்பத்து' என்ற நூலினைப் பாடியுள்ளார். புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் கவித்துவத்தை உணர்ந்த கிழக்கு பல்கலைக்கழகம் இவருக்கு 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டத்தை 1997ஆம் ஆண்டு வழங்கி கௌரவித்தது. 'தமிழ் தந்த புலவர்மணி' என்ற பெயர் சூட்டி இவரைப் பற்றி கொழும்புத் தமிழ்ச்சங்கம் 1998 ஆம் ஆண்டு ஒரு நூலினை வெளியிட்டுள்ளது.

புலவர்மணி அவர்கள் சிறந்த மேடைப்பேச்சாளர். சிறந்த கவிஞர். சிறந்த வசனகர்த்தா. சிறந்த மொழிபெயர்ப்பாளர். சிறந்த ஆசிரியர். சிறந்த அரசியல் ஆய்வாளர். சிறந்த சீர்திருத்தவாதி. சிறந்த புரட்சியாளர். சிறந்த கல்விமான்.

மட்டக்களப்பு தமிழ்க்கலைமன்றம் இவர் தமிழுக்காற்றிய அருஞ் சேவையைப் பாராட்டி 1951ஆம் ஆண்டிலேயே இவருக்கு **புலவர்மணி** என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது. பட்டங்கள் பல பெற்றிருந்தும் புலவர்மணி என்ற பட்டமே தூக்கச் சுமக்க இலகுவானது என்று புலவர்மணி அவர்களே ஒருபொழுது

கூறியுள்ளது ஈண்டு நினைவுகூரத்தக்கது. இவர் தமிழ்த்துறையோடு நில்லாமல் பற்பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர். சமூகப்பணி, சமயப்பணி, அரசியல், பொதுவுடைமை இயக்கம், வேதாந்த ஆய்வு என்றெல்லாம் ஈடுபாடு கொண்டு நாட்டிற்கு பெருந்தொண்டு புரிந்துள்ளார்.

'இலங்கை மணித்திரு நாடெங்கள் நாடே' என்ற செய்யுளில்,

> **'சிங்களமும் செந்தமிழும் சேர்ந்து சமமேயிலங்கை**
> **எங்கும் அரசமொழி யென்னவே - துங்கமுடன்**
> **ஆட்சி புரியவழி யாக்குவதே யெல்லாம்**
> **மாட்சியுடன் வாழும் வழி.'**

என்று இலங்கையின் இனப்போருக்கு தீர்க்கதரிசியாக வழி கூறியுள்ளமை யாவரும் உணரக்கூடியதே.'

புலவர்மணி கவிதைத் துறையில் மிக்க ஈடுபாடு கொண்டவர். இவர் இயற்றிய நூல்கள் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடியவை. எளிய தமிழில் யாவரும் புரிந்து கொள்ளக் கூடியதாக எழுதுவதில் சிறந்தவர். இவர் அரசகரும மொழிகள் திணைக்கள ஆலோசனைச் சபை, இந்துசமய அபிவிருத்திச் சபை, இலங்கை வானொலி கல்வி ஆலோசனைச்சபை ஆகியவற்றில் பணிபுரிந்த காலங்களில் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்டு தொண்டாற்றியுள்ளார்.

அரசியல் குழப்பங்கள் ஏற்பட்ட காலத்தில்

> **'இருதயத்தில் ஈரிதழ்போல் இந்து முஸ்லீம்**
> **யாம் ஒரு வயிற்றுப் பிள்ளைகள் போலுள்ளோம்**
> **அரசியலில் பேராசை கொண்டோர் பிரித்து**
> **நமை வேறாக்கி ஆராயார் செய்வார் அழிவு'.**

என்ற பாடலைப்பாடி தவறான போக்கினைச் சுட்டிக்காட்டி மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று அறிவுரை புகட்டி நிற்கின்றார்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த புலவர்மணியை

> **'பண்டுரும் முகிற்குலங்கள் எமதிறைவர்**
> **மருகர் திருப்பதி யிதென்ன**

*விண்டூர மழை பொழியும் சிறப்பதனால்*
*வளம் மலிந்து மிகுந்து தோன்றும்*
*கண்டுரு மினிய மொழிப் பெரியதம்பிப்*
*பிள்ளை யெனும் கலைவல்லோனே.'*

என்று விபுலானந்த அடிகள் புகழ்ந்து பாடியுள்ளார். பகவத் கீதை வெண்பா நூல் அரங்கேற்று விழாவில் பண்டிதமணி அவர்கள்

*'கீதை கலி செய்து கீர்த்தி மிகப்பெற்றான்*
*ஏ பெரிய தம்பி எனதன்பன் - ஓதக்கேள்*
*பாட்டுக் கொருபுலவன் பாரதியென்றா றொருவர்*
*பாட்டுக் கிவனென்பன் யான்'*

எனப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். தை மாதம் 8ஆம் திகதி 1999ஆம் ஆண்டு மட்டக்களப்பில் நூற்றாண்டு தினத்தையொட்டி அவரது உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

*'பொங்கும் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர்*
*புல்லடிமைத் தொழில் போய்*
*ஆங்கில ராட்சியில் இங்கினி தடைந்தாள்*
*அன்னை சுதந்திரமே'*

என்று அந்நியர் ஆட்சியிலிருந்து இலங்கை மாதா விடுபட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் புலவர்மணி 1978ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

* * *

# கலாயோகி ஆனந்த குமாரசுவாமி



ஈழத் திருநாட்டிற்குப் பெருமை சேர்த்த அறிஞர்களுள் கலாயோகி ஆனந்த குமாரசுவாமியும் ஒருவர் ஆவார். இவர் யாழ்ப்பாணத்து மானிப்பாயிலே கல்வி கேள்விகளிற் சிறந்து புகழ்பெற்ற சேர். முத்துக்குமாரசுவாமி என்பவருக்கும் இங்கிலாந்து நாட்டுப் பெண்ணாண எலிஸபெத் கிளேபீபீ என்பவருக்கும் ஒரே மகனாகப் பிறந்தார்.

இவரின் தந்தையார் சேர். முத்துக்குமாரசுவாமி அக்கால அரசியல்வாதி. தமிழ் மாநாட்டு பிரதிநிதியாக விளங்கியவர். இவர்களுக்கு 1877ஆம் ஆண்டு ஆவணி மாதம் 22ஆம் திகதி கொழும்பிலே ஆனந்தர் பிறந்தார். இவர் 8 மாதக் குழந்தையாக இருந்தபொழுது அவரது அன்னை உடல் நலக்குறைவால் இங்கிலாந்து சென்றார். செல்லும்பொழுது ஆனந்தரையும் உடன் கொண்டு சென்றார். அரசியல் காரணமாக தந்தை உடன் செல்லவில்லை.

ஆனந்தருக்கு 2 வயது நடந்து கொண்டிருக்கும்பொழுது எதிர்பாராதவிதமாக தந்தையார் திடீர் மரணமானார். இங்கிலாந்தில் இவருக்கு சிறிய தாயார் ஆரம்பப் பாடங்களைப் போதித்தார். இவரது தாயார் மறுமணம் செய்யாது இவரை சீராக வளர்த்து வந்தார். ஆரம்பப் பாடசாலையில் திறமையுடன் கல்விகற்றுப் பின்னர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து விஞ்ஞானப் பட்டதாரி (BSc) ஆனார்.

இவர் சிறந்த நிலநூற் பண்டிதராக விளங்கினார். அதனால் இவரை இலங்கை அரசினர் 1903ஆம் ஆண்டு தமது உலோக பரிபாலனத்துறைக்குத் தலைவராக நியமித்தனர். இவர் கனிப் பொருள் பற்றி பல ஆராய்ச்சிகள் செய்தார். தோரியனைற் என்னும் கனிப்பொருளைக் கண்டுபிடித்தார். இவர் வெளியிட்ட கட்டுரை களின் தரத்தையும் உயர்வையும் கண்ட இலண்டன் பல்கலைக் கழகம் இவருக்கு 'விஞ்ஞான கலாநிதி' என்னும் பட்டத்தைக் கொடுத்து கௌரவித்தது.

இவர் தமது தந்தையாரைப் போலவே இலங்கையில் தலைப் பாகை அணிந்து வந்தார். தந்தையார் பெரும் புகழ் படைத்த சட்டத்தரணி. தமிழ், ஆங்கிலம், சிங்களம், பாளி முதலிய மொழிகளிற் புலமை பெற்றவர். விக்டோரியா மகாராணி முன்னிலையில் அரிச்சந்திரன் கதையை ஆங்கில நாடகமாக எழுதி நயம்பட விளக்கிப் புகழ் பெற்றவர். இத்தகைய திறமையும் கலையார்வமும் மிக்க தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆனந்தரும் கலைகளில் ஊக்கங் காட்டத்தொடங்கினார். சிற்பங்களையும் ஓவியங்களையும் தாம் கண்டு ரசித்தவற்றை மேனாட்டவரும் அறியவேண்டுமென்று விரும்பினார். 1907ஆம் ஆண்டு பதவி துறந்து இங்கிலாந்து சென்றார். தாம் சேகரித்த

செய்திகளைக் கொண்டு 'இடைக்கால சிங்களக் கலைகள்' என்னும் நூலை வெளியிட்டார். இந்த நூல் இலங்கை மக்களின் கலையுணர்வையும் ஆனந்தரின் கலைத்திறனையும் எடுத்துக் காட்டியது. தொடர்ந்து இந்தியக் கலைகளையும் மேனாட்ட வருக்கு அறிமுகஞ் செய்ய விரும்பினார். 'இந்தியச்சிற்பி', 'இந்திய கலைகளின் நோக்கம்' என்ற நூல்களையும் வெளியிட்டார். இந்திய கலைகளுக்கு மலர்ச்சி ஏற்பட்டதால் 1911ஆம் ஆண்டு அலகாபாத்தில் அகில பாரதக் கண்காட்சி ஒன்றை நடத்தினார். அதனை இந்தியர் மட்டுமல்ல மேனாட்டவரும் கண்டு வியந்தனர். கலைப்பிரிவுக்கு தலைவராக விளங்கிய இவர் இலங்கையின் பழையகால கலைச்சிறப்புக்களைப் பற்றியும், சமூக அமைப்பு முறைகளைப் பற்றியும் ஆராயத் தொடங்கினார்.

இந்துமதச் சார்புள்ள ராஜபுத்ர ஓவியங்களுக்கு மொகலாய சித்திரங்கள் வித்தாய் அமைந்தன என்னும் கருத்து நிலவிய காலம். இக்கருத்தை மறுத்து இவர் வெளியிட்ட நூல்கள் இவரது புகழை உலகறியச் செய்தது.

1914ஆம் ஆண்டு முதலாவது உலக மகாயுத்தம் மூண்ட காரணத்தால் ஆனந்தர் தமது சேமிப்புக்களுடன் அமெரிக்கா சென்றார். கலைகளின் ஊடாகத் தத்துவத்தை உணர்ந்து 40 இற்கு மேற்பட்ட கலை சம்பந்தமான கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். 1919 ஆம் ஆண்டு பொஸ்ரன் நகரத்து கலைப் பொருட் காட்சி நிலையத்தின் கீழைத்தேயக் கலைப் பொருட் பகுதிக்குத் தலைவரானார். இக்காலத்திலே 'இந்திய விக்கிரகங்கள்', 'இந்திய நடனங்கள்', 'இந்திய சிற்பங்கள்', 'சிவானந்த நடனம்' போன்ற கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். 'சிவானந்த நடனம்' என்ற ஆங்கிலக் கட்டுரையில் நடராஜ வடிவத்தின் கலைச்சிறப்பையும் தத்துவ விளக்கத்தையும் உலகம் முழுவதும் அறியக்கூடியதாக விளக்கமாக எழுதினார். இவர் இந்திய கலைத்துறைக்குச் செய்த சிறந்த சேவை இதுவாகும். மேலும் 'சைவசித்தாந்தச் சுருக்கம்', 'சைவசமய குரவர்' போன்றவற்றைப் பற்றியும் ஆங்கிலக் கட்டுரைகளாக எழுதியுள்ளார்.

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் பல தடவைகள் இலங்கைக்கு வந்துள்ளார். யாழ்ப்பாணத்திற்குச் சென்ற பொழுது யாழ் இந்துக்கல்லூரி அவரை வரவேற்று அவரது புகழை

யாழ்ப்பாண மக்களும் அறியும்படி செய்தனர். கண்டி, அநுராத புரம் போன்ற இடங்களுக்கும் அவர் சென்றுள்ளார். இவர் கலைச் சேவையோடு சீர்திருத்தப் பணியாளராகவும் விளங்கி இலங்கை யில் பல சேவைகள் ஆற்றியுள்ளார். 'இலங்கையில் சமூக சீர்திருத்தச் சபை' என்ற பெயருடைய கழகமொன்றினை இலங்கையில் நிறுவினார். இச்சபையின் ஆதரவில் வெளிவந்த பத்திரிகையில் கட்டுரையாசிரியராக இருந்து சீர்திருத்தக் கட்டுரைகள் பல எழுதினார். கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி கலை அறிஞராகவும் சீர்திருத்தப் பணியாளராகவும் பிறந்த பொன்னாட்டிற்கு அளப்பரிய சேவைகள் ஆற்றியதன் பொருட்டு அவருக்கு **'வித்தியா விநோதன்'** எனும் பட்டம் வழங்கப்பட்டது. அவரது சேவைகளை உணர்ந்து அன்னிபெசன்ட் அம்மையார், இராஜாஜி, கலாநிதி இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலாயோகியின் புகழை - வானளாவப் புகழ்ந்துள்ளனர்.

தான் கண்டுபிடித்த கனிப்பொருளுக்கு தனது பெயரைப் பொறிக்காது அதற்குத் தோரியனைற் என்னும் பெயரைச் சூட்டியதிலிருந்து அவர் பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்படாத ஒரு பெருமகனாக விளங்கியுள்ளார் எனக் கூறலாம்.

கலாநிதி ஆனந்தரின் 70ஆவது பிறந்தநாள் பொஸ்ரன் நகரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் சேர் ஐவர் ஜெனிஸ் தலைமையில் பாராட்டுக்கள் வழங்கப்பட்டன. சரியாக ஒரு மாதம் செல்ல உலகம் போற்றும் உத்தமர் ஈழத் திருநாட்டின் தவப்புதல்வர் 1947ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 9ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். இவர் மறைவுக்குப் பின்னர் இவரது மனைவி டொனா லூயினா கணவரின் அஸ்தியைக் கொண்டு இலங்கைக்கு வந்து பின்னர் இந்தியாவிலுள்ள திரிவேணி சங்கமத்தில் கரைத்தார்.

இலங்கையரசு கலாயோகியின் நினைவாக அவரது தந்தை யாரின் ஊரான மானிப்பாயில் முத்திரையொன்றை வெளி யிட்டது. யாழ் பல்கலைக்கழக விடுதியொன்றிற்கு இவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

❋ ❋ ❋

# பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வழித்தோன்றலாக வாழ்ந்த தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தெல்லிப்பளை என்னும் ஊரில் 1925 ஆம் ஆண்டு தை மாதம் 7ஆம் திகதி பிறந்தார்.

மல்லாகத்திலுள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்றார். பின்னர் விசாலாட்சி வித்தியாலயத்திலும் அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்திலும் கல்வியைத்

தொடர்ந்து சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலே இடைநிலைக் கல்வி பயின்று 1941 முதல் 1944 வரை இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றார். ஆரிய, திராவிட பாஷாபி விருத்திச் சங்கம் நடத்திய 'பண்டிதர்' தேர்விலும் சைவ சித்தாந்த சமாஜம் நடாத்திய 'சைவப்புலவர்' தேர்விலும் தோற்றி பண்டிதை யாகவும் சைவப்புலவராகவும்பரிணமித்தார். இவர் 1946 முதல் மட்டக்களப்பு சென்ற் சிசிலியா ஆங்கிலப் பாடசாலையிலும் 1949 முதல் கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலையிலும் பின்பு அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்திலும் ஆசிரியராக விளங்கி நன்மாணாக்கர்களை உருவாக்கினார்.

சைவத்திலும் தமிழிலும் மிகுந்த பற்றுதல் கொண்டு பண்டிதை யானார். இவரது தந்தை அப்பாக்குட்டி, தாயார் தையற்பிள்ளை ஆவர். நாவலர் போலவே சமயத்திற்கும் தமிழிற்கும் சமூகத்திற்கு மாக தன் சேவையை அர்ப்பணித்தார் என்றும் செல்வ வளம் பொருந்திய செல்வியாகவே திகழ்ந்து வந்தார். ஆரம்ப காலத்தில் இவர் எங்கு பிரசங்கம் செய்யச் சென்றாலும் அப்பாக்குட்டி அவர்கள் இவர்களோடு சென்று மகளின் பிரசங்க வன்மையைக் கண்டு மனம் பூரித்துப் போவார். நீரொழுக்குப் போன்ற இவரது பிரசங்கம் கேட்காதவர்களே யாழ்ப்பாணத்தில் இல்லை என்று கூறலாம். எங்கு திருவிழா நடைபெற்றாலும் அங்கு இவரது பிரசங்கம் இருக்கும்.

சிறந்த சொற்பொழிவாளரான பண்டிதை தங்கம்மா அப்பாக் குட்டி அவர்கள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்தார். ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப் படும் காரைநகர் சிவன் கோவிலில் 1958ம் ஆண்டு தொடர்ந்து பத்து நாட்கள் இனிய தன் குரல் வளத்தால் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றியபொழுது அவ்வாலய மணிவாசகர் சபையினர் அவ்வூர் மக்கள் சார்பில் **'சிவத்தமிழ்ச் செல்வி'** என்ற பட்டத்தைக் கொடுத்து கௌரவித்தனர். மலேஷியாவில் சிலாங்கூர் இலங்கைச் சைவ சங்கத்தினரால் 1972ஆம் ஆண்டு 'திருவாசகக் கொண்டல்' என்ற பட்டத்தைப் பெற்றார். மதுரை ஆதீனத்தினரால் 1986ஆம் ஆண்டு 'செஞ்சொற்செம்மணி' என்ற பட்டத்தை பெற்றார். கொழும்பில் 1974ஆம் ஆண்டு அகில இலங்கை இந்து மன்றத்தினரால்

'சிவஞான வித்தகி' என்ற பட்டத்தைப் பெற்றார். இப்படியாக அவர் பதினைந்திற்கு மேற்பட்ட பட்டங்களையும் பதக்கங் களையும் பெற்றுக் கொண்டாலும் 'சிவத்தமிழ்ச் செல்வி' என்ற பட்டமே அவர் பெயரோடு நிரந்தரமாக வழங்கி வரலாயிற்று.

இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பல தடவை சொற்பொழிவாற்ற இவர் சென்றுள்ளார். அவர்கள் இவரது சொற் பொழிவுகளை நூல்களாக அச்சிட்டு வெளியிட்டமை எமக்கு பெருமை தேடித்தரவல்லது. அம்மையாரின் புகழ் கண்டு அயலூரான தெல்லிப்பளையில் கோவில் கொண்டிருந்த துர்க்கை யம்மன் கோவில் தர்மகர்த்தாக்கள் இவரை 1966ஆம் ஆண்டு கோவில் நிர்வாக தனாதிகாரி ஆக்கினர். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபராகவிருந்த ரி. ரி. ஜெயரத்தினம் தேவஸ்தானத்தின் நிர்வாகத் தலைவராக இருந்து வந்தார். அவரது மறைவின் பின் சிவத்தமிழ்ச் செல்வி 1977ஆம் ஆண்டு ஆலய நிர்வாக தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டார். தன் ஆசிரியத் தொழிலைத் துறந்து ஆலயப் பணியை முழுமனதோடு ஏற்றுக் கொண்டார். அவரது பணியில் கோவில் பிரபல்யமடைந்தது. தெல்லிப்பளை துர்க்கா தேவி ஆலயத்தைப் பொறுப்பேற்ற அம்மையார் கோவில் இராஜ கோபுரத்தைக் கட்டுவித்தார். சித்திரத் தேரை உருவாக்க வழி செய்தார். மண்டபங்களும் அறச்சாலைகளும் நந்தவனமும் தீர்த்தத் தடாகமுமென சிறந்த அருள் நிறைந்த கோவிலாக வளர்த்தார். குளம், கோபுரம் எனப் பொலிவு பெற்று விளங்கிய கோவில் வீதியில் நால்வர் திருமடம் அமைத்து நிரந்தரமாக அங்கேயே வசிக்கத் தொடங்கினார்.

இலங்கையிலே ஆதரவற்ற பிள்ளைகள் தங்கியிருந்து படிப் பதற்கு 'துர்க்காபுரம் மகளிர் இல்லம்' அமைத்தார். பசித்து வரும் ஏழைகளுக்கும் ஆலயத் தொண்டர்களுக்கும் என 'அன்னபூரணி அன்னதான மடம்' அமைத்தார். திருமண விழாக்களை குறைந்த செலவில் நடத்துவதற்காக 'கல்யாண மண்டபம்' ஒன்றை அமைத் தார். ஆலய அந்தணர்கள் நிரந்தரமாகத் தங்குவதற்கு வீடுகளை அமைத்தார். யாழ்ப்பாணத்தில் நெடுங்காலமாகச் சேவை புரிந்த, புகழ்பெற்ற அச்சகமான சுன்னாகம் அச்சுக் கூடத்தையும் ஆலய உடைமையாக்கி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக திறம்பட

நிர்வகித்து வந்தார். அத்தோடு இந்து இளைஞர் மன்றத்தினையும் அமைத்தார்.

தாய்மை என்ற புனிதமான சொல்லிற்கு இலக்கணமாக விளங்கிய சிவத்தமிழ்ச்செல்வியின் சைவசமயச் சொற்பொழிவின் தெளிவும், கேட்போர் அனைவரையும் கவர்ந்து இழுக்கும் வல்லமையும், ஆழ்ந்த புலமையும் எல்லோராலும் போற்றப் பட்டு வருகின்றது. தமிழக ஆதீனங்கள் பலவும் இவரது தொண்டைப் பாராட்டியுள்ளன.

**'வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்**
**இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்**
**பயிற்றிப் பலகல்வி கற்று**
**இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும்.'**

என்ற பாரதியின் கனவை நனவாக்கிய பெருமை தங்கம்மா அப்பாக்குட்டியையே சாரும். இவர் அறக்கட்டளை ஒன்றை நிறுவியுள்ளார். ஒவ்வொரு வருடமும் தை மாதம் 7ஆம் திகதி தனது பிறந்த நாளன்று ஏழை மக்களுக்கு உதவியும், சிறந்த நூல்களை வெளியிட்டும், அறிஞர்கள் பலரைப் பாராட்டியும், அவ் அறக்கட்டளை மூலம் சிறந்த பணிகளைச் செய்து வந்தார். மேலும் பேரறிஞர்கள் பலரையும் அழைத்து சைவசித்தாந்த மாநாட்டினை நடாத்தி அறிஞர்கள், கலைஞர்கள், அந்தணர்கள் எனப் பலரையும் கௌரவித்துள்ளார். அம்மையாரின் அரும்பணி கண்ட துர்க்கை யம்மன் தேவஸ்தானம் அவருக்கு **'துர்க்கா துரந்தரி'** என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது.

முஸ்லீம் பாடசாலையில் படிப்பித்தபொழுது அவர்களுடைய ஐந்து நேரத் தொழுகையே தனக்கு இறை பக்தியை ஏற்படுத்திய தென்றும், கிறிஸ்தவக் கல்லூரியில் கற்பித்த நேரம் அவர்களின் நிர்வாகத் திறனும் ஆளுமையும் தனக்கு ஏற்பட்டதாகக் கூறும் அம்மையார் ஆலயத்தின் மேலதிக வருமானத்தை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, யாழ் அரச வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவு, யாழ் பல்கலைக்கழக இந்துசமயபீடம், சிறுவர் விடுதி, கூட்டுறவு வைத்தியசாலை, பாடசாலைகள், அனாதை இல்லங்கள் என்று எல்லாவற்றிற்கும் வழங்கி உதவி புரிந்துள்ளார்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் அம்மையார் 17 ஆண்டுகளாக துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை நல்லமுறையில் நிர்வகித்து வந்தார்.

நாட்டிலேற்பட்டுள்ள யுத்தச் சூழ்நிலை காரணமாக உடுவில் இராமநாதன் கல்லூரியில் சிலகாலம் பிள்ளைகளோடு தங்கியிருந்தார். அவ்வேளை சேர். பொன் இராமநாதனால் அமைக்கப் பெற்ற சிவன் கோவிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகமும் செய்வித்தார். கல்லூரி வளாகத்தில் இராமநாதன் அவர்களுடைய சிலையை நிறுவுவதிலும் பெரும்பங்கு கொண்டார். பின்னரும் உரும்பிராய் ஞானசம்பந்தர் இல்லத்தில் தங்கினார். 1995இல் மக்கள் ஒட்டுமொத்தமாக யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த பொழுது இவர்களும் இடம்பெயர்ந்து கைதடி சைவ அனாதைகள் இல்லத்தில் தங்கி பின்னரும் இடம்பெயர்ந்து உசன் முருகமூர்த்தி ஆலயச் சூழலில் தங்கி அறப்பணியாற்றினார். பல்வேறு இடர்ப்பாடுகளையும் துன்பங்களையும் அனுபவித்தும் அன்னையவர்கள் தமது பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டே வருகிறார். 1996ஆம் ஆண்டு மக்கள் திரும்ப யாழ் சென்ற பொழுது மீண்டும் இராமநாதன் கல்லூரியை அடைந்து கோவில் நிர்வாகத்தை நடாத்தத் தொடங்கினார்.

முன் ஒருபொழுது ஆலய நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட பொழுது அம்மையாரின் கழுத்திலிருந்து தங்கத்தாலான உருத்திராட்ச மாலையும் பறித்தெடுக்கப்பட்டது. அதன்பின் அவர் தங்க நகைகள் அணிவதை நிறுத்திக்கொண்டார். பின்னர் ஆலயத்தின் தெற்கு வாசலில் நகைகள் கிடைக்கப்பெற்ற இடத்தில் ஞாபகார்த்தமாக மலர்த் தடாகம் ஒன்றினை அமைத்துள்ளார்.

இவரது மிகச்சிறந்த சொற்பொழிவுகள் நூல்களாகத் தொகுக்கப் பட்டுள்ளன. 'கந்தபுராண சொற்பொழிவுகள்', 'சைவக்கிரிகை விளக்கம்', 'இலண்டனில் ஏழு வாரம்' ஆகிய நூல்களை அம்மையார் எமக்குத் தந்துள்ளார். அன்பும் பண்பும் அறநெறியும் நிறைந்த அம்மையாருக்கு 1998 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகம் கௌரவ 'கலாநிதி'ப் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

மிக நெருக்கடியான போர்க்காலச் சூழலிலும்கூட துர்க்கை யம்மனின் அருட்கடாட்ஷத்தால் ஒருவித குறைவும் இன்றி இவரது பணி தொடர்ந்தது. 1999ஆம் ஆண்டு ஆவணி மாதம் மீண்டும் துர்க்கையம்மன் ஆலயத்தில் கொடியேறி 10 நாள் திருவிழா கோலாகலமாக நடைபெற்றதற்கு அம்மையாரின் முயற்சியே காரணமாகும். தேர்த் திருவிழா இலங்கை பூராவும் வானொலியில் நேரடி அஞ்சல் செய்யப்பட்டு பரந்து வாழும் தமிழரின் நெஞ்சங்களைக் குளிர்வித்தது.

அம்மையாரின் 74ஆவது பிறந்தநாள் அறநிதிய விழா யாழ் மருதனாமடத்திலுள்ள இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. உடல் தளர்ந்தாலும் தன் உடல் நலத்தைப் பேணாது அயராது பாடுபட்டார். இவர் சமய மறு மலர்ச்சியை ஏற்படுத்தியவர். இந்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச ரீதியில் வாழும் இந்துமக்கள் அனைவராலும் போற்றப்பட்டு வந்தார்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவி யாகத் திகழ்ந்த இவர் தமது 83 ஆவது வயதில் 2008 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இறைவனடி சேர்ந்தார். சிறந்த சமய சமூகப் பணியாளரான இவரது மறைவு தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த கவலையை தோற்றுவித்துள்ளது.

இவரால் எழுதப்பட்ட 'கந்தபுராணச் சொற்பொழிவுகள்' 1978ஆம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. இவர் 2000 ஆம் ஆண்டு சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையாக 'சைவசித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறி' எனும் பொருள்பட ஆற்றிய பேருரை மானிடராகப் பிறந்த ஒவ்வொரு வரும் நலமாக வாழ்வதற்கு வேண்டிய கல்வி, ஒழுக்கம், கட்டுப்பாடு மூன்றையும் தெளிவாக விளக்கி நிற்கின்றது.

இவர் எல்லா உயிர்களும் வையத்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய உத்தமியாக என்றும் திகழ்கின்றார்.

❋ ❋ ❋

# தனிநாயகம் அடிகளார்



தனிநாயகம் அடிகளார் ஊர்காவற்றுறை கரம்பன் என்னும் கிராமத்தில் 1913ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2 ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் சப்த தீவுகளுள் ஒன்றான நெடுந்தீவைச் சேர்ந்தவர். ஹென்றி ஸ்தனிஸ்லாஸ் கணபதிப்பிள்ளை என்னும் பெயரைக் கொண்டவர். தாயார் செசில் இராசம்மா வஸ்தியாம் பிள்ளை. பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் சேவியர் என்பதாகும்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். பத்திரிசிரியார் கல்லூரியில் கற்றார். தொடர்ந்து கொழும்பு புனித பெர்னாந்து குருத்துவக் கல்லூரியில் கற்று தமது 21ஆவது வயதில் 1934ஆம் ஆண்டு ரோமாபுரி உர்பன் பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர்ந்தார்.

1939 இல் இவர் இறையியலில் 'கலாநிதி' எனும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

ரோமாபுரியில் உர்பன் பல்கலைக்கழகத்தில் 5 ஆண்டுகள் கல்வி கற்றபொழுது 43 நாடுகளைச் சேர்ந்த 250 மாணவர்களுடன் சேர்ந்து கல்வி கற்றதன் பயனாக இவருக்குப் பரந்த மனப்பான்மை உண்டாயிற்று. வெவ்வேறு நாடுகளைப் பற்றியும் இலக்கியங்களைப் பற்றியும் அறிந்துகொள்ள பல்கலைக்கழகம் அரியதொரு வாய்ப்பினை இவருக்கு அளித்தது. தனிநாயகம் அடிகளார் இளமையில் தானாக சமயப்பணியினை ஏற்கவில்லை. இவரது தாயார் மரணப்படுக்கையில் இருந்தபொழுது அவருடைய விருப்பத்திற்கிணங்கவே இவர் அதனை ஏற்றுக்கொண்டார். இவர் பாடசாலையில் கல்வி கற்கும்பொழுது 'லியோ டால்ஸ்டாய்' எழுதிய 'புத்துயிர்ப்பு' என்ற நூலைப் படித்ததன் பின்பே இறைபணியில் தன்னை முழுமனதுடன் ஈடுபடுத்திக் கொண்டார். இவர் வேறுபட்ட சூழலில் வாழ்ந்ததனால் நற்குண, நற்செயல்களைக் கற்றுக்கொண்டார். பல அனுபவங்கள் பெற்றதன் விளைவாக பரந்த நோக்கு உடையவராகத் திகழ்ந்தார்.

கலாநிதிப் பட்டம் பெற்ற பின்னர் இவர் இந்தியாவுக்கு வந்து நெல்லை மாவட்டத்திலுள்ள வடக்கன் குளப் பிரதேசத்தில் ஆசிரியராகப் பணி புரியத் தொடங்கினார். அங்கு பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயரிடம் நான்கு வருடங்கள் தமிழ் கற்றார். அப்பொழுது தான் ஒரு தமிழ் பெயரைச் சூட்டிக் கொள்வது நல்லதென்று 'ரோச் ஆண்டகை' கேட்டுக் கொண்டதற்கிணங்க தனிநாயகம் முதலி பரம்பரையில் தான் தோன்றியவர் என்பதை அறிந்து தனக்கு சேவியர் ஸ்தனிஸ்லாஸ் தனிநாயகம் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார். 1945 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுநிலை மாணவனாகச் சேர்ந்தார். தமிழ்த்துறைத் தலைவராக தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

பணியாற்றியபொழுது அவரிடம் தமிழ் கற்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. அடிகளார் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஆகிய அமைப்புக்களை நிறுவி முதன்மை ஆசிரியராக இருந்து 'Tamil culture' என்ற ஆங்கில முத்திங்கள் ஏட்டினை நடாத்தி வந்தார். உலகளாவிய ரீதியில் பல ஆய்வுகளைச் செய்தார். 17 ஆங்கிலப் புலமையாளர்களுக்கும் 20 தமிழ்ப் புலமையாளர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். சென்னைப் பல்கலைக்கழக அகராதி ஆக்கக் குழுவின் உறுப்பினராயும், யாழ்ப்பாணத்தில் நடந்த 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் சிறப்பு மலர் வெளியீட்டின் செயலாளராகவும் பதவி வகித்தார்.

அடிகளார் ஒரு கிறிஸ்தவப் பாதிரியாராக இருந்தபோதிலும் 1947ஆம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சித் துறையில் முதுகலைமாணி (MA.) பட்டத்தைப் பெற்றார். தொடர்ந்து 1949ஆம் ஆண்டு தமிழ் இலக்கிய முதுகலைமாணி (MLit.) பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இவர் திறனாய்வு செய்த பழந்தமிழ் இலக்கியங் களைப் பார்வையிட்ட பேராசிரியர் கமில் சுவலபில் பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றி இதுவரை எழுதப்பட்ட அனைத்திலும் இந்நூல் சிறந்து விளங்குகிறது என்று போற்றியுள்ளார். இவர் வீரமாமுனிவர்பால் ஆரா அன்பு கொண்டவர். அவரது நூல்களைத் தேடி வாசிப்பதில் ஆர்வம் காட்டினார். பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் பொழுதெல்லாம் இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். 'தேம்பாவணி ஆராய்ச்சி', 'திருக்காவலூர்க் கோயில்', 'யேசுநாதர்', 'பத்துப்பாட்டு', 'ஆங்கிலமொழி பெயர்ப்பு', 'திராவிடர் வரலாறு' எனப் பல நூற்பதிப்புக்களை தூத்துக்குடியில் தாம் தோற்றுவித்த 'தமிழ் இலக்கியக் கழகம்' ஊடாக வெளியிட்டார்.

தமிழின் சிறப்பை, தனித்துவத்தை உலகறியச் செய்ய வேண்டும் என்று அடிகளார் ஆசைப்பட்டார். அதற்காக அவர் சென்ற நாடுகள் ஏராளம். மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, இந்தோனேஷியா, கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம், கனடா, ஜேர்மன், அமெரிக்கா, இத்தாலி, ரஷ்யா, ஸ்கன்டிநேவியா என்று எல்லா நாடுகளுக்கும் சென்று தமிழ் விரிவுரைகள் ஆற்றித்

தமிழுக்குப் பெரும் தொண்டாற்றினார். அடிகளார் ஆய்வுசெய்த 'தமிழ்த் தூது திறனாய்வுக் கட்டுரைகள்' 1951ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.


1955ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2ஆம் திகதி கொழும்பு தமிழ்ப் பண்பாட்டுச் சங்கம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் 'இலங்கையும் தமிழ்ப் பண்பாடும் - நேற்றும் இன்றும் நாளையும்' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்திய அடிகளார் 'பழங்காலத்தில் தமிழரும் சிங்களவரும் இன மத மொழி வேறுபாடின்றி ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். இன்று இனவாதம் தலைதூக்கி ஆடுகின்றது. இந்த இனவாதத்தினை ஒழிக்க தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளும் ஆட்சி மொழியாக விளங்க வேண்டும் என்று கூறினார். 1956ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி சிங்களம் மட்டும் ஆட்சி மொழி யானதை அறிந்துகொண்ட அடிகளார் மொழி உரிமைகளை மறுப்பது தீய விளைவுகளுக்கு வழிகோலும் என்று 'இலங்கையில் மொழி உரிமைகள்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கட்டுரை 1956ஆம் ஆண்டு ஆடி மாதம் 10ஆம் திகதி வெளியிட்ட தமிழ்க் கலாசாரச் சஞ்சிகையில் வந்துள்ளது.

அடிகளார் 1955ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 2 ஆண்டுகள் கல்வி கற்று கலாநிதிப் பட்டம் பெற்றார். 1957ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டம் பெற்று இலங்கை வந்த பொழுது இவரது தமிழ்ப் பற்றினை அறிந்த இலங்கையரசு இவரைக் கைது செய்யும்படி ஆணை பிறப்பித்தது. இதனால் மனமுடைந்த அடிகளார் மலாய்ப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 'தமிழ் எங்கள் உயிர்' என்ற இயக்கத்தினை ஆரம்பித்தார். மேலும் சென்னைப் பல்கலைக்கழக அகராதி ஆக்கக் குழுவில் உறுப்பின ராகவும் விளங்கினார். 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் சிறப்பு மலர் வெளியீட்டின் செயலாளராக இருந்து ஆக்க பூர்வமான பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார். தன் இறுதி மூச்சு வரை தமிழுக்குத் தொண்டாற்றிய அடிகளார் 1980ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

❋ ❋ ❋

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

# சுவாமி ஞானப்பிரகாசர்



சுவாமி ஞானப்பிரகாசர் இலங்கையில் பிறந்த தமிழ்ப் பேரறிஞர்களுள் ஒருவராவர். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாய் என்ற ஊரிலே 1875ஆம் ஆண்டு ஆவணி மாதம் 30ஆம் திகதி, யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த மன்னர்களுள் 6ஆவது பரராஜசேகரன் பரம்பரையில் ஓர் இந்துக் குடும்பத்தில் பிறந்தார். தந்தையார் பெயர் இராஜசிங்கம் சாமிநாதபிள்ளை. தந்தையார் ஓர் ஆசிரியராக விளங்கினார். தாயார் தங்கமுத்து. இவர்

பிறந்த பொழுது அவருக்கு வைத்திலிங்கம் எனப்பெயர் சூட்டி வளர்த்து வந்தனர். இவரது செல்லப்பெயர் கனகரத்தினம்.

ஞானப்பிரகாசருக்கு ஐந்து வயது நடக்கும்பொழுது அவரது தந்தையார் இறந்துவிட்டார். அவருடைய தாயார் அச்சுவேலியில் அச்சுக்கூடம் வைத்து நடத்தி வந்த தம்பிமுத்து என்ற கத்தோலிக் கரை மறுமணம் செய்து கொண்டார். எனவே தங்கமுத்துவும் மகனும் திருமுழுக்குப் பெற்றுக் கத்தோலிக்க மதத்தைத் தழுவினார்கள். அப்போது அவருக்கு ஞானப்பிரகாசர் எனப் பெயர் சூட்டினார்கள்.

ஞானப்பிரகாசர் அச்சுவேலியிலுள்ள அமெரிக்க மிஷன் ஆங்கிலப் பாடசாலையொன்றில் தமது ஆரம்பக் கல்வியைக் கற்றார். வளர்ப்புத் தந்தையாரான தம்பிமுத்து நல்ல தமிழ் அறிஞர் ஆனபடியால் ஞானப்பிரகாசருக்கு அவர் தமிழ் அறிவை ஊட்டினார். அச்சுக்கலையில் பயிற்சி அளித்தார். அதனால் ஞானப் பிரகாசர் சிறு வயதிலேயே இலக்கணப் பிழையின்றி தமிழ் எழுதப் பழகிக்கொண்டார். தமிழ் இலக்கியங்களை மிகுந்த ஆர்வத்தோடு கற்றார். அதனால் கவிதை இயற்றும் ஆற்றல் உடையவராக விளங்கினார்.

சங்கீத ஞானம் உள்ளவராக விளங்கிய ஞானப்பிரகாசர் வயலின் வாசிப்பதோடு ஒரே சமயத்தில் பல வாத்தியக் கருவிகளை மீட்டக்கூடிய திறமை பெற்றிருந்தார்.

ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து யாழ் நகரிலுள்ள புனித பத்திரிசியார் கல்லூரியிலே கல்வி பயின்றார். தமது சொந்த முயற்சியால் அறிவை வளர்த்துக்கொண்ட ஞானப்பிரகாசர் தமது படிப்பை முடித்துக்கொண்டு 1893ஆம் ஆண்டில் புகையிரதப் பகுதி லிகிதர் பரீட்சையில் திறமையாகத் தேர்ச்சியடைந்து கடிகமுவை புகையிரத நிலையத்தில் வேலைக்கு அமர்ந்தார். இவருடைய திறமையான வேலையைக் கவனித்த மேலிடம் அவரை கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு இட மாற்றம் செய்தது. ஆனால் அவர் வேலையில் மூன்று வருடங்களே சேவை புரிந்தார். பின்னர் கத்தோலிக்க குருவாக மாற விரும்பி குருமடத்தில் சேர்ந்து கொண்டார். 1907ஆம் ஆண்டு மார்கழி மாதம் 1ஆம் திகதி அவர் குருவானவராக திருநிலைப்படுத்தப் பட்டார்.

குருவான பின் அவர் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதிலும் சமயத்தைப் பற்றிய தெளிவை ஏற்படுத்துவதிலும் ஆர்வமாக ஈடுபட்டு உழைத்தார். வேறு எந்தக் குருவானவரும் செய்திராத அளவுக்கு பல கத்தோலிக்க தேவாலயங்களைக் கட்டுவித்தார். கிட்டத்தட்ட முப்பத்து ஏழு தேவாலயங்களைக் கட்டுவித்தார். மக்களிடையே அறிவை வளர்ப்பதற்காக வாசிகசாலைகளையும் உடன் ஏற்படுத்தினார். எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், ஆராய்ச்சியாளராகவும் விளங்கிய ஞானப்பிரகாசர் வீரமா முனிவருக்குப் பின் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் முதன்மையானவராகக் கருதப்பட்டார்.

தொன்மை வாய்ந்த தமிழ்மொழியை மிக ஆர்வத்தோடு ஆழமாகப் படித்ததோடு பிறமொழிகள் பலவற்றையும் படிக்கத் தொடங்கினார். பிறமொழிகளை ஆசிரியரிடத்திலோ அன்றி பல்கலைக்கழகத்திலோ அவர் கற்கவில்லை. தமது சொந்த முயற்சியால் அறிவை வளர்த்தார். எழுபத்திரண்டு மொழிகளை அவர் அறிந்திருந்தார். சமஸ்கிருதம், ஜேர்மன், கிரேக்கம் எனப் பன்னிரண்டு மொழிகளைத் திறம்படக்கற்று பாண்டித்தியம் பெற்று விளங்கினார்.

மொழிகளில் மாத்திரமின்றி சமயம், தத்துவம், சரித்திரம் போன்றவற்றிலும் ஆழ்ந்த ஞானம் பெற்று விளங்கினார். இவர் தாம் எழுதியவற்றை பத்திரிகை வாயிலாக மக்களுக்கு புத்துணர்ச்சியூட்டினார். யாழ்ப்பாணச் சரித்திரத்தை முதலில் வெளியிட்டவர் சுவாமிகளே. ஞானப்பிரகாசருடைய கட்டுரைகள் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்' என்ற சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. இவர் எழுதிய வேறு சில கட்டுரைகள் 'கலைமகள்', 'சத்தியநேசன்', 'கலாநிலையம்' என்ற தமிழ் நாட்டுப் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. தமிழ், சமயம், இந்து மதம், யாழ்ப்பாண இராச்சியம் எனப் பலதரப்பட்ட கட்டுரைகள் 'ஈழகேசரி'யில் வெளிவந்துள்ளன.

தமிழின் தொன்மையையும் அதன் தனித்துவத்தையும் உலகுக்கு உணர்த்தியவர் ஞானப்பிரகாசர். அவர் தனித்து நின்று ஒப்புயர்வற்ற 'சொற்பிறப்பு ஒப்பியல்' என்ற தமிழ் அகராதியை பன்னிரண்டு ஆண்டுகளாக ஆராய்ந்து இருபது பாகங்களாக எழுதி

முதல் ஆறு பாகங்களை வெளியிட்டார். எஞ்சிய பாகங்கள் கையெழுத்துப் பிரதிகளாக இருந்தன. அவற்றை வெளியிடு வதற்கு முன் அவர் இறைவனடி சேர்ந்து விட்டார். துரதிஷ்ட வசமாக அவை சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை. அகராதி தமிழ்ச் சொற்கள் பற்றிய ஓர் ஆராய்ச்சி நூலாகும். தமிழ் கற்கும் மாணவர்களுக்கு அவர்தம் ஆய்வுகள் நன்கு உதவுகின்றன.

1896ஆம் ஆண்டிலிருந்து 1906ஆம் ஆண்டுவரை 'அமலோற்பவ இராக்கினித் தூதன்' என்னும் மாத சஞ்சிகையின் ஆசிரியராக சுவாமிகள் விளங்கினார். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர் பல தொண்டுகள் புரிந்துள்ளார். தமிழ்மொழி தொன்மையான மொழியென்றும் பல பிறமொழிகளுக்குத் தாயாக உள்ளது என்றும் ஆராய்ந்து கூறியவர் ஞானப்பிரகாசர் அவர்களே. ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் உபதலைவராக இருந்தார். அத்தோடு ஆசிய அரசவையின் இலங்கைக் கிளைத் தலைவராகவும் தொண்டு புரிந்துள்ளார். சுவாமிகள் ஆராய்ச்சி செய்த காலத்தில் தற்கால பிரயாண வசதிகள், வாய்ப்புக்கள் இல்லை. கால்நடை யாகவும், மாட்டு வண்டிகளிலும், சைக்கிளிலும் பிரயாணம் செய்து உடல் வருத்தத்தையும் பாராது பழைய தமிழ்ச் சுவடி களைத் தேடி எடுத்து குப்பி விளக்கிலே படித்து தமிழ்த்தொண்டு செய்த பெரும் அறிஞர்.

தான் பிறந்த ஊராகிய மானிப்பாயில் உள்ள வைத்தியசாலை யில் நோய்வாய்ப்பட்டிருந்த ஞானப்பிரகாசர் 1947ஆம் ஆண்டு தை மாதம் 22ஆம் திகதி காலை தமது 72ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். அவர் மரணமானது தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத ஓர் பேரிழப்பாகும். அவருடைய புகழ் இலங்கையில் மட்டுமன்றி பிற நாடுகளிலும் பரவியிருந்தது. 1981ஆம் ஆண்டு வைகாசி மாதம் 22 ஆம் திகதி இலங்கையரசு அவரது உருவம் பொறித்த தபால் முத்திரையொன்றை வெளியிட்டு அவரைக் கௌரவித்தது. ஞானப்பிரகாசர் மறைந்தாலும் அவர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகள் அழியாது நிலைத்து நிற்கும்.

* * *

# சுவாமி விவேகானந்தர்



உலகில் மானிடர்களுக்குச் சேவையாற்றும் மகத்தான பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் சுவாமி விவேகானந்தர் அவர்கள். 1863 ஆம் ஆண்டு ஆனி மாதம் 12 ஆம் திகதி பிறந்த விவேகானந்தருடைய இயற்பெயர் நரேந்திரன்.

இறைவன் இருக்கிறாரா என்று சந்தேகிக்கின்ற தற்கால மக்களின் மனதில் 'இறைவன் உண்டு' என்ற சித்தத்தை

ஏற்படுத்திய பண்பாளர் சுவாமிஜி அவர்கள். இராமகிருஷ்ணர் என்ற அன்பு வெள்ளத்திலே ஆன்மிகம் கிளர்ந்தெழ இறை யனுபூதி பெற்று மனிதர்கள் நற்கதியினை அடைவதற்கான ஓர் அரிய வழியைக் காட்டிய உத்தமசீலர் விவேகானந்தர் அவர்கள்.

இராமகிருஷ்ணரும் கர்மயோகம், பக்தியோகம், இராஜ யோகம், ஞானயோகம் என்ற ஆன்மிக ஆற்றல்களை சுவாமி விவேகானந்தருக்கு அளித்தார். இவரும் தியானம், ஜெபம், பஜனை என்பவற்றில் மூழ்கி தமது ஆன்மிக ஆற்றலால் உலக மக்களுக்குத் தெய்வீக ஆற்றலினையும் வலிமையினையும் அளித்தார்.

இவர் இளம் வயதிலே மிகவும் துடிப்புமிக்க குழந்தையாக விளங்கினார். மூர்க்கத்தனம் மிகுந்த வாலிபப் பருவத்திலேயே இவரது தந்தையார் விஸ்வநாத தத்தர் இறைவனடி சேர்ந்து விட்டார். இவரை குடும்பக் கஷ்டம் வருத்தியபோதும் கடவுளை அறியவேண்டும் என்பதில் தணியாத தாகம் கொண்டிருந்தார். இதனால் இவர் தியானத்திலும், பிரார்த்தனையிலும் தனது மனத்தைத் தீவிரமாக ஈடுபடுத்தி வந்தார். நரேனைக் காண வில்லை என்று தாயார் தேடும் பொழுதெல்லாம் இவர் ஓர் தனிமையான இடந்தேடி தியானத்தில் ஆழ்ந்திருப்பார். தாயார் புவனேஸ்வரி அம்மாள் இவரது தெய்வீகத்தன்மையை அறிந்து தம்மால் இயன்ற உதவிகள் பலவும் அளித்து வந்தார். துறவு மனப்பான்மையும், மனவுறுதியுங் கொண்டு விளங்கியபொழுது இராமகிருஷ்ணருடைய தொடர்பு கிடைத்தது. இராம கிருஷ்ண ரைக் கண்டவுடன் இவர் கேட்ட கேள்வி 'கடவுள் இருக்கிறாரா' என்பதுதான். 'ஆம் குழந்தாய்' என்ற ஒரு சொல்லே இவரை ஆன்மிகத் துறையில் நுழைய வைத்தது. பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ணர் தாம் எந்தக் காரியத்தை நிறைவேற்றுவதற்கு அவதரித் தாரோ அவைகளை நிறைவேற்ற விவேகானந்தரை ஒரு கருவியாக ஆக்கினார்.

அபார ஞாபகசக்தி உடையவராக விளங்கிய விவேகானந்தர் பிராணிகளிடத்தில், பறவைகளிடத்தில், இயற்கைச் சூழலில் மனத்தைப் பறிகொடுத்து விடுவார். மனதை நன்கு ஒருமைப்

படுத்தும் ஆற்றல் பெற்றிருந்தபடியால் தியானம் இலகுவில் கைவரப் பெற்றார். அமெரிக்காவில் 'சிக்காகோ' என்ற நகரத்தில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் 1893ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ஆம் திகதி உரையாற்றியதன் மூலம் இந்து மதத்தின் பெருமையை உலகம் அறியும்படி செய்தார். 'கனவான்களே' என்று அழைப்பதை விடுத்து 'அன்பான சகோதர சகோதரிகளே' என்று அழைத்ததனால் அமெரிக்க மக்களும் இவர்பால் ஈர்க்கப் பட்டனர்.

விவேகானந்தர் வெற்றி வீரராக தாய்நாடு திரும்பியபொழுது இவரை முதன்முதலாக வரவேற்கும் பாக்கியம் இலங்கை மக்களுக்கே கிடைத்தது. 1891ஆம் ஆண்டு தைமாதம் 15ஆம் திகதி சுவாமி விவேகானந்தர் தமது சீடர்களுடன் கொழும்புக்கு வந்தார். நடை பாவாடை விரித்து, குடை, கொடி பிடித்து மலர் தூவி சுவாமியை வரவேற்றனர் இலங்கை மக்கள். இவர் யாழ்ப்பாணம் சென்றபொழுது யாழ் இந்துக் கல்லூரியில் 'வேதாந்தம்' என்ற தலைப்பிலே சிறந்த சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தி தமிழ் மக்கள் அனைவரையும் தன்வசப்படுத்தினார். 'நம் இயல்புக்குத் தக்கவாறு நம் கருத்துக்கள் இருந்தால் அதன் மூலம் நாம் வளர்ந்து வருவோம். முதலில் கீழ்ப்படியத் தெரிந்து கொண்டால் அதிகாரம் எமக்குத் தானே கிடைக்கும். தொண்டர்களாக இருக்கக் கற்றுக் கொண்டால் தலைவராகும் தகுதி தானே கிடைக்கும். பொறாமையை மனதிலிருந்து அகற்றினால் மகத்தான காரியங் களைச் சாதிப்பீர்கள்' என்று யாழ் மக்களுக்கு நல்லுபதேசம் செய்தார்.


இவர் 1898ஆம் ஆண்டு வங்காளத்தில் கல்கத்தாவிற்கு நான்கு மைல் தொலைவில் கங்கைக் கரையில் பேலூர் என்ற இடத்திலே முதலாவது இராமகிருஷ்ண மடத்தை நிறுவினார். அதற்கு உலகெங்கும் 134 கிளைகள் உள்ளன. இலண்டன் நியூயோர்க் நகரிலும் ஒரு நிலையான வேதாந்த சங்கத்தை நிறுவி 'லெக்கட்' என்பவரைத் தலைவராக்கி இந்துமத உயர்ச்சிக்கு வழிவகுத்தார். ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் மடங்கள் அமைக்கப்பட்டு சொற்பொழிவு, வகுப்புக்கள்,

புத்தகங்கள் வெளியிடுதல் போன்ற பணிகளும் நடைபெறு கின்றன. தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம், ஆங்கிலம், வங்காளம், குஜராத்தி, சமஸ்கிருத மொழிகளில் நூல்கள் வெளியிடப்படுகின்றன.

தற்கால மக்களை ஆன்மிக நெறியில் வாழ்வதற்கு ஊக்குவிக்கு முகமாக எல்லா மடங்களிலும் விரும்பி வருபவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றன. அத்தோடு புயல், வெள்ளத்தினால் ஏற்படு கின்ற அனர்த்தங்களுக்கு மிஷனறியினால் நிவாரணம் வழங்கப் படுகின்றது. சுவாமி விவேகானந்தர் அவர்கள் 39 ஆண்டுகள் வாழ்ந்துள்ள போதிலும் அவர் ஆற்றிய பணியோ பல்லாண்டுகள் தொடர்கின்றன. இவரது வருகையின் நூற்றாண்டு விழா 1997ஆம் ஆண்டு மிகப்பெரிய அளவில் கொண்டாடப்பட்டது. 1902ஆம் ஆண்டு ஆடி மாதம் 8ஆம் திகதி சுவாமிஜி இப்பூவுலக வாழ்வை நீத்தார். ஆனால் அவர் தமிழ் மக்கள் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றார்.

* * *

# சுப்பிரமணிய பாரதியார்



**நா**வலர் என்றால் ஆறுமுகநாவலரைக் குறிப்பது போல் பாரதியார் என்றால் அது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரையே குறிக்கும்.

1882ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11ஆம் திகதி நெல்லை மாவட்டத்து எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சின்னச்சாமி ஐயர். தாயார் லட்சுமி அம்மாள்.

இவரது இளமைப் பெயர் சுப்பிரமணியன். ஆனால் இவரை சுப்பையா என்று செல்லமாகக் கூப்பிடுவார்கள். இவர் தமது 5ஆவது வயதிலே தாயாரை இழந்துவிட்டார். இளமைக் காலத்திலேயே பாடல்கள் எழுத ஆரம்பித்துவிட்டார். சிறு வயதிலேயே கவிபாடும் ஆற்றல் கைவரப்பெற்ற பாரதியார் தன் புலமைச் சிறப்பால் 11ஆவது வயதில் எட்டயபுர சமஸ்தானத் தாரால் **'பாரதி'** என்னும் பட்டத்தைப் பெற்றார். எட்டயபுர சமஸ்தானத்திலுள்ள தமிழ்ப் பண்டிதர்களுடன் விவாதிப்பார்.

பாரதியார் தமது 14 ஆவது வயதில் 1897ஆம் ஆண்டு ஆடிமாதம் 7 வயதுப் பெண்ணாகிய செல்லம்மாளை திருமணம் செய்து கொண்டார். மனைவி மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார். இவருக்கு 16 ஆவது வயது நடந்து கொண்டிருக்கும்பொழுது இவரது தந்தையார் இறந்து விட்டார். அதனால் பெரிதும் மனம் வருந்திய பாரதி காசியில் வசித்த அத்தை முறையானவரிடம் சென்றார். அங்கு தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்தி போன்ற மொழிகளைக் கற்றார்.

20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞன் என்ற சிறப்பைப் பெற்றார். மகாகவியின் பாடல்கள் எல்லாம் எளிமையானவை. கற்றோர் மாத்திரம் விளங்கிக் கொள்ளும் ஏனைய பாடல்களைப் போலல்லாது பாமர மக்களும் படித்து இன்புறக்கூடிய வகையில் இலகு தமிழில் யாத்து அளித்த பெருமை பாரதியாருக்கே உரியது. இனிமை, ஓசைநயம், சொல்லழகு, யாப்பழகு நிறைந்து காணப்படும் அவரது செய்யுள்கள் இன, மொழி, சுதந்திர உணர்ச்சியோடு மிகுந்த தாய் நாட்டுப் பற்றுக் கொண்டனவாக விளங்குகின்றது.

மிகுந்த மனத்துணிவு கொண்ட பாரதியார் எந்த நேரமும் தடித்த கோட்டும், தலைப்பாகையும் அணிந்திருப்பார். மெலிந்த தோற்றம் உடையவர். எதற்கும் அஞ்சமாட்டார். நிமிர்ந்த கம்பீரமான தோற்றமுடையவர். மகாத்மா காந்தி, வ.உ. சிதம்பரனார் போன்றோருடன் இணைந்து இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு பலமுறை கைது செய்யப்பட்டார். இவர் பாடிய சுதந்திரப் பாடல்கள் போராட்டத்திற்கு உரமளித்தன. சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே' என சுதந்திரம் கிடைத்து விட்டதாக எண்ணி மகிழ்ந்து பாடுகின்றார்.

21ஆவது வயதில் எட்டயபுர மன்னனின் சமஸ்தானத்தில் கவிஞராக விளங்கிய பாரதி 22ஆவது வயதில் மதுரை சேதுபதி கலாசாலையில் தற்காலிக தமிழ்ப் பண்டிதராகப் பணி புரிந்தார். பின்னர் 'சுதேச மித்திரன்' நாளிதழின் துணை ஆசிரியராக விளங்கினார். 1905ஆம் ஆண்டு விவேகானந்தரின் சிஷ்யையான நிவேதா அம்மையாரைச் சந்தித்து தமது குருவாக ஏற்றுக் கொண்டார். 1907இல் 'இந்தியா' என்ற புரட்சி வாரஇதழின் ஆசிரியராக இருந்தார். தனது இந்தியத் திருநாட்டின் வளங்கள் அனைத்தையும் பிரித்தானிய அரசாங்கம் சூறையாடுவதைக் கண்டு மனம் கொதித்தார். ஆங்கிலேய ஆட்சியில் உயர்ந்த வேலை தமக்குக் கிடைத்திருந்தும் மிகுந்த வேதனம் அளித்திருந்தும் தன்மான உணர்ச்சியும், வீர சுதந்திர உணர்வும் இருந்ததனால் தனது வேலையை ராஜினாமாச் செய்து பத்திரிகையின் எழுத்தாள ராகப் பணிபுரிந்து பத்திரிகை வாயிலாக வீர சுதந்திர உணர்வைப் பொங்கியெழச் செய்தார். இவர் பல வீரம் செறிந்த பாடல்கள் எழுதிய குற்றத்திற்காக பலமுறை பொலிஸாரின் தொல்லைக்கு ஆளானார். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் வெறுப்பிற்கும் உள்ளானார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சியினால் இவர் சொந்த ஊரை விட்டு புதுவையில் குடியேறினார். புதுவையில் தான் தனது புகழ் பூத்த இலக்கியங்களைப் படைத்தார். 1908 ஆம் ஆண்டி லிருந்து 1921ஆம் ஆண்டுவரை அவரால் இயற்றப்பட்ட படைப்புக்கள் ஏராளம். தற்போதைய புதுக்கவிதைக்கு வடிவ மைத்த பெருமை பாரதியாரையே சாரும்.

புதுவையில் அழகு கொழிக்கும் மாஞ்சோலையில் குயிலைக் கண்டார். குயிற்பாட்டுப் பிறந்தது. கிறிஸ் என்னும் ரோமானிக் கவிஞனுடைய 'இராக்குயில்' பாரதியின் இதயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதன் விளைவே 'குயிற்பாட்டு' என க. கைலாசபதி ஒப்பியல் இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ளார். அறிஞர் சி. கனகசபாபதி ஆங்கிலக் கவிஞன் கோல்ரிட்ஜிர்

'பழைய மாலுமி' என்னும் கவிதையின் பிரதிபலிப்பே என்று கூறியுள்ளார். எது எப்படியிருப்பினும் காதல் ரசம் பொருந்திய 'குயிற்பாட்டு' கற்றோர் இதயங்களையெல்லாம் களிப்படையச் செய்து கவி பாடத்தூண்டுகிறது. இதைப் போலவே 'அழகுத் தெய்வம்', 'கவிதைக் காதலி', 'கண்ணன் பாட்டு' எல்லாம் பாரதி யின் காதல் உணர்வை புலப்படுத்துகின்றது.

இவை தவிர அரவிந்தரோடு அவருக்கு ஏற்பட்ட தொடர்பி னால் வேதாந்தச் சுவைமிக்க பாடல்களும் வசன கவிதைகளும் புதுவையில்தான் தோன்றின. பத்தாண்டுகாலம் புதுவையில் அஞ்ஞாதவாசம் வாழ்ந்தாலும் அது தமிழ் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

**'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்**
**வள்ளுவன்போல் இளங்கோவைப் போல்**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை**
**உண்மை வெறும் புகழ்ச்சியில்லை**
**ஊமையராய்ச் செவிடர்களாய் குருடர்களாய்**
**வாழ்கின்றோம் ஒரு சொற் கேளீர்**
**நாமமது தமிழரெனக் கொண்டிங்கு**
**வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்**
**சேமமுற வேண்டுமெனில்**
**தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்'**

என்பதில் உலகெல்லாம் சென்று தமிழினை வாழ்விக்க வேண்டும் என்ற பாரதியின் அவா நன்கு விளங்குகின்றது. அத்தோடு பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்படவேண்டும் என்றும் ஆணித்தரமாகக் கூறுகின்றார். 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று எமக்குக் கட்டளையே இடு கின்றார். குழந்தைகளைக்கூட நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்று பாரதியார் எண்ணுகின்றார்.

'ஓடி விளையாடு பாப்பா' என்பதில் எப்படியெல்லாம் குழந்தைகள் வாழவேண்டும் என அறிவுரை கூறுகின்றார்.

சாதிக்கொடுமையைக் கண்டித்து 'வெள்ளை நிறத்தொரு பூனை எங்கள் வீட்டில் வளருது கண்டீர்' என்ற பாடலில் நிறபேதம், சாதி பேதத்தைச் சாடுகின்றார். பாரதியார் கனகலிங்கம் என்பவருக்கு பூணூல் போட்டு சாதிக் கொடுமையை எதிர்க்கிறார்.

1912ஆம் ஆண்டில் பகவத் கீதையை தமிழில் மொழி பெயர்த்தார்.

> **'நல்லதோர் வீணை செய்தே**
> **அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ**
> **சொல்லடி சிவசக்தி'**

என்று பராசக்தியின் அருளை வேண்டுகின்றார். பாஞ்சாலி சபதம் என்னும் கவிதைத் தொகுதியில் பாரத மாதாவை பாஞ்சாலியாகக் கண்டு சிறந்த படைப்பு படைக்கின்றார்.

> **'செந்தமிழ் நாடென்னும் போதினிலே**
> **இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே'**

என்று மக்களுக்கு சக்தியைப் பிறக்க வைத்தார்.

> **'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் - பின்னர்**
> **வேறொன்று கொள்வாரோ'**

என சுதந்திரத்தின் அருமையினை எடுத்துரைக்கின்றார். முரசு கொட்டி சமூக, பொருளாதார, அரச விடுதலையை வேண்டு கின்றார்.

> **'அச்சந் தவிர்!**
> **ஆண்மை தவறேல்!**
> **உடலினை உறுதிசெய்!**
> **எண்ணுவது உயர்வு!**
> **ஏறுபோல் நட!'**

என்று ஔவையாரின் ஆத்திசூடி போன்று புதுமை மிக்க புரட்சி மிக்க புதிய ஆத்திசூடியை உருவாக்கினார். தனது கதைகளின் மூலம் நீதியை நிலைநாட்டினார். 'ஆறில் ஒரு பங்கு', 'சந்திரத் தீவு' மூலம் பெண் அடிமையினைச் சாடுகின்றார்.

பாரதியார் பாடாத துறையே இல்லையென்று கூறுமளவிற்கு எல்லாவற்றையுமே பாடியுள்ளார்.

தேசிய உணர்ச்சி மிக்க உண்மைக் கவிஞன் கோயில் மதயானை ஒன்றிற்கு தேங்காய், பழம் கொடுத்தபொழுது அந்த யானையால் தாக்குண்டார். நோயின் கொடுமையினைத் தாங்கினார். மருத்துவ மனை செல்ல மறுத்தார். இறுதியில் 1921ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ஆம் திகதி தமது 39ஆவது வயதில் இம்மண்ணுலகை விட்டு மறைந்தார். இறுதி மரியாதை செலுத்த வந்த மக்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவே வருந்தத்தக்க விடயம்.


சூரிய ஒளி எங்கும் பிரகாசிப்பதுபோல் அவருடைய உன்னத மான கற்பனை, மக்கள் மனதைத் தொடும் சந்தம், மக்கள் மனதை உலுக்கும் உணர்ச்சி ததும்பும் பாடல்களின் ஒலி எங்கும் கேட்டுக் கொண்டேயிருக்கும். அவர் பிறந்த ஊராகிய எட்டயபுரத்தில் அவர் ஞாபகார்த்தமாக மணி மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

'நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல்' என்ற கொள்கையுடைய பாரதியாரின் கவிதைகளும் பேச்சுக்களும் எழுத்துக்களும் இவ்வுலகம் உள்ள மட்டும் உயிர் வாழும் திறம் கொண்டவை. 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' என்ற புதுமைக் கவிஞனை, சுதந்திரப் பிரியனை, தீர்க்கதரிசியை உலகம் உள்ளளவும் போற்றிக் கொண்டே இருக்கும்.

❊ ❊ ❊

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

# கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை



கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் தென்னிந்தியாவிலுள்ள திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த தேரூரில் பிறந்தார். தேரூரில் மிகுந்த பாண்டித்தியம் பெற்ற பரம்பரையிலே தோன்றிய கவிமணி அவர்களின் தந்தையார் பெயர் சிவதானுப் பிள்ளை. தாயார் ஆதிலக்ஷ்மி. இவர் 1876ஆம் ஆண்டு ஆடி மாதம் பிறந்தார். பெற்றோருக்கு இவரொருவரே ஆண் குழந்தை ஆனதால் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டார்.

தேரூரில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்று பின் கோட்டாறு ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலத்தையும் கற்றார். பாடங்களை மிகுந்த ஆர்வத்தோடு பயின்று திருவனந்தபுரம் ஆசிரிய பயிற்சிக் கழகத்தில் படித்து பயிற்சி பெற்ற ஆசிரியரானார். கவிபாடும் திறமை கொண்ட இவர் திருவாவடுத்துறைச் சாந்தலிங்கத் தம்பிரானிடம் தமிழ்க் கல்வியை முறையாகப் பயின்று பெரும் புலமை அடைந்தார். இவர் தமது 20ஆவது வயதிலே தான் பிறந்த ஊராகிய தேரூரில் கோயில் கொண்டருளிய அழகம்மை பேரிலே பதிகம் ஒன்று பாடினார். மிகவும் இனிய பொருள் செறிந்த அப்பாடல்கள் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் பக்திப் பெருக்கைத் தருவனவாக விளங்கின. இளமையிலேயே கவிதை புனைவது அவருடைய பொழுதுபோக்காக இருந்தது.

புத்தேரி என்னும் ஊரில் பிறந்த உமையம்மை என்பவரைத் தமது வாழ்க்கைத் துணைவியாக தன்னுடைய 20ஆவது வயதிலேயே அமைத்துக் கொண்டார். திருவனந்தபுரம் மகாராஜா மகளிர் கல்லூரியிற் பல ஆண்டுகள் சேவையாற்றி இளைப் பாறினார். இவர் தமது 30 வருட ஆசிரிய சேவைக்காலத்தில் பல கவிதைகள் புனைந்துள்ளார். குயில்தேவி, ஆண்டாள், கவிராயன், யதார்த்தவாதி ஆகிய புனை பெயர்களுடன் பல பாடல்களை பத்திரிகைகளில் வெளிப்படுத்தினார். இப் பாடல்கள் யாவும் ஒன்றாகத் திரட்டப்பட்டு 'மலரும் மாலையும்' என்ற கவிதைத் தொகுதியாக வெளிவந்துள்ளது. கல்விப் பொதுத் தராதரப் பத்திர இலக்கியப் பரீட்சைகளுக்கு இவரது பாடல்களும் பாடமாக அமைந்து விளங்கியிருப்பது சிறப்பம்சமாகும். சிறு குழந்தை களும் விரும்பிப் படிக்கக் கூடியதாகவும் பாடல்கள் புனைந் துள்ளார். 'பாட்டியின் வீட்டுப் பழம் பானை', 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு' போன்ற பாடல்கள் பாலர் வகுப்புப் பிள்ளைகள் விரும்பிப் படிக்கக் கூடியவை. புத்த பகவானுடைய சரித்திரத்தை 'ஆசிய ஜோதி' என்னும் காவியமாகப் புனைந் துள்ளார். பிள்ளையவர்கள் சிறந்த அறிஞராகவும் விளங்கினார் என்பதை 'காந்தளூர்ச்சாலை' என்ற நூலும், 'நாஞ்சில் நாட்டு மக்கள் வரலாறு' என்ற ஆங்கிலக் கட்டுரையும் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.


சென்னை மாநில தமிழ்ச் சங்கத்தினர் இவருக்கு 1940ஆம் ஆண்டு 'கவிமணி' என்னும் பட்டத்தை வழங்கினர். கவிமணியின் 70ஆம் ஆண்டு நிறைவு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கவிமணி அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து ஜெய ஆண்டு அதாவது 1954ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் அமர வாழ் வெய்தினார். அது கேட்டு, தமிழறிஞர் கலங்கினர். நாடெங்கும் அனுதாபக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அவரது பூதவுடல் மறைந்தாலும் அவரது பாடல்கள் மூலம் இவர் இன்னும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

❋ ❋ ❋

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

# அறிஞர் அண்ணா



**த**லைவர் ஈ.வே. ராமசாமிப் பெரியாரின் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து தொண்டு புரிந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள். இவர் 1909ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 15ஆம் திகதி காஞ்சி மாநகரில் பிறந்தவர். இவரது தந்தையாரின் பெயர் நடராசா. தாயார் பங்காரு அம்மையார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அண்ணாத்துரை.

பச்சையப்பன் தொடக்கப்பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியை திறமையோடு கற்றார். தொடர்ந்து சென்னை சென்று அங்குள்ள பச்சையப்பன் கல்லூரியில் படித்து MA. பட்டம் பெற்றார். தமிழில் மிக ஆர்வம் கொண்டு 'சுயமரியாதை இளைஞர் மன்றம்' நடத்தும் கருத்தரங்குகளில் பங்குபற்றி சிறந்த சொற்பொழிவாள ராக விளங்கினார். பத்திரிகைகளிலும் நல்ல பல கருத்துக்களை எழுதியும் வந்தார்.

1937 ஆம் ஆண்டு 'நவயுகம்' என்ற வார இதழின் ஆசிரியராகப் பணி புரிந்தார். 1938 ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் இந்தி மொழி கட்டாய பாடமாக்கப்பட்டது. அதனை எதிர்த்து நடந்த போராட்டங்களிலெல்லாம் அண்ணா பங்குபற்றினார். 1939இல் தான் ஈ.வே.ரா பெரியாரின் தொடர்பு அண்ணாவுக்குக் கிட்டியது. பெரியாரின் நீதிக் கட்சியின் செயலாளராக விளங்கி 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கொள்கைப் பிரச்சாரத்தை மேற்கொண்டு பல இடங்களுக்கும் சென்று தொண்டாற்றி 'நீதிக்கட்சி' என்ற பெயரையும் 'திராவிட முன்னேற்றக்கழகம்' என்று மாற்றினார். இக் காலகட்டத்தில்தான் ராணி அம்மையாரைத் திருமணம் செய்தார்.

ஈ.வே.ரா. பெரியாரோடு பத்து ஆண்டுகள் சேர்ந்திருந்து தொண்டு புரிந்த அண்ணா அவர்கள் பெரியார் மணியம்மை என்ற பெண்ணைத் திருமணம் செய்தபொழுது மனக்கசப்பு அடைந்து அவரை விட்டுப் பிரிந்து 1949ஆம் ஆண்டு முற்போக்குவாதிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்து பொதுச் செயலா ளராக இருந்து பல முன்னேற்றப் பணிகளை மேற்கொண்டார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் நேருவுக்கு கறுப்புக் கொடி காட்டியது, புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போராடியது போன்ற குற்றங்களுக்காக 3 மாதம் சிறை சென்றார். 1956இல் தி.மு.க. தமிழ்நாடு பொதுத் தேர்தலில் கலந்து கொண்டு 1957ஆம் ஆண்டு தான் பிறந்த ஊரான காஞ்சித் தொகுதியில் போட்டியிட்டு சட்டமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். 1963ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டம் காரணமாக 6 மாதம் சிறை சென்றார். 1967ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டார்.

அண்ணாவின் பேச்சைக் கேட்பதற்கென்றே மக்கள் பெருந் திரளாக வருவார்கள். அதனால் மக்கள் கலைந்து செல்லாமல் இருப்பதற்காக அண்ணாவின் பேச்சு இறுதியாகத்தான் நடை பெறும். அழகு தமிழில் அருமையாகப் பிரசங்கம் செய்வார். தமிழ் மலர்ச்சியே அவரது மூச்சு ஆகையால் மணிக்கணக்காகப் பேசினாலும் மக்கள் அமைதியாக இருந்து கேட்பார்கள்.

ஒரு கூட்டத்தில் அண்ணா பேசுவதற்காகச் சென்றிருந்தார். நள்ளிரவு 1.30 மணியாகியும் அண்ணாவின் பேச்சு நடைபெறாது கூட்டம் நடந்து கொண்டேயிருந்தது. மக்களும் ஆவலோடு அமைதியாகக் காத்திருந்தனர். நேரம் போய் விட்டபடியால் இனிக் கூட்டம் நடத்தக்கூடாதென பொலிஸ் தடை உத்தரவு போட்டது. இதனை அறிந்த அண்ணா அவர்கள் இரண்டு நிமிடம் பேச அனுமதி கேட்டுக் கொண்டு மைக் முன்னால் வந்தார். மக்கள் பலத்த கரகோஷம் செய்தனர். அண்ணா கூட்டத்தினரைப் பார்த்து, 'நாம் இருப்பதோ கடற்கரை, நேரமோ ஒண்டரை, இப்போ நமக்குத் தேவை நித்திரை, நீங்கள் எமக்கிடுவதோ உங்கள் முத்திரை' என்றார். மக்கள் மிகுந்த சந்தோஷத்தோடு எழுந்து சென்றார்கள். அண்ணா அவர்கள் தமிழ் மக்களின் எழுச்சிக்காகவே பாடுபட்டவர். தொடர்ந்து இவர் மேற்கொண்ட பணியினால் 1967ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியை படுதோல்வி அடையச் செய்து தமிழ்நாடு என்ற பெயரில் தி.மு.க ஆட்சியை நடத்தினார். அரசியலில் மட்டும் ஆர்வம் காட்டாது கலைத்துறையிலும் அவர் ஈடுபாடு கொண்டிருந்தார். 1968ஆம் ஆண்டு சென்னையில் 2ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சீரும் சிறப்புமாக நடைபெற அண்ணா ஆற்றிய பணியே முக்கியமானது. பல சமூகப் பிரச்சினை களையும் பல்வேறு சீர்திருத்தங்களையும் மக்கள் உணரும் பொருட்டு பத்திரிகைகளில் எழுதி வந்தார். மேல் நாடுகளுக்கும் சென்று வந்தார். தமிழ் மொழிக்குச் சிறப்புத் தேடுவதில் அண்ணா தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார். தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டபொழுது மேடையில் ஏறமுடியாதளவு நோய்வாய்ப்பட்டிருந்தார். இருந்தும் பலரின் உதவியோடு மேடையேறி 'எனக்கு இருப்பது ஒரு உயிர். அது போகப் போவதும் ஒருமுறைதான். அது தமிழ்நாட்டில் போவது எனக்கு

மகிழ்ச்சியே' என்று கூறினார். இதிலிருந்து அவருக்கு தமிழ் மீதிருந்த மோகம் நன்கு விளங்குகின்றது. அரசியலில் அவர் ஈடுபட்டிருந்தாலும் கலையுலகிற்கு தன் சேவையை பூரணமாக அர்ப்பணித்து வாழ்ந்த அண்ணா அவர்களின் பேச்சினால் கவரப் பட்டவர் தற்போதைய தமிழ் நாட்டு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள். தமிழகம் எங்கும் அண்ணாவின் 60ஆம் ஆண்டுப் பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1968ஆம் ஆண்டு புற்றுநோய் அண்ணாவைப் பீடித்தது. அமெரிக்காவில் அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இருந்தும் 1969ஆம் ஆண்டு மாசி மாதம் 2ஆம் திகதி அண்ணா இறைவனடி சேர்ந்தார். அவரது மரணச் செய்தி அறிந்த நாட்டு மக்கள் வெள்ளமாகத் திரண்டு வரத் தொடங்கினார்கள். பொது மக்களின் பார்வைக்காக அவரது பூதவுடல் சென்னை ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது. பின்னர் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மெரினா கடற்கரையில் கம்பர் சிலைக்கருகில் அடக்கம் செய்யப் பட்டது. அவரது ஆட்சிக் காலத்தில் எவ்வளவு பெரிய பிரச்சினைகள் ஏற்பட்டபோதும் சிறிதும் பதற்றமடையாது அதனைத் தீர்த்து வைக்கக்கூடிய வல்லமை பொருந்தியவர்கள் அண்ணா அவர்கள். அதனால் 'எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது' என்று வாசகம் அவரது கல்லறையின் மேலுள்ள பளிங்கு மேடையில் பொறிக்கப்பட்டுள்ளது. 1999ஆம் ஆண்டு கலைஞர் கருணாநிதி அவர்கள் பெரியளவில் அண்ணாவின் சிலை யினை எழுப்பியுள்ளார்கள். மெரினா கடற்கரையில் மக்களுக்கு எப்பொழுதும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார் அண்ணா அவர்கள்.

❋ ❋ ❋

# கவிக்குயில் சரோஜினிதேவி நாயுடு




*சரோஜினிதேவி அவர்கள் வங்காள தேசத்தில் பிறந்தவர். இவரது தந்தையார் அகோரநாத் சட்ட போபாத்தியாயர். தாயார் வரதசுந்தரி அம்மையார். இவர் 1879ஆம் ஆண்டு மாசி மாதம் 13ஆம் திகதி பிறந்தார். தந்தையார் ஹைதராபாத்தில் கல்லூரி முதல்வராகக் கடமை புரிந்தவர்.அதனால் சரோஜினிதேவியை யும் நன்கு படிப்பிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அவரை சென்னை மாநிலத்தில் மெட்ரிகுலேசன் பரீட்சை எழுதச்*

செய்தார். திறமை மிக்க மாணவியாகத் திகழ்ந்தாலும் மேற் கொண்டு படிக்க மறுத்தார். அதனால் மன வேதனையடைந்த தந்தை கோபமிகுதியினால் சரோஜினிதேவியை ஓர் அறையில் பூட்டி பட்டினி போட்டார். தனது நன்மைக்காகத் தானே தந்தை இப்படிச் செய்கிறார் என ஆழ்ந்து சிந்தித்த சரோஜினிதேவி தந்தை மேற் கோபம் கொள்ளாது அவரிடம் தான் செய்த தவறை மன்னிக்கும்படி வேண்டினார். மேற்கொண்டு படிப்பதாக உறுதி யளித்தார். மகிழ்ந்த தந்தை இலண்டன் சென்று படிக்க ஒழுங்குகள் செய்தார். ஹைதராபாத் நிஜாம் என்பவர் பண உதவி புரிந்தார். இலண்டன் சென்ற இவர் பாடத்திலும் பார்க்க கவி புனைவதில் ஆர்வம் காட்டினார். அதனால் பரீட்சையைக் கோட்டை விட்டார். இருந்தும் ஆங்கில அறிவு பெற்று **கவிக்குயில்** என்று போற்றப்படு மளவிற்கு கவிதைகள் எழுதினார்.

பால்ய விவாகம் செய்து மனைவியை இழந்திருந்த கோவிந்த ராஜுலு நாயுடுவை விரும்பி மணம் புரிந்தார். 1898இல் இவர்கள் விவாகம் நடைபெற்றது. அதனால் இவர் சரோஜினிதேவி நாயுடு என்ற பெயரைப் பெற்றார். இவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தனர். அவர்களை அன்போடு போற்றி வளர்த்தார். குடும்பப் பெண்ணாக விளங்கியதோடு அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவை விடுவிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் புரட்சிப் பெண்ணாக எழுந்தார். இந்து முஸ்லீம் பெண்களின் விடுதலைக் காகப் போராடப் புறப்பட்டார். அவ்வேளை கோபாலகிருஷ்ண கோகலே என்பவரும் இவருக்குத் துணை புரிந்தார். இவர் தமது கவிதைத் திறத்தாலும் பேச்சுத் திறத்தாலும் பெண்களைத் தட்டியெழுப்பினார். அஞ்சா நெஞ்சங் கொண்ட சரோஜினிதேவி அவர்கள் மிகுந்த ஆளுமை உடையவர்கள். இந்திய ஆண்கள் ஆயுதங்களுடன் நடமாடக்கூடாது என்று பிரிட்டிஷ் அரசு தடை விதித்தபொழுது ஆயுதம் ஏந்துவது இந்திய மக்களின் பிறப்புரிமை என்று முழக்கமிட்டார். இவரது துணிவையும் பேச்சு வல்லமை யையும் கண்டு வியந்த சேர் ஜேம்ஸ் மெஸ்டன் என்ற கவர்னர் இவரை விருந்தினராக அழைத்து கௌரவப்படுத்தி அனுப்பினார்.


காந்திஜியுடன் சேர்ந்து அகிம்சைப் போராட்டத்திலும் ஈடு பட்டார். அதனால் 'பாரதத்தின் கவிக்குயில்' என்று காந்தியால் பாராட்டுப் பெற்றார். இவர் தலைமை தாங்கி பல போராட்டங் களை வழி நடத்தினார். இவரைக் கைது செய்ய ஆங்கில அரசு நினைத்தது. ''அந்நிய நாட்டவன் என்னைத் தொடக்கூடாது நானாகவே கைதாகி உன்னுடன் வருகிறேன்'' என்று கர்ஜித்த இவரை அதிகாரி வியப்புடன் நோக்கினான். இவரைச் சிறையில் அடைத்து வைத்தான்.

ஆங்கில அரசு இவரைக் கைது செய்து சிறையில் அடைக்கும் போதெல்லாம் இவர் சிறையிலே ரோஜாச் செடிகளை நட்டு அழகு பார்ப்பார். இயற்கையிலே தனது மனதைப் பறி கொடுத்த சரோஜினிதேவியை சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி வெளிநாடு களில் எடுத்துரைக்க மகாத்மா காந்தி தேர்ந்தெடுத்தார். இவரது திறமையினாலும் ஆளுமையினாலும் இவர் உத்தரப் பிரதேச கவர்னராக சிலகாலம் பதவி வகித்தார்.

இனமத பேதமின்றி எல்லோரும் இந்தியர்கள் என்ற மனித நேயத்துடன் செயல்பட வேண்டும் என விரும்பினார். இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகவும், தேச விடுதலைக்காகவும் பாடுபட்ட சரோஜினிதேவி நாயுடு அவர்கள் மூச்சுத் திணறல் நோயால் பாதிக்கப்பட்டு 1949 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2ம் திகதி இறைவனடி சேர்ந்தார். சுதந்திர இந்தியாவைப் பார்த்து மகிழ்ந்த இவருடைய பிறந்த நாளாகிய மாசி மாதம் 13ஆம் திகதி தான் 'இந்திய மகளிர் தினம்' எனக் கொண்டாடப்படுகிறது. பாரத தேசத்தின் கீர்த்தி மிகுந்தவர்களில் கவிக் குயிலும் ஒருவராக விளங்குகின்றார்.

❋ ❋ ❋

# மகாத்மா காந்தி



இந்தியாவின் விடுதலைப் போராட்ட சரித்திரத்திலே முக்கிய மான கதாநாயகன் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியடிகள்.

ஹிட்லர் ஆரம்பித்த யுத்தம் காலனி ஆதிக்க நாடுகளின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த மாற்றமே இந்திய விடுதலையின் வேகத்தை அதிகரித்தது என்று கூறலாம். அந்நியரின் ஆட்சியில் அடிமைப்படுத்தப்பட்டுக் கிடந்த பாரத தேசத்தை விடுவிக்கவும் பாரத அன்னையின் அடிமை விலங்கை

ஒடிக்கவும் காந்தி நாட்டின் விடுதலைக்காக உழைத்ததோடு சமூகத்தில் நல்ல விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியவர்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அகிம்சையையே தனது ஆயுதமாக எடுத்து போர்க்கொடி உயர்த்தினார். 1942 ஆம் ஆண்டு ஆவணி மாதம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சுதந்திரப் போருக்கு வித்திட்டவர் அண்ணல் காந்தியடிகளே. இவரின் தாயார் புத்தலிபாய். புத்தலிபாய் ஒரு பெண் குழந்தையையும் மூன்று ஆண் குழந்தைகளையும் பெற்றெடுத்தார். இவர்களில் காந்தியடிகள்தான் கடைசிப் பிள்ளை. குஜராத் மாநிலத்திலுள்ள போப்பந்தர் என்னும் ஊரில் வைசிகர் குலத்தில் 1869 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 2 ஆம் திகதி காந்தி பிறந்தார். காந்தியின் ஆரம்பக் கல்வி போப்பந்தரில் தான் தொடங்கியது. 7 ஆவது வயதில் தந்தையின் வேலை மாற்றத்தால் 'ராஜ்கோட்' என்ற ஊரில் அவரது படிப்பு தொடர்ந்தது. எந்நேரமும் ஊக்கத்தோடு கல்வியைக் கற்றார். மிகுந்த கூச்ச சுபாவம் உடையவர். இவர் தமது 12 ஆவது வயதிலே பார்த்த அரிச்சந்திர நாடகமே இவரை மிகவும் கவர்ந்து சத்தியசீலராக விளங்கச் செய்தது. காந்தி அவர்கள் தமது 13 ஆவது வயதிலே கஸ்தூரிபாய் என்ற பெண்ணை மணந்து கொண்டார். இல்லறம் நல்லறமாக நடந்தது. காந்திக்கு 16 ஆவது வயது நிரம்பிய பொழுது 1885 ஆம் ஆண்டு அவரது தந்தையார் இறந்து போனார். 1887 ஆம் ஆண்டு காந்தி பவநகர் கல்லூரியில் மெட்ரிகுலேஷன் சித்தியடைந்தார். அவர்களது குடும்ப நண்பர் மாவ்ஜிதவே என்பவரின் உதவியினால் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் படிக்க பம்பாய் சென்றார். 18 வயதான காந்தி புரட்டாதி மாதம் 4ஆம் திகதி இலண்டனுக்கு பயணமானார். இவர் இலண்டனுக்குச் சென்றபொழுது இவருக்கு ஒரு குழந்தை பிறந்திருந்தது. அதனைப் பிரிந்து போவது மனதுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுத்தது. இருந்தும் தான் பாரிஸ்டராக வரவேண்டும் என்ற விருப்பத்தால் குடும்ப சுகதுக்கம் எல்லாவற்றையும் புறக்கணித்து இலண்டன் சென்றார். அங்கு 4 வருடங்கள் படித்து 1891ஆம் ஆண்டு ஆனி மாதம் 10 ஆம் திகதி பரீட்சையில் சித்தியடைந்து பாரிஸ்டராகத் தேறினார். எஸ்.எஸ். அஸ்ஸாம் என்ற கப்பலில் 12 ஆம் திகதியே தாயகம் திரும்பினார்.

1893 ஆம் ஆண்டு சித்திரை மாதம் காந்தி ஆபிரிக்காவுக்குப் பயணமானார். அங்கு தான் 'நேட்டால் இந்தியர் காங்கிரஸ்' என்ற அமைப்பை ஸ்தாபித்து தேசிய சுயமரியாதைக்கான போராட்டத்தையும் ஆரம்பித்தார். இந்தியர்கள் படும் துயரங்களைத் தாமே அனுபவித்த காந்தி 1914 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தார். சுதந்திரப் போராட்டத்தை அகிம்சையையே தனது ஆயுதமாகக் கொண்டு ஆரம்பித்து நாட்டின் விடுதலைக்காக உழைத்தார். 'மற்றவர்களின் சொத்துக்களுக்குக் கெடுதல் ஏற்படாத வகையில் உன் சொத்தைப் பயன்படுத்திக்கொள்' என்ற கோட்பாட்டை உறுதியாக பற்றிக் கொண்டதனால் காந்தி மகாத்மா ஆனார். கல்வியில் சீர்திருத்தங்கள் வேண்டும் எனக் கூறினார். தீண்டாமை ஒழிப்பை ஆதரித்து பல இடங்களுக்கு கால்நடையாகச் சென்று மக்களைப் பண்படுத்தினார். எல்லா மக்களுக்கும் ஆலயம், பொதுச் சொத்து ஒருவரையும் தள்ளி வைக்கக்கூடாது என்று ஆலயப் பிரவேசம் செய்தார். கை இராட்டினத்தைச் சுழற்றினார். கதர் ஆடையை அணிந்தார்.

1917 இல் காந்தியின் சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்ற பொழுது பல இந்தியர்கள் காந்தியின் பக்கம் சாய்ந்தனர். முழு பாரதமும் காந்தியின் பக்கம் திசை திரும்பியதால் வெள்ளையர்கள் செய்வதறியாது திகைத்தனர். உப்புச் சத்தியாக்கிரகம் செய்த பொழுது அவர் சென்ற இடமெல்லாம் மக்கள் பொன்னும் பணமுமாக அள்ளிக் கொடுத்தனர். அந்நியரை ஆயுதத்தால் தாக்காது அகிம்சை வழியிலே வெளியேற்றிய பெருமை காந்தியடிகளுக்கே உரியது. பலமுறை சிறை சென்ற காலத்தில் சிறையிலே தான் தனது சுயசரிதமாகிய 'சத்திய சோதனை'யை எழுதினார். அந்நியரின் ஆட்சியில் அகப்பட்டு அல்லலுற்ற பாரத மாதாவின் அடிமைத்தளையை அகற்றப் போராடிய அகிம்சா மூர்த்தி அண்ணல் காந்தியின் அயராத முயற்சியினால் 1947ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி பாரதம் சுதந்திரம் பெற்றது.

இந்தியா சுதந்திரம் அடைந்து 51/2 மாதம் கூட முடியவில்லை. 1948ஆம் ஆண்டு தை மாதம் 30ஆம் திகதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கல்நெஞ்சம் கொண்ட நாதுராம் விநாயக கோட்சே என்ற இந்துத் தீவரவாதியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற அன்பு நெஞ்சம் கொண்ட காந்தியடிகள் 'ராம் ராம்' என்ற உச்சரிப்போடு உயிர் துறந்தார். காந்திஜியின் மறைவை ஜீரணிக்கமுடியாது மக்கள் திணறினார்கள். சுதந்திர போராட்டக் காலத்தில் வாழ்ந்த பாரதியார்


**'வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம்**
**தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு**
**பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந்தன்னை**
**வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீ வாழ்க வாழ்க'.**

என்று பார் அறிய முழுக்கமிட்டார்.

மிகவும் சிக்கனமாகவும், எளிமையாகவும் வாழ்ந்த காந்தி, 'சத்தியம்' என்ற சொல்லின் இலக்கணமாக வாழ்ந்த காந்தி, அகிம்சை வழியில் வாழ்ந்து காட்டிய காந்தி மகாத்மாவைப் போல வாழ முயற்சிப்போமாக.

* * *

# இரவீந்திரநாத் தாகூர்



**பா**ரத தேசத்தின் தனிப் பெருஞ்சிறப்பு மிக்க கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் ஆவார். இவர் கல்கத்தாவில் 1861ஆம் ஆண்டு வைகாசி மாதம் 7ஆம் திகதி பெரிய ஜமீன் குடும்பத்தில் கடைசி மகனாகப் பிறந்தார். ஜமீன் குடும்பம் என்றபடியால் மிகுந்த செல்வச் செழிப்போடு வாழ்ந்தார். இவரது தாயார் பெயர் சாரதாதேவி. இவரது தந்தையார் தேவேந்திரநாத் தாகூர் சிறந்த

பண்புகள் கொண்டவர். ஏழை எளியவர்களில் மிகுந்த இரக்கம் உடையவர். தாகூர் அவர்கள் பாடசாலை சென்று படிப்பதை விரும்பவில்லை. தந்தையிடமிருந்து ஆங்கிலம் வடமொழி ஆகிய மொழிகளைத் கற்றுத் தேர்ந்தார். சிறு வயதிலேயே கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்டு பானுசிங் என்ற புனைபெயரில் தமது 15ஆவது வயதில் பிருதுவி இராஜனைப் பற்றி நாடகம் எழுதினார். எழுதியது மட்டுமன்றி தன்னுடைய வயதுத் தோழர் களைக் கொண்டு நாடகமாக நடிக்கவும் செய்தார்.

இவர் தந்தையிடம் புவியியல், தாவரவியல், காளிதாஸனின் மேகதூது போன்றவற்றையும் இமயமலையின் அடிவாரத்தி லிருந்து கற்றுக் கொண்டார். இவர் பிறந்து வாழ்ந்த காலம் அந்நியர் ஆதிக்கம் மேலோங்கிய காலம். அதனை எதிர்த்துப் பொங்கி யெழுந்து விடுதலை வேண்டி வீரப் பாடல்கள் புலவர்களால் பாடப்பட்ட காலம். அதனால் இவருடைய படைப்புக்களிலும் இந்த இயக்கத்தின் எதிரொலியை நாம் காணலாம்.

செல்வந்தராக தாகூர் பிறந்தாலும் செல்வச் செழிப்பிலே வாழ்ந்தவர்களை அறவே வெறுத்தார். சுகபோக வாழ்வைத் துறந்து மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்.

பாடசாலைக் கல்வியை விரும்பாது போனாலும் 1878ஆம் ஆண்டு பாரிஸ்டர் பட்டம் பெறுவதற்காக இங்கிலாந்து சென்றார். எனினும் 1 1/2 வருடத்தின் பின் எந்தப் பட்டமும் பெறாது நாடு திரும்பினார். திரும்பவும் 1881ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்றார். சட்டப் படிப்பையும் இடைநடுவில் விட்டுவிட்டு நாடு திரும்பினார். பட்டங்களைப் பெறாவிட்டாலும் அவருடைய ஆத்மாவிலிருந்து வெளிப்பட்ட கவிதையூற்று அவரை எழுத்துப் பணியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது.

1883ஆம் ஆண்டு பேனீராஸ் சௌத்ரி என்பவரின் மகள் மிருணாளினி என்ற பெண்ணைத் தன் துணைவியாக்கிக் கொண்டார். ஆடம்பரமற்ற எளிய வாழ்வு வாழ்ந்தார். விலை யுயர்ந்த துணிமணிகளை அணிய மனைவியையோ, மக்களையோ

அனுமதிக்கமாட்டார். கவிஞர் தாகூரின் சிந்தனைகள் மிகமிக ஆழமானவை. தூரதரிசனம் மிக்கவை. இந்திய சுதந்திரத்திற்காக தன்னாலான பங்களிப்பை நல்கியுள்ளார்.

1881ஆம் ஆண்டு 'வால்மீகியின் பிரபாவம்' என்ற இசை நாடகத்தை எழுதினார். தொடர்ந்து 'சந்தியா (மாலை) சங்கீதம்' என்ற கவிதைத் தொகுதியை எழுதி வெளியிட்டார். அவரால் எழுதப்பட்ட நாடகங்கள் பல. 'பிராக்ரிதி பிரதிஷோத்', 'தியாகம்', 'மாலினி', 'பெய்குந்தர் கதை', 'சித்ராங்கதர்', 'கர்ணனும் குந்தியும்', 'அஞ்சலகம்' போன்றவை தாகூரை உலக அரங்கிலே சிறந்த நாடக ஆசிரியராக இனங்காட்டியது. இவற்றுள் 'அஞ்சலகம்', 'யாகம்', 'சித்ராங்கதர்' என்ற நாடகங்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

கல்கத்தாவின் அருகேயுள்ள பால்பூர் என்ற நகரத்தில் 'சாந்தி நிகேதன்' என்ற ஆச்சிரமத்தை இவருடைய தந்தையார் தேவேந்திர நாத் தாகூர் ஆரம்பித்து நடத்தி வந்தார். அவ்வாச்சிரமத்தில் எல்லோருடனும் தாமும் ஒருவராக இருந்து ஒரு குடிசையமைத்து அதில் எளிமையாக அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். இவ்வாச்சிரமமே 'விஸ்வ பாரதி' என்ற பல்கலைக்கழகமாக உலகத்தால் போற்றப்படும் இடமாகும். அநீதியும், அக்கிரமமும், அடக்குமுறையும் அற்ற ஒரு சுதந்திர உலகத்தையே விரும்பிய தாகூர் அவரது பாடல்கள் மூலம் அதனை வெளிப்படுத்தினார். மகாத்மா காந்தியடிகளால் விரும்பிக் கேட்கப்பட்ட 'ஜன கண மன' என்று ஆரம்பமாகும் இந்திய தேசியகீதம் இவரால் இயற்றப் பட்டதே.

'நைவேத்தியம்' என்ற கவிதைத் தொகுதியை இவர் வெளியிடும் காலத்தில் இவரது மனைவி மிருணாளினி காலமாகி விட்டார். அவளது பிரிவைத் தாங்காது 'ஸ்மரண்' (நினைவு) என்ற கவிதையை எழுதி வெளியிட்டார். தாயற்ற தன் செல்வ மகன் சுமந்திரனுக்காக 'பிறைநிலா' என்ற குழந்தைப் பாடற் றொகுதியை எழுதி வெளியிட்டார்.

தாகூர் 'ஆன்மிகம் மனிதனைத் தெய்வமாக்கும்' என்ற நம்பிக்கை உடையவர். அவர் உள்ளத்தில் புதையுண்டு கிடந்த ஆன்மிகத் தத்துவங்களின் பிரவாகமே 'கீதாஞ்சலி' என்னும் கவிதைக் காவியம்.

தாகூர் 1912ஆம் ஆண்டு இலண்டன் சென்றபொழுது பிரபல ஆங்கிலக் கவிஞர்கள் வில்லியம் பவுண்சையும், எஸ்ரா பவுண்சையும் சந்தித்து கீதாஞ்சலியின் ஆங்கில மொழிபெயர்ப்பை அவர்களுக்குக் காட்டினார். அவர்கள் தாகூரின் புலமையை வியந்து 'ஹரியத் மன்றோவின் கவிதை' என்ற ஆங்கில ஏட்டிற்கு அனுப்பி வெளிவரச் செய்தனர். இதனால் தாகூரின் புகழ் இங்கிலாந்தில் மட்டுமன்றி உலக நாடுகள் பலவற்றிற்கும் பரவியது. 1913ஆம் ஆண்டு உலகப் பரிசான நோபல் பரிசு 'கீதாஞ்சலி'க்குக் கிடைத்தது. பேராசிரியர் சீனிவாச ஐயங்கார் 'குருதேவரின் குரல்' என்று 'கீதாஞ்சலி'யை தமிழில் மொழி பெயர்த்தார். தெய்வம் இயற்கையில் துயில்வதாக தாகூர் 'கீதாஞ்சலி'யில் பாடியுள்ளார்.

பிரித்தானிய அரசாங்கம் இவருடைய இலக்கியப் புலமையை அறிந்து 1915ஆம் ஆண்டு இவருக்கு 'சேர்' பட்டம் வழங்கி கௌரவித்தது. ஆனால் 1919ஆம் ஆண்டு ஆங்கிலேய ஏகாதிபத்தியம் பஞ்சாப்பில் 400 இற்கு மேற்பட்ட இந்தியர்களைப் படுகொலை செய்வித்தமையை அறிந்து தனது 'சேர்' பட்டத்தைத் தூக்கியெறிந்தார்.

தாகூரின் கவிதைத் தொகுதிகளில் 'கீதாஞ்சலி', 'நைவேத்தியம்', 'பலாசா' (கொக்குக் கூட்டம்), 'செபா' (ஆற்றைக் கடத்தல்), 'மஹாவா' (திரட்டு) போன்றவை மிகப் பிரபல்யம் பெற்றவை. தாகூர் 3000 இற்கு மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ளார். இவரது கவிதைத் தொகுப்பு 'Golden Book of Tagore' என்ற புத்தகமாக வெளிவந்துள்ளது.

இவர் 'கல்பகுலச' (கதைக்கொக்கு) 'லிபிகா தின்சங்கி' (மூவர்) போன்ற சிறுகதைகளும் எழுதியுள்ளார். அத்தோடு 'கோரா' (உடைந்த மரக்கலம்) 'துயிபோன்' (இரு சகோதரிகள்) 'மாலஞ்சி'

(பூந்தோட்டம்) 'ராஜரிஷி', 'விநோதினி', 'நௌகாடுபி' (படகு மூழ்கிறது) போன்ற நாவல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவை தாகூரை இந்தியாவின் மாபெரும் படைப்பாளியாக மக்களின் இதயங்களில் உலாவரச் செய்தது.

தாகூர் நாற்பதுக்கு மேற்பட்ட நாடகங்களை வங்காள மொழியில் எழுதியுள்ளார். பெரும்பாலானவை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவருடைய வரலாறும் நூலாக உருப் பெற்றுள்ளது. 'சேலேவேலா' (இளமைப் பருவம்) என்ற நூலும் 'ஜீவன் ஸ்மிருதி' (வாழ்வின் நினைவு) என்ற நூலும் இவருடைய வாழ்க்கை வரலாற்றை உலகுக்கு எடுத்தியம்புபவை.

1922ஆம் ஆண்டு இவர் எழுதிய 'முக்தா தாரா' என்ற நாடகம் Free current the water falls என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டது.

1933ஆம் ஆண்டு வெளிவந்த சாந்தலிகா என்ற நாடகமும் பலரால் பாராட்டுப்பெற்றது. கிராமத்தின் இயற்கை எழிற் கோலங்களை தாகூர் இரசித்தார். விவசாயிகளின் கடுமையான உழைப்பைக் கண்ட தாகூர் 'கடின உழைப்பில் உழைக்கும் உழைப்பாளியின் வியர்வைத் துளியில் இறைவனைக் காணலாம்' என்று கவிதை எழுதினார். 'நான் வேலை செய்யும் பொழுது ஆண்டவன் என்னை மதிக்கிறான். நான் கானம் இசைக்கும் பொழுது இறைவன் என்மீது அன்பு செலுத்துகிறான்' என்று கவிதை யாத்தார்.

மனித நீதிக்காக, சமூக நீதிக்காக போராடியவர் தாகூர். மனித வர்க்கத்தின் உரிமைப் போராட்டத்தில் சாதிமத பேதமின்றி தன் பூரண ஒத்துழைப்பைக் கொடுத்து வாழ்ந்தவர் தாகூர்.


தாகூரின் பெருமையை அறிந்த அரவிந்தர் 'ஆயிரம் ஆண்டு களுக்கு ஒரு தாகூர் போதும்' என்று கூறி மகிழ்ந்தார். தாகூரின் கவிதைகளில் தன்னம்பிக்கை, உயர்ச்சி, நல்ல கருத்து பரவிக் காணப்படும்.

1940ஆம் ஆண்டு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் தாகூருக்கு டாக்டர் ஒவ் லிட்ரேச்சர் (Doctor of Literature) என்ற விருது வழங்கி கௌரவித்தது. தாகூரின் சதாபிஷேகம் 80 வது பிறந்தநாள் 1941ஆம் ஆண்டு சாந்தி நிகேதனில் கொண்டாடப்பட்டது. நோய்வாய்ப் பட்டிருந்த தாகூர் அதே ஆண்டு ஆவணி மாதம் 7ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். உலகில் இந்தியாவுக்கு பெருமை சேர்த்த கவிஞர்களுள் ஒருவரான தாகூர் வரலாறு படைத்த ஒரு மாமனிதர்.

❊ ❊ ❊

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
...தமாக வழங்கப்பட்டது.

# ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்



ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சருடைய வாழ்க்கை அகிம்சையை மக்களுக்குப் போதிக்கின்றது. அவருடைய தெய்வீக அன்பு நிறைந்த வாழ்க்கை மக்களின் வாழ்விற்கு ஒரு தூண்டுகோலாய் அமையட்டும் என்று மகாத்மா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

இத்துணைச் சிறப்பு மிக்க மகான் இராமகிருஷ்ணர் 1836 ஆம் ஆண்டு மாசி மாதம் 18 ஆம் திகதி கமார்புகூர் என்ற கிராமத்தில்

அவதரித்தார். இவருடைய தந்தையார் குதிராம் சட்டர்ஜி. நேர்மையே உருவானவர். சிறந்த பக்திமான். அந்தணர் குலப் பெரியார். அவருக்கும் சந்திரமணி அம்மையாருக்கும் அவதார புருஷராகப் பிறந்த இராமகிருஷ்ணருடைய இளமைப் பெயர் கதாதரர். காயாவில் எழுந்தருளிய விஷ்ணுவின் அனுக்கிரகத்தால் பிறந்த குழந்தை என்றபடியால் அவரது பெயரையே குழந்தைக்குச் சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர்.

கதாதரர் கிராமப் பள்ளிக்கூடத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். ஒருமுறை கேட்ட பாடத்தை அப்படியே ஒப்புவிக்கும் ஞாபகசக்தி மிகுந்த கதாதரருக்குப் பாடசாலைக் கல்வியில் ஈடுபாடு இருக்கவில்லை.

எந்நேரமும் களிமண்ணால் இறைவனுடைய உருவங்களைச் செய்து பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டும், நடித்துக் கொண்டும் தமது இளமைப் பருவத்தைக் கழித்தார். நுண் கலைகளில் மிக்க ஆர்வம் கொண்டவராக விளங்கியபடியால் இனிமையாகப் பாடும் ஆற்றல் கைவரப்பெற்று விளங்கினார். அத்தோடு எந்நேரமும் சிரிக்கச் சிரிக்க பேசும் குணம் கொண்ட வராதலால் கமார்புகூர் கிராமத்துப் பெண்களின் செல்லப் பிள்ளை யாக விளங்கினார்.

கதாதரர் ஒரு சமயம் வயல் வெளியில் நடந்து கொண்டிருக்கும் பொழுது இருண்ட வானத்தையும் வெள்ளைக் கொக்குக் கூட்டத் தையும் கண்டு அந்த அழகிலே மனதைப் பறிகொடுத்தார். இயற்கையில் இறைவனைக் கண்ட கதாதரர் வெளியுணர்வு நீங்கப் பெற்று அவ்விடத்திலேயே சமாதி நிலை கைவரப் பெற்றார். இதுவே அவர் பெற்ற முதல் சமாதிநிலையாகும்.

இரண்டு ஆண்டுகளின் பின் ஒரு சிவராத்திரி தினத்தன்று கதாதரர் சிவன் வேடம் பூண்டு நாடகம் நடித்தபொழுது சமாதி நிலை கைவரப்பெற்று ஆடாமல் அசையாமல் அப்படியே இருந்து விட்டார். பார்த்துக் கொண்டிருந்த மக்கள் பரவசமடைந்து மௌன மாக இருந்தனர். மக்களுக்கு உண்மையான சிவராத்திரியாகவே அன்றைய நாள் அமைந்துவிட்டது.

கதாதரருக்கு அவருடைய 9ஆவது வயதில் உபநயனம் செய்யப் பட்டது. அன்று முதல் தம் தமையனார் ராம்குமாருடன் குல தெய்வத்திற்கு பூசை செய்யத் தொடங்கினார். 1843ஆம் ஆண்டு திடீரென அவருடைய தந்தையார் மரணமானார். அந்த இறப்பு நிகழ்வு அவரை வாழ்வின் நிலையாமையைச் சிந்திக்கச் செய்தது. அதனால் அவர் மேலும் ஆத்மிக உணர்வு கைவரப் பெற்று தட்சிணேஸ்வரத்தில் ஜகன்மாதாவைக் காணவேண்டும் என்ற விருப்பத்தைத் தூண்டியது. 1855ஆம் ஆண்டு ராணி ராசமணியின் உதவியால் தேவி பிரதிட்டை செய்யப்பட்டு தட்சணேஸ்வர ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றது. முப்பது வருடங்களுக்கு மேலாக இவ்விடமே இராமகிருஷ்ணரின் ஆன்மிகப் பொக்கிஷம் வெளி வந்த இடமாக விளங்கியது. 1856ஆம் ஆண்டு சகோதரன் ராம்குமாரின் மறைவையொட்டி இராமகிருஷ்ணரே பிரதம அர்ச்சகராக நியமிக்கப்பட்டார். இவருக்குக் காளிதேவியின் விக்கிரகம் மறைந்து உயிருள்ள அன்னையாகக் காட்சியளிப்பாள். அம்மனோடு பேசுவார். உணவூட்டி விடுவார். விசிறி கொண்டு வீசுவார். படுக்கும்படி அழைப்பார். தன்னை மறந்தார். சூழ்நிலையை மறந்தார். ஒரு பைத்தியக்காரனாக மற்றவர்களுக் குத் தென்பட்டார். பைரவிப் பிராம்மணி என்னும் அம்மையார் இவரது தெய்வீக நிலையை உணர்ந்து இவரை ஒரு அவதார புருஷர் என்று கூறினார்.

அன்னை பராசக்தியின் வழிபாடாகிய தந்திர சாதனத்தில் மிக்கவர் பைரவிப் பிராமணி. அவர் மூலம் 3 நாட்களில் ஆன்மிகச் சாதனை புரிந்து இறை அனுபூதியைப் பெற்றார். 'நான் ஞானக் காட்சியில் அழகே உருவெடுத்த ராஜராஜேஸ்வரியைக் கண்டேன்' என்று இராமகிருஷ்ணரே கூறியுள்ளார். உயிர்களை இறைவனிட மிருந்து பிரிப்பது மாயை என்ற சுவர்தான் என்றும் கூறினார்.

இராமகிருஷ்ணருடைய தெய்வப் பித்துக்கு மருந்து திருமணம் என்று தாயார் சந்திரமணி தீர்மானித்தார். அப்பொழுது இராம கிருஷ்ணர் 'ஜெயராம் பாடியில் வசிக்கும் இராமச்சந்திர முகோபாத்தியாவின் குடும்பத்தில் மணப்பெண் இருக்கிறாள்' என்று கூறினார். அதன்படி ஐந்து வயது நிரம்பிய சாரதா

அம்மையாருக்கும் இருபத்துமூன்று வயதுடைய கதாதரருக்கும் 1859ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இராமகிருஷ்ணர் காமத்தை வென்ற நிலையில் தன் மனைவியை அன்னை பராசக்தி யாகவே கண்டார். அதுமட்டுமல்ல பிற பெண்களையும் அன்னை பராசக்தியின் வடிவமாகவே கண்டார்.

இறைவன் ஆண்டானாகவும் தன்னை அடிமையாகவும் பாவித்து உறவுகொள்வது தாஸ்யம் (தாச மார்க்கம்) என்றும், இறைவனைக் குழந்தையாகக் காண்பது வாத்சல்யம் (சற்புத்திர மார்க்கம்) என்றும், இறைவனிடம் தோழமை பூணுவது சக்யம் (சக மார்க்கம்) என்றும் இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் காண்பது மதுரம் (சன்மார்க்கம்) என்றும் கூறப் படுகிறது. இராமகிருஷ்ணர் மதுர பாவனையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார். உடல், உணவு, உறக்கம் அனைத்தையும் மறந்தார். மக்களுக்குத் தொண்டு புரிவதற்காக இராமகிருஷ்ணர் உயர்ந்த நிர்விகற்ப சமாதியிலிருந்து இறங்கி வந்தார்.

பிற சமயங்களான இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களைச் சார்ந்து 3 நாட்களிலேயே அம்மத பக்தி அனுபவங்களைப் பெற்றார். மேலும் புத்தரது போதனைக்கும் உபநிடதங்களுக்கும் எவ்வித முரண்பாடும் இல்லை என்று கூறினார்.

1872ஆம் ஆண்டு அன்னை சாரதா தமது 18 ஆவது வயதில் கணவராகிய இராமகிருஷ்ணருக்குப் பணிவிடை செய்வதற்கு வந்தார். இராமகிருஷ்ணர் தன் மனைவியாகிய சாரதா அம்மையா ரிடம் 'உலக வாழ்க்கையில் என்னை இழுக்க விரும்புகிறாயா?' எனக் கேட்டார். அதற்கு சாரதை சிறிதும் தயங்காது 'நான் உங்களுக்கு சேவை செய்யவும், உங்களிட மிருந்து ப்ரஞானத்தைக் கற்கவும் வந்துள்ளேன்' என்று கூறினாள். மகிழ்ச்சியடைந்த இராமகிருஷ்ணர் காளிபூசை தினத்தன்று காளிதேவிக்காக அமைக்கப்பட்ட மேடையில் சாரதையை அமர்த்தி சாஸ்திர முறைப்படி தேவிக்குச் செய்யும் எல்லாப் பூசைகளையும் செய்தார். சாரதையே இராம கிருஷ்ணரின் முதல் சிஷ்யை ஆனார். இவருக்கு பல சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களுள்

முதன்மையானவர் விவேகானந்தர். சுவாமி சாரதானந்தர் என்ற சிஷ்யர் வங்கமொழியில் இராம கிருஷ்ணரின் சரிதத்தை எழுதி யுள்ளார். இது ஆங்கிலத்தில் 'இராமகிருஷ்ணர் உயர்ந்த மகான்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சுவாமி விவேகானந்தர் 'நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா' என்ற கேள்வியோடு இவரிடம் வந்தவர். ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் இவருடைய போதனை முறையின் சிறப்பை விளக்குகின்றன.

1885 ஆம் வருடம் கோடை காலத்தில் இவர் தொண்டையில் சிறிது வலியையும் சூட்டையும் உணர ஆரம்பித்தார். வைத்தி யர்கள் அதிகம் பேசவேண்டாம் என்று கூறியும் கேட்காது பரவச நிலையெய்தியவுடன் ஆடுவார் பாடுவார். அதனால் தொண்டைப் புண்ணிலிருந்து இரத்தம் வரத் தொடங்கியது. 1885 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் கல்கத்தாவிலுள்ள சியாம்புகூர் என்ற இடத்தில் ஹோமியோபதி டாக்டர் மகேந்திரலால் சர்க்கார் என்பவர் இவருக்கு மருத்துவம் செய்தார். அவ்விடம் சனநெரிசல் உள்ள இடமானபடியால் மார்கழி மாதம் காசிப்பூரில் உள்ள ஒரு தோட்ட மாளிகையில் வைத்து வைத்தியம் செய்தனர். அன்னை சாரதா தேவியும் உடனிருந்து உணவளித்து கவனித்து வந்தார். அங்கே விவேகானந்தருக்கு நிர்விகற்ப சமாதி கைகூடியது. இராம கிருஷ்ணர் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் பஜனை, கீர்த்தனை விவேகானந்தர் தலைமையில் நடைபெற்று வந்தன. இராம கிருஷ்ணர் விவேகானந்தரிடம் 'நான் இவர்கள் (சீடர்கள்) அனை வரையும் உன்னுடைய பாதுகாப்பில் விட்டுச் செல்கின்றேன். இவர்கள் ஆன்ம சாதனை புரியும்படியும் வீட்டிற்குத் திரும்பா மலும் பார்த்துக்கொள்' என்றார்.

இப்படியாக காசிப்பூரில் ஒன்பது மாதகாலம் வாழ்ந்தபின் இராமகிருஷ்ணர் தமது சீடர்களிடம் தமது தத்துவங்களைப் பரப்பும் பணியை ஒப்படைத்துவிட்டு 1886ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16ஆம் திகதி தம் பூத உடலை விட்டு நீங்கி மகாசமாதி

அடைந்தார். இந்தியாவில் பலமொழிகளில் இராம கிருஷ்ணரின் அமுத மொழிகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

வேதாந்தத் தத்துவத்தைப் பேச்சோடு நிறுத்திவிடாமல் வாழ்ந்து காட்டியவர் இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆவார்.

* * *

# அன்னை திரேசா




கருணை, காருண்யம், தயாளசிந்தை அனைத்தும் கொண்ட அன்னை திரேசா உலகிலுள்ள ஏழைகள், அநாதைகள், வயோதிபர், நோயாளிகள் என ஒதுக்கப்பட்ட மக்களுக்காகவே தம் வாழ்நாளை அர்ப்பணித்தவர்.

யூகோஸ்லாவியாவில் 1910ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26ஆம் திகதி ஸ்போட்ஜோ நகரில் அல்பேனியப் பெற்றோருக்கு

மகளாகப் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் அக்னர் கொயின்ஷா பெஜாக்கியூ என்பதாகும். பெற்றோர் சாதாரண விவசாயிகள். அன்னை அவர்களுக்கு 7 வயது நடந்து கொண்டிருக்கும் பொழுது தமது தந்தையாரைப் பறி கொடுத்தார். தாயாரின் நிழலில் வளர்ந்தார்.

எந்த நேரமும் உலக மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு வளர்ந்தார். சிறு வயதிலேயே இறை பக்தி நிறைந்த இவர் தனது 12ஆவது வயதில் கன்னியாஸ்திரி மடத்தில் சேர விரும்பினார். ஆனால் தேவ அழைத்தல் 18 வயதிலேயே இவருக்குக் கிடைத்தது.

1928இல் அயர்லாந்தில் லொரற்றோ மடத்தில் தமது வாழ்க்கையை ஆரம்பித்தார். 1929ஆம் ஆண்டு தை மாதம் 29ஆம் திகதி அருமைத் தாயாரிடமும் உற்றார் உறவினரிடமும் விடை பெற்றுக்கொண்டு கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். அங்கு டார்ஜிலிங்கிலுள்ள லொரேடோ கன்னியாஸ்திரி மடத்தில் சேர்ந் தார். 1931 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் திகதி கன்னி யாஸ்திரியாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

கல்கத்தாவிலுள்ள புனித மரியாள் பாடசாலையில் 17 வருடங் களாக ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1944 இல் அதன் அதிபரானார். வறிய அநாதைக் குழந்தைகளுக்காகவே நடத்தப்பட்ட பாடசாலை அது. அநாதைச் சிறுவர்களை அன்பு காட்டி அரவணைத்தார்.

லொரேடோ மடத்தின் அனுமதி பெற்று வெளியுலகிலும் சமூகப் பணியாற்ற ஆரம்பித்தார். 1948இல் பாட்னாவில் வைத்தியத் தாதிப்பயிற்சி பெற்றுக் கொண்டார். அவசர சத்திர சிகிச்சைப் பிரிவு, பிரசவப் பிரிவு என்பவற்றில் சேர்ந்து ஊழியம் புரிந்து கொண்டே முழுப்பயிற்சியும் பெற்றார். நான்கு மாதப் பயிற்சி முடிவடைந்ததும் மோதிஜில் என்ற சேரியில் தனது பணியைத் தொடக்கினார். ஒரு மர நிழலில் 5 வறிய குழந்தை களுக்குப் பாடம் போதிக்கத் தொடங்கினார். பின்னர் 1949 இல் மைக்கல் கோமஸ் என்பவருடைய மாடியில் குடிபெயர்ந்து மக்களுக்குச் சேவை புரியலானார். கள்ளிக்கோட்டை என்ற இடத்தில் வயோதிபர்களுக்காகவே ஓர் இல்லம் அமைத்து

அவர்களுக்குச் சேவையாற்றத் தொடங்கினார். தொழு நோயாளர் களைக்கூடத் தன் சேவையில் சேர்த்துக் கொண்டார்.

1950ஆம் ஆண்டு அன்னை திரேசா அவர்களின் தலைமையில் மிஸனரீஸ் ஒவ் செரிட்றி (Missionaries of charity) உருவாக்கப் பட்டது. தூய்மையான பணிக்கு எடுத்துக்காட்டாக நீல நிறக் கரை போட்ட வெள்ளை கைத்தறிச் சேலையை அணியத் தொடங் கினார். தனது சொந்த சமூகசேவை இயக்கமாகவே இதனை ஆரம்பித்தார். சிறு அமைப்பாக ஆரம்பித்த இயக்கம் இன்று 130 நாடுகளில் செயற்படுகின்றது. இந்நாடுகளில் 50 இற்கும் அதிகமான அநாதைச் சிறுவர் இல்லங்கள் இயங்குகின்றன.

1967ஆம் ஆண்டு கொழும்பு அதிமேற்றிராணியார் வண. காடினல் குரே அன்னை திரேசாவை இலங்கை வந்து இங்கும் அவரது சேவையை ஆரம்பிக்கும்படி அன்னைக்கு அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை ஏற்று இரு சகோதரிகளுடன் இலங்கை வந்த அன்னையவர்கள் முதலாவது கிளையை மாதம்பிட்டியில் நிறுவினார். இந்தியாவிலிருந்து மூன்று கன்னியா ஸ்திரிகள் இங்கு வரவழைக்கப்பட்டு 12 பேருடன் இக்கிளை ஆரம்பமானது. மாதம்பிட்டி 'கருணை இல்லம்', முகத்துவாரம் 'சாந்தி நிவச' மற்றும் மொறட்டுவையில் 1989இல் 'பிரேம நிவச' என்று அநாதை இல்லங்கள் ஆரம்பமாயின. மேலும் திருகோண மலை, மட்டக்களப்பு, மன்னார், காலி ஆகிய இடங்களிலும் இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

1984இல் திரேசா அவர்கள் இலங்கை வந்தபொழுது அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இறுதியாக 1987ஆம் ஆண்டு இலங்கை வந்த அன்னை அவர்கள் அநாதை இல்லங் களைப் பார்வையிட்டு பேருவகை அடைந்தார்.

1962ஆம் ஆண்டில் அன்னையின் சேவையைப் பாராட்டி இந்திய அரசினால் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது. தொடர்ந்து 1979இல் அமைதிக்கான நோபல் பரிசு, 1980இல் இந்தியாவின் அதியுயர் விருதான பாரத ரத்னா விருது, 1983 இல் புதுடில்லியில் பிரிட்டிஷ் மகாராணி 2ஆம் எலிசபெத்திடமிருந்து அன்னையின் திறமைக்கான கௌரவ விருது, 1993இல் ராஜீவ் காந்தி வகுப்பு

நல்லிணக்க விருது என்று பல விருதுகள் அவரைத் தேடி வந்தன. அன்னை திரேசாவின் பொதுப்பணியைப் பாராட்டி 1997 கார்த்திகை மாதம் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் அவருக்கு அமெரிக்காவின் கௌரவ பிரஜாவுரிமையை வழங்கினார். அமெரிக்க சரித்திரத்திலேயே அன்னையுடன் இதுவரை நால்வருக்கே இந்த கௌரவம் கிடைத்துள்ளது.

1991 ஆம் ஆண்டு தொடக்கம் அன்னையை நோய்கள் வாட்டத் தொடங்கின.1996 ஆவணி 22 இல் இருதய நோய் ஏற்பட்டது. கல்கத்தாவின் ஆட்லாண்ட் வைத்தியசாலையில் அன்னைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 1996 கார்த்திகை 26 இல் திரும்பவும் இருதய நோய் ஏற்பட்டது. 1997 ஆனி 18 ஆம் திகதி இளவரசி டயானாவை சந்தித்து உரையாற்றினார். பின்னர் இளவரசியின் திடீர் மரணச் செய்தி கேட்டு மனம் மிகப் புண்பட்டார். இளவரசி டயானாவின் இறுதிக் கிரியையில் கலந்து கொள்ளவிருந்த சமயம் நோய்வாய்ப்பட்டு 1997 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 5ஆம் திகதி கல்கத்தாவிலுள்ள அவரது தலைமை சேவாச்சிரமத்தில் உயிர் நீத்தார். அன்னையின் புனிதப்பணிகள் இன்றும் அவர் ஸ்தாபித்த கிளைகள் ஊடாகத் தொடரப்பட்டு வருகின்றன. இன்று 'மிஷனரீஸ் ஒவ் சரிட்டி' வருடாந்தம் 5 இலட்சம் குடும்பங்களைப் பராமரித்து வருவதுடன் 20 ஆயிரம் குழந்தைகளுக்குக் கல்வி போதித்தும் வருகிறது. 90 ஆயிரம் தொழுநோயாளர்களுக்கும் அன்னையின் சிகிச்சை நிலையம் சிகிச்சை அளித்து வருகிறது.

அன்னையின் பணியை நேபாள பிராமணக் குடும்பத்தில் பிறந்த அருட்சகோதரி நிர்மலா ஏற்று அநாதைகளின் அன்னையாக விளங்குகிறார்.

ஏழை அநாதைப் பிள்ளைகளின் இரட்சகர் என உலக மக்களால் போற்றப்பட்ட அன்னை திரேசா அவர்களின் இறுதிச் சடங்குகள் 1997 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை 10 மணிக்கு அரச மரியாதையுடன் கல்கத்தாவிலுள்ள தர்மசாசன நிலைய தலைமை அலுவலக வளவில் நடைபெற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

* * *

# வீரமா முனிவர்



இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவரின் இயற்பெயர் கொன்ஸ்டன் டைன் ஜோசப் பெஸ்கி ஆகும். இவர் இத்தாலியில் கி.பி. 1680 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 8 ஆம் திகதி பிறந்தார். இவர் இத்தாலியம், கிரேக்கம், இலத்தீன், போர்த்துக்கீசியம் போன்ற மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். பின்னர் 1710 ஆம் ஆண்டளவில் இந்தியாவுக்கு வந்தார். தமிழ் நாட்டில் மதுரையில்

வாழ்ந்த சுப்ரதீயக் கவிராயரிடம் தமிழ் கற்றார். தமிழ் மொழியில் இவருக்கு ஏற்பட்ட ஆராக் காதலினால் தைரியம் என்ற பொருள் கொண்ட தனது கொன்ஸ்டன்ஸ்போ என்ற இத்தாலியப் பெயரை மாற்றி தைரியநாத சுவாமி என தனக்குப் பெயரிட்டுக் கொண்டார். யேசுநாதர் பணியில் அவர் காட்டிய ஆர்வத்தையும், தமிழ்மொழி மேல் அவருக்கிருந்த ஈடுபாட்டையும் அறிந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் அவருடைய பெயரை வீரமா முனிவர் என மாற்றினார். அப்பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது.

1698 ஆம் ஆண்டு தமது 18 ஆவது வயதில் கத்தோலிக்க திருச் சபையில் சேர்ந்தார். அங்கு 12 வருடங்கள் குருப்பணிக்கு தொண்டாற்றினார். யேசு சபைக் கல்லூரியில் கல்வி போதித்தார். 1709 இல் அவருக்கு குருப்பட்டம் கிடைத்தது. பின் அவர் தமிழகத் திற்கு வந்து 1711 ஆம் ஆண்டு பாண்டிய நாட்டில் தொண்டு புரிந்து கொண்டிருந்த இயேசு சபைக் குருமாருடன் இணைந்து தாமும் தொண்டு புரியத் தொடங்கினார்.

சமயநூலை தமிழர்களுக்கு தாமும் ஒரு தமிழனாய் இருந்து கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் தமிழை ஆழமாகப் பயின்றார். அத்தோடு சமஸ்கிருதம், உருது, தெலுங்கு போன்ற மொழிகளையும் கற்றார். 30 வயதின் பின் பிற மொழிகளைக் கற்று அதில் அளவற்ற புலமை பெற்று விளங்கிய வீரமா முனிவரைத் தவிர இன்னொருவரை உலக வரலாற்றில் காண முடியாது என்று வண. தனிநாயகம் அடிகளார் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழியை வளர்த்த, தமிழுக்குத் தொண்டாற்றிய ஐரோப்பியர்களில் சென்னை மாவட்ட ஆட்சியாளராக இருந்த எல்லீஸ் துரை தமிழ்மீது ஆர்வங்கொண்டு நல்ல முறையில் தமிழ் கற்றபொழுது தமிழ்ச் சுவடிகளை தேடித் தேடிச் சேகரித்தார். அப்படி அவர் தேடிய பொழுது அத்தேடலில் கிடைத்ததுதான் வீரமா முனிவரின் தேம்பாவணி என்னும் காவியம். அதை ஆவூர் என்னும் சிற்றூரில் கண்டெடுத்தார். முத்துச்சாமி என்பவரைக் கொண்டு முனிவரின் வரலாற்றையும் எழுதியிருக்காவிட்டால்

இப்போது எமக்கு இவரைப்பற்றி ஒன்றுமே தெரியாமல் இருந்திருக்கும்.

வீரமாமுனிவர் யாத்த பெருங்காப்பியம் தேம்பாவணி. இது கிறிஸ்து நீதி நூலாக விளங்குகிறது. இயற்கையோடு இணைந்த இறைவனின் தோற்றம், தொழிற்சிறப்பு, இல்லற துறவற விளக்கம், அறத்தின் அருமை, காமத்தின் தீமை என்று பலதரப் பட்ட சிறப்புப் பொருந்தியது. தேம்பாவணி முனிவர் போதித்து வந்த அறக்கோட்பாடுகளும், தத்துவங்களும், நீதிகளும் நிறைந்த அரும்பெருங்களஞ்சியம் ஆகும். தொடர்நிலைச் செய்யுள்களா லான தேம்பாவணி 3 காண்டங்களாகவும் 36 படலங்களாகவும் 3615 பாடல்களாகவும் எழுதப்பட்டுள்ளது.

வீரமாமுனிவர் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்தில் மதுரை, தஞ்சாவூர், அரியலூர், கயத்தாறு, காமநாயக்கன்பட்டி ஆகிய இடங்களில் பணிபுரிந்தார். தமிழ் மொழியை திறம்பட பேசவும் எழுதவும் பயின்றார். அத்தோடு மிகுந்த ஆர்வங்கொண்டு ஐம்பெருங்காப்பியங்களைக் கற்றார். தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களைக் கற்றார். மேலும் தாமும் அந்நூல்களை இயற்றத் தலைப்பட்டார். தமிழ் இலக்கணத்தில் ஏ, ஓ போன்ற எழுத்துக்களின் வரிவடிவங்களில் மாற்றம் செய்து தமிழ் எழுத்துக்களில் நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். வரிவடிவ அமைப்பை எல்லோரும் எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் மாற்றினார். தமிழ் இலக்கணத்தில் வரி வடிவத்தைத் திருத்திய ஒரேயொரு வெளிநாட்டவர் வீரமா முனிவர் அவர்களே. கிரேக்கம், இலத்தீன் மொழிகளில் மிகுந்த பரிச்சயமுடைய முனிவர் இனிய தமிழில் தன் மனத்தைப் பறி கொடுத்தார்.

இவர் இயற்றிய நூல்கள் மிகப்பல. தமிழ்ச் சொற்களை அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்தி 'சதுரகராதி' என்ற நூலை ஆக்கினார். இது தவிர 'தமிழ் - இலத்தீன் அகராதி' ஆகிய நூல்களை ஐரோப்பியருக்காக ஆக்கினார். மேலும் திருக்குறளின் அறத்துப் பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழி

பெயர்த்தார். திருக்காவலூரில் எழுந்தருளியிருக்கும் தேவமாதா மீது 101 பாக்களைக் கொண்ட 'திருக்காவலூர்க் கலம்பக'த்தை எழுதி வெளியிட்டார். கித்தேரியம்மாள் மீது 'கித்தேரியம்மாள் அம்மானை'யைப் பாடினார். 'அடைக்கல நாயகி வெண் கலிப்பா' என்ற பிரபந்தங்களையும் பாடியுள்ளார். 'கருணாம்பரப் பதிகம்', 'அன்னை அழுங்கல அந்தாதி' ஆகிய நூல்களை ஆக்கியருளினார். 'வேதவிளக்கம்', 'வேதியர் ஒழுக்கம்', 'ஞானம் உணர்தல்' 'திருச்சபை வேதாகமம்' 'லூத்தர் இனத்தியல்' 'கொடுந்தமிழ் இலக்கணம்' 'தொன்னூல் விளக்கம்' முதலியவை வசனநடை நூல்களாகும். ஐந்திலக்கணம் கூறும் 'தொன்னூல் விளக்கம்' சிறந்த இலக்கண நூலாகும். கத்தோலிக்க கருத்துக்கள் நிறைந்த நீதி பொருந்திய கிறிஸ்து பெருமானின் வரலாற்றை கூறும் 'தேம்பாவணி' மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பெரும்புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. விவிலிய நூலில் வரும் பல வரலாறுகளையும் தமது சொந்தக் கருத்துக்களையும் 'தேம்பாவணி' மூலமாக முனிவர் வெளிக்கொணர்ந்துள்ளார். பிற்காலத்தில் எழுந்த கிறிஸ்தவ நூல்களுக்கு இவரே வழிகாட்டி யாகத் திகழ்ந்தார்.

இவரால் எழுதப்பட்ட 'அவிவேக பூரண பரமார்த்த குருவும் சீடர்களும்' தமிழில் தோன்றிய முதலாவது நகைச்சுவைக் கதை யாகும். 'பரமார்த்த குரு' நகைச்சுவைக் கதை பாமரராலும் பாராட்டுப் பெற்று விளங்குகிறது.'வேதவிளக்கம்', 'வேதியர் ஒழுக்கம்' என்பன இலக்கிய நடையில் அமைந்துள்ளன.


1734ஆம் ஆண்டு மாதா கோவில் ஒன்றை மயிலாப்பூரில் கட்டுவித்துள்ளார். பல சிறந்த உரைநடை நூல்களை தமிழ் மொழி யில் இயற்றித் தந்த வீரமா முனிவர் தமிழ் உரைநடையின் தந்தை எனப் போற்றப்படுகின்றார். தமிழ்த் தொண்டும் சமயத் தொண்டும் புரிந்த வீரமா முனிவர் அவர்கள் அம்பலங் காட்டி லுள்ள குருமடத்தில் 1747 ஆம் ஆண்டு மாசித் திங்கள் 4ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். தமிழ் நாட்டிலேயே வாழ்ந்து தமிழ் நாட்டிலேயே உயிர் நீத்த வீரமா முனிவர் தமிழ் நாட்டில் ஒரு கிறிஸ்தவ சூழலை உருவாக்கியுள்ளார்.

‘வீரமாமுனிவர் தைரியநாதர் விரிதமிழ்க்கலை மணங்கமழும்
ஆரமாமுனிவர் அகத்தியர் போலவே அருளினார் அரிய
நன்னூல்கள்
சாரமாந் தேம்பாவணியினைத் தொடினுந் தமிழ் மணங்கமழு-
மென்கரமே
ஈரமாநெஞ்சில் இடம்பெற நட்டால் இன்பமாய் மலருமென்
வாழ்வே’

என்று சுத்தானந்த பாரதியார் புகழ்ந்துள்ளார்.

* * *

# வில்லியம் ஷேக்ஸ்பியர்



சிறப்பு வாய்ந்த ஆங்கிலப் புலவர்களில் முதன்மையாகப் போற்றக்கூடிய பெருமையுடையவர் வில்லியம் ஷேக்ஸ்பியர் அவர்கள்.

இவர் வாவிக்ஷய (Warwickshire) என்ற மாகாணத்தில் ஏவோன் நதிக்கரையிலுள்ள ஸ்ரற்போட் (Strat ford - on - Avon) என்ற கிராமத்தில் 1564ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23ஆம் திகதி

பிறந்தார். இவரது தந்தையார் ஜோன் ஷேக்ஸ்பியர் தோல் பதனிடும் சிறு தொழிலாளியாக இருந்தார். வில்லியத்துக்கு இரண்டு சகோதரிகளும் மூன்று சகோதரர்களும் இருந்தனர். தாயாரிடம் ஒரு சிறு காணித்துண்டு இருந்தது. அவர்களுடைய குடும்பம் நொடித்துப் போகாமல் இருக்கக்கூடியதாக அவர்களுடைய குடும்பத் தேவைகளுக்கு உதவியாக அக்காணித் துண்டு விளங்கியது. இவர் ஸ்ரற்போட்டிலுள்ள கனிஷ்ட பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றார். தந்தையார் கடன் காரணமாக சிறைக்குச் சென்ற காரணத்தால் 13 ஆண்டுகளே இவரால் கல்வி கற்க முடிந்தது.

இவர் 1582ஆம் ஆண்டு தமது 19ஆவது வயதில் தன்னிலும் 8 வயது மூத்த பெண்ணான ஆன் கத்தாவேயை மணம் புரிந்தார். இவர்களுடைய லௌகீக வாழ்க்கையில் திருப்தியீனங்களே இருந்ததாகக் கூறப்படுகிறது. இருந்தும் இவர்களுக்கு சுசன்னா (Suzanna), ஹனெற் (Hannet) ஜூடித் (Judith) என்று மூன்று குழந்தைகள் பிறந்தார்கள். சிறிது காலம் செல்ல 1593ஆம் ஆண்டு பிழைப்புத்தேடி இலண்டனுக்குச் சென்றார். அயலிலுள்ள ஒரு பிரபுவின் தோட்டத்தில் மானோ, முயலோ ஏதோ ஒன்றைப் பிடித்த குற்றத்திற்காக பயந்து இவர் இலண்டனுக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது. அங்கு வீனஸ் (Venus) அடோனியாஸ் (Adonais) மேல் புனைந்த பாடல்களைப் பதிப்பித்தார். 1594ஆம் ஆண்டு சேம்பெலின் பிரபுவின் (Chamberlian) கொம்பனியில் சிறு சிறு பாத்திரம் ஏற்று நடித்தார். அத்தோடு பழைய சில நாடகங்களை திருத்தி, புதுப்பித்து மேடையேற்றுவதற்காக உதவி செய்தார். இப்பணியானது அவருடைய நாடக உணர்வுகளையும் அறிவையும் விரிவாக்கியது.

அரிஸ்ரோற்றல் என்ற தத்துவஞானி நாடக இயலில் மூன்று முக்கிய சட்டங்களை நிர்ணயித்திருந்தார். இவரும் அதையே அடிப்படையாக வைத்துக்கொண்டு அதனை ஐந்து வகையாகப் பாகுபடுத்தினார். அரிஸ்ரோற்றலின் சட்டங்களுக்கு கீழ்ப்படிந்து அதில் பல திருத்தங்களை கொண்டு வந்தார்.

புராதன காலத்தில் கடும் மாரி காலத்தை சந்தோஷமாக கழிப்பதற்கும், மதபிரசாரத்தை கையோடு பரப்புவதற்கும் கிறிஸ்தவ பாதிரிகள் விவிலியத்திலிருந்து சில பகுதிகளை நாடக மாக மக்களுக்கு நடித்துக் காண்பித்திருக்கிறார்கள். இவைகளை மத சார்பு நாடகங்களென்றும், தேவ அதிசய நாடகங்கள் என்றும் அழைத்தார்கள். இதிலிருந்து தான் பின்னர் ஒழுக்க நாடகங்கள் உருவாகின. ஆதிகால கிரேக்க நாடகங்களில் டியோனிஸ் (Dionysus) என்ற கடவுளைத் துதிபாடி கிராமத்தவர்களோடு இணைந்து நாடகங்களை அமைத்தார்கள். அதற்கு மேடை இருக்காது. உடைகளும் கதாபாத்திரங்களுக்கு ஏற்றதாக இருக்காது. பொது இடத்தில் பார்க்க வரும் மக்களையும் உதவி யாளர்களையும் இணைத்து நாடகத்தை நடித்து வந்தனர். பின்னர் தெருக்கூத்து போன்று நாடக அம்சங்களின் சிறப்புக்களை விவரித்து நடித்தனர். இவை ஒன்றில் இன்பியல் நாடகங்களாக (Comedies) இருக்கும். அல்லது துன்பியல் நாடகங்களாக (Tragedies) இருக்கும். ஷேக்ஸ்பியர் இவைகளை ஒரே நாடகத்தில் மாறிமாறி வரக் கூடியதாக புகுத்தினார். படிப்படியாக இதுவே நாடகத்தின் முறையாக அமைந்துவிட்டது. முதலாம் எலிஸபெத் மகாராணி இங்கிலாந்தின் இராணியாக இருந்த காலமது. மேன்மக்களின் ஊக்கத்தால் நாடகத்துறைக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டதுடன் நடிகர்களையும் மனிதர்களாக மதிக்கவும் தொடங்கினர்.

நாட்கள் செல்ல ஷேக்ஸ்பியர் மூடிய நிரந்தரமான மண்டபத்தை அமைத்தார். அரங்கின் முக்கால்ப் பகுதி பார்வையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும். உயர்த்தப்பட்ட மேடை அந்த சந்திரவட்ட அமைப்புக்குள் அமைந்திருக்கும். மேடைக்கு நேர் கீழே வாத்தியக் கோஷ்டி இருப்பார்கள். மேடையின் முற்பகுதி (Gallery) பிரமுகர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும். இந்த குளோப் (Globe) அரங்கில் இவர் 1611ஆம் ஆண்டுவரை இருந்தார். 37 நாடகங்களை உருவாக்கினார். அத்தோடு அவர் செய்யுட்களையும் எழுதினார். இப்படிச் செய்யும் காலத்தில் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்து குளோப் தியேட்டரில் பங்காளரானார். இதன் மூலம்

கிடைத்த பணத்தில் ஸ்ரற்போட்டில் புதிய இடம் (New place) என்னும் பெயருடைய சொத்தையும் வாங்கினார். 1611ஆம் ஆண்டு பிற்பகுதியில் இலண்டனிலிருந்து தனது மனைவியையும், திருமணமான மகளையும் அழைத்துக்கொண்டு ஸ்ரஸ்போட் டிற்குத் திரும்பிச் சென்றார்.

இவர் தமது சொந்த அனுபவங்களையும் உலகின் நடப்பு களையும் நாடகங்களாக எழுதி மேடையேற்றினார். 'இரண்டாம், மூன்றாம் ரிச்சாட்' (Richard) என்ற சரித்திர நாடகங்களை எழுதி யுள்ளார். 'ரோமியோ - ஜூலியற்', 'ஜூலிய சீசர்' போன்ற நாடகங்கள் பிற நாடுகளிலும் நடிக்கப்படும் புகழ் பெற்றவை. சோகரசம் பொருந்தியவை. பழைய நாடகங்களைப் புதுப்பித்து மக்களுக்கு அர்ப்பணிக்கும்போது பல உத்திகளையும் புகுத்தி யுள்ளார். 'மிட் சம்மர் நைற் டரீம்' (Mid summer night's dream), 'நான்காம் ஹென்றி' (Henry - IV) முதலாம் இரண்டாம் பாகங்கள், 'பன்னிரண்டாம் இரவு', 'வெனிஸ் நாட்டு வர்த்தகர்' போன்ற நாடகங்கள் காதல் ரசம் பொருந்தியவை.

1601ஆம் ஆண்டிலிருந்து 1608ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நான்கு பெரிய சோக நாடகங்களை எழுதி நாடக மாக்கியுள்ளார். 'கிங் லியர்' (King Lear), 'ஒதெல்லோ' (Othello), 'ஹம்லெட்' (Hamlet), 'மக்பெத்' (Macbeth) இவை நான்கும் வாழ்க்கையின் தீவிர பகுதிகளையும் தவிர்க்கமுடியாத அழிவு களையும் கொள்கை ரீதியில் பலவீனங்களையும் காட்டுகின்றன. நாடகத் தலைப்பு முக்கிய ஆண் கதாபாத்திரத்தின் பெயரைக் கொண்டிருக்கும். எல்லா நாடகங்களிலும் கதாநாயகன் நாடக முடிவில் இறந்து விடுவதாகக் காட்டப்படுகிறது. இதிலிருந்து ஷேக்ஸ்பியரின் அக்கால மனப்பான்மை வெளிப்படுகிறது.

இவர் எழுதியுள்ள 37 நாடகங்களும் பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. 1609ஆம் ஆண்டிலிருந்து 1613 ஆண்டு களில் எழுதப்பட்ட நாடகங்களில் இன்பியலும், துன்பியலும் கலந்து விளங்கின. வசன நடைகளில் பெரிய மாற்றங்கள் இல்லா விடினும் மக்களை ஈர்க்கக்கூடிய சாகச வசனங்கள் இருந்தன.


வின்ரேஸ் ரேல் (Winter's tale) சைம்பலின் (Cymbeline) இரண்டும் சந்தோஷமான முடிவையே கொண்டிருந்தன. அவருடைய கிராமப்புற ஸ்ரற்போட் ஊரில், இறுதி நாடகங்களை காட்டும் போது சந்தோஷமுடையவராக விளங்கினார். நாடகங்களிலும் அவை பிரதிபலித்தன. இக்காலத்தில் செய்யுள் அமைப்பிலேயும் காலத்துக்கேற்றவாறு லயம் நிறைந்த அடிகளாகக் காணப்பட்டன. எல்லாப் பாடல்களிலும் இவர் திறமை மிகுந்த நல்ல ஆங்கிலச் சொற்களைப் பிரயோகித்துள்ளார். அதனை விளங்கிக்கொள்ள மக்கள் பெரிதும் இடர்ப்பட்டனர். அதனால் சால்ஸ் லாம்ப் (Chales Lamb) என்பவர் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய இலகுவான ஆங்கிலச் சொற்களைப் பிரயோகித்து கதைகளாக மாற்றி எழுதியுள்ளார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை சம்பந்த முதலியார், சுவாமி விபுலானந்தர் போன்றவர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர்.

''உலகமே நாடக மேடை. நாமெல்லாம் அதில் நடிக்கும் நடிகர்கள்'' என்று கூறியவர் ஷேக்ஸ்பியர். சொந்த ஊரான ஸ்ரற்போட்டில் அமைதியான சூழலில் ஆனந்தமாக வாழ்ந்தார். உலகப் புகழ்பெற்ற ஷேக்ஸ்பியர் 1616 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23 ஆம் திகதி தனது 52ஆவது பிறந்த நாளன்று உலக வாழ்வை நீத்தார். தன்னுடைய மானுட சீவியத்தில் இறுதிப் பகுதியை ஒரு பொருள் நிறைந்த வாழ்க்கையை நடத்தியவரா கவும், ஊர் விவகாரங்களில் பங்குபற்றியவராகவும் வாழ்ந்தார். அவருடைய ஊரே இப்போது நாடகத் துறையின் புனித ஸ்தலமாக மதிக்கப்பட்டு உலகின் எல்லாப் பாகத்திலிருந்தும் ஆண்டு தோறும் கல்விமான்களும் ஏனையவர்களும் தரிசிக்கும் அளவிற்கு புகழ் வாய்ந்திருக்கிறது.

ஆங்கிலேயர்களுடைய சரித்திரத்தில் அழியாப் புகழ் பெற்றிருக்கிறார். ஷேக்ஸ்பியர் உலக வாழ்வை நீத்தாலும் அவர் புகழ் உலகம் உள்ளனவும் நிலைத்திருக்கும்.

❋ ❋ ❋

# இலக்கியமேதை பேர்னாட்ஷோ




பேர்னாட்ஷோ அவர்கள் தனது ஹாஸ்யப் பேச்சினால் பலரைச் சிந்திக்கவும் சிரிக்கவும் செய்த ஒரு மாமனிதர் ஆவார்.

அயர்லாந்தில் இவர் பிறந்தாலும் இங்கிலாந்திலேயே வாழ்ந்தார். மிகவும் துடிப்புள்ள சிறுவனாக இவர் வாழ்ந்த பராயத்தில் மிகுந்த இரக்க சிந்தையுடையவராக விளங்கினார். எதற்கும் அஞ்சமாட்டார். மெல்லிய உயரமான தோற்றம்

உடையவர். மாமிசம் உண்பதில்லை. மதுபானம் குடிப்ப தில்லை. இங்கிலாந்தில் இப்படியான ஒருவர் உள்ளவரா என்று மகாத்மா காந்தியடிகள் ஆச்சரியப்பட்ட பெருமைக்குரியவர். இவர் சிறுவயது முதல் புரட்சிக் கொள்கையை உடையவர். ஃFபியன் சொசைட்டி என்னும் சோஷலிசக் கொள்கையுடைய சங்கத்தில் அங்கத்தவராக விளங்கினார்.

20ஆவது நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்தவர். இவரது நாடகங்கள் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவை. இவரின் 'அலி த கொப்லர்' (Ali the cobbler), 'பிக்மேலியன்' (Pigmallian) என்ற நவீன நாடகங்கள் பாடசாலைகளில் உயர்வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கில இலக்கியப் பாடமாக இருக்கின்றது. முற்காலத்தில் வாழ்ந்த சீமான்களின் வாழ்க்கை நிலை, கீழ்ச்சாதி மக்களின் வாழ்க்கைநிலை, நடுத்தர மக்களின் வாழ்க்கை நிலை பற்றிய சமுதாய சீர்திருத்தங்களை, சாதிப் பாகுபாடுகளை நன்கு விளக்கி எழுதியுள்ளார். உயர் வகுப்பு மாணவர்கள் இந்த நாடகங்களை மேடைகளில் நடித்து வருகின்றனர்.

இவரது நாடகங்கள் இக்கால சமூக அமைப்புக்களைக் காட்டுவ தோடு சிறந்த மொழியாற்றல் மிகுந்தவையாக உள்ளன. இவர் ஆங்கில மொழியிலுள்ள 26 எழுத்துக்கள் போதாது. குறில் நெடில் எழுத்துக்களை உள்ளடக்கி 42 எழுத்துக்கள் ஆக்கினால் படிப்ப வர்கள் இடர்ப்படாமல் படிக்கமுடியும், என்று ஆலோசனை கூறினார். ஆனால் ஒருவரும் அதனை ஏற்று நடைமுறைப் படுத்தவில்லை.

வில்லியம் ஷேக்ஸ்பியரின் கற்பனை வளத்துக்கு ஏற்ப நாடகங்கள் எழுதாவிட்டாலும் ஷேக்ஸ்பியர் சிறந்த படைப்பாளி என்று போற்றும் குணம் படைத்தவர். இவர் வாழ்ந்த காலத்தில் தான் துப்பறியும் நாவல்கள் பல எழுதி புகழ்பெற்ற ஜி. கே. செஸ்ரன். (G.K. Chesterten) என்பவரும் வாழ்ந்தார். அவர் ஒருமுறை ஷோவைக் கண்ட பொழுது 'உமது தோற்றத்தை யாரும் பார்த்தால் இங்கிலாந்தில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதா என்று நினைப்பார்கள்' எனக் கூறிய பொழுது ஷோ கொஞ்சமும் சிரிக்காமல் 'உம்மைப் பார்த்தாலே அதற்கு விளக்கம்

கிடைத்துவிடும்' என்று பதிலளித்தார். ஏனெனில் செஸ்ரன் மிகுந்த தோற்றப் பொலிவுடையவர். இரட்டை நாடிச்சரீரம் பொருந்திய செஸ்ரன் இவரது நகைச்சுவையை நினைத்து சிரித்ததோடு அன்புடன் அவரது கைகளைப் பிடித்துக் கொண்டார்.

இன்னொரு முறை மிகுந்த அழகு வாய்ந்த பிரபல நடிகை யொருவர் இவரைப் பார்த்து 'நாம் இருவரும் திருமணம் செய்து கொண்டால் நமக்குப் பிறக்கும் குழந்தை என்னைப்போல் அழகாகவும் உங்களுடைய அறிவையும் உடையதாகப் பிறக்கும்' என்ற பொழுது ஷோ 'தற்செயலாக என்னுடைய அழகும் உம்முடைய அறிவும் பெற்றுப் பிறந்து விட்டால் என்ன செய்வது' என்று பதிலுரைத்தார்.

இவர் திருமணம் செய்து கொள்ளாமலே வாழ்ந்தார். எப்பொழுதும் நாடகங்கள் மூலம் மக்களுக்கு நல்வழி காட்டி வந்தார். இந்த மேதாவியை ஆங்கில மக்கள் வியப்போடு பார்த்தனர்.

நல்ல வெண்ணிறம் பொருந்திய தாடியுடனும் அறிவு நிறைந்த கண்களுடனும் எல்லா இடங்களுக்கும் சென்று சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்பினார். குழந்தைகளென்றால் கொள்ளைப் பிரியம் உடையவர். இவர் 92 வயது வரை வாழ்ந்ததாக அறிய முடிகிறது.

* * *

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.



## இந்நூலாசிரியர் பற்றி...

திருமதி மரகதா சிவலிங்கம் அவர்கள் இலங்கைத் தீவின் சென்னி எனப் பெயர் பெற்ற யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலிப் பகுதியில் வாழ்ந்த மலாயன் பென்ஷனியர் சரவணமுத்து அவர்களுக்கும் நல்லம்மா அவர்களுக்கும் மகளாகப் பிறந்தார்.

இவர் தமது ஆரம்பக்கல்வியை திருநெல்வேலி தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றார். பின்பு, தற்போது பல்கலைக்கழகமாக விளங்கும் பரமேஸ்வராக் கல்லூரியில் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையை எடுத்து முடித்ததும் வண்ணார்பண்ணையில் உள்ள நாவலர் பாடசாலையில் பண்டித வகுப்பில் சேர்ந்து கற்று ஆரிய, திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

இவரது துணைவர் திரு. சிற்றம்பலம் சிவலிங்கம் (வர்த்தகர், கொழும்பு) மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் தோழர். இந்நூலாசிரியர் எழுதிய சில கட்டுரைகள் மல்லிகையில் வெளிவந்துள்ளன.

தமிழின் பெருமையைப் போற்றி வளர்த்த தமிழ் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றினை வருங்காலச் சிறார்கள் அறிந்து தமது வாழ்வை வளம்படுத்த வேண்டும் என்ற பேரவாவினால் உந்தப்பட்டு ஆசிரியர் இந்நூலை எழுதியுள்ளார்.

pbd
107001022
NADARINTHA PERIYOR
Rs. 150.00

பூபாலசிங்கம் புத்தகசாலை
202, 340, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே. : 2422321, 2435713
தொ.நகல் : 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

309A-2/3, காலி வீதி, வெள்ளவத்தை தொ.பே. 4515775, 2504266
4A, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம் தொ.பே. (0)21 2226693